ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1757/19 - 2012 මැයි 11 වැනි සිකුරාදා - 2012.05.11

*1757/19 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்*

***10 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் விலக்களிப்புக் கட்டளை***

***1. விலக்களிப்பு வழங்கல்***

*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பீடு செய்யப் படும்), 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10 (1) ஆம் பிரிவினால் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்களைக் கொண்டு, இலக்கம் 125, க்லெனி வீதி, கொழும்பு 02, என்ற முகவரியில் அமைந்துள்ள ஜெய்காய் மார்க்கெட்டிங் சேர்விசஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திற்கு (இதனகத்துப் பின்னர் விலக்களிக்கப்படும் தரப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்), இந்தக் கட்டளையில் உள்ளடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைய,*

*இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 1 இல் முழுமையாக விபரிக்கப்பட்ட இலக்கம் 340, காலி வீதி, லக்ஷபதிய, மொரட்டுவை கே- சோன் சொப்பிங் மஹால் வளாகத்தினுள் மின்சாரத்தைப் பகிர்ந்தளித்து விநியோகிப்பதற்கு அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அல்லது விநியோகிப்பதற்கு என்ற வரையறுக்கப்பட்ட நோக்கம் தொடர்பில் ஒரு அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான அதன் தேவைப்பாட்டிலிருந்து இத்தால் அதனை விலக்களிப்புச் செய்கின்றது.*

***2. அங்கீகாரங்கள்***

*இவ்வாறு விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பையும் மின்சார விநியோகத்தையும் மேற்கொள்ளுவதற்கான, ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகள், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகள், மற்றும் குறித்த ஏற்பாடுகளுக்கு வரையறுக்கப்படாத விடயங்கள் என்பவற்றின் கீழ், தேவையான சகல அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

***3. விலக்களிப்பு பற்றிய நியதி***

*இத்தால் வழங்கப்படும் விலக்களிப்பானது, கீழே காணப்படும் விலக்களிப்புக் கட்டளையிலுள்ள இரத்துச் செய்தல் மற்றும் விலக்களிப்பு வாபஸ்பெறல் தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைய இரத்துச்செய்யப்படாத அல்லது வாபஸ்பெறப்படாத வரையில், 2012.01.26 ஆம் நாள் செயல்வலுப் பெறும் என்பதுடன், அந்த 2012.01.26 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ஐந்து (05) வருட காலமொன்றுக்கு முற்றிலும் செயல்வலுப் பெற்று நடைமுறையிலுமிருக்கும்.*

**4. விலக்களிப்பை இரத்துச்செய்தலும் வாபஸ்பெறுதலும்**

இந்த விலக்களிப்பானது, குறித்த சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க இரத்துச்செய்யப்படலாம் அல்லது வாபஸ்பெறப்படலாம்.

கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா,
தலைவர்,
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

***விலக்களிப்பு பற்றிய நிபந்தனைகள் :***

**நிபந்தனை 1: பொருளும் பொருள்கோடலும்**

1. முரண்பட்ட பொருள் எழாத வரையில்:

(அ) குறித்த நிபந்தனைகளில் அல்லது அட்டவணையில் பிரயோகிக்கப்பட்ட சொற்கள் அல்லது சொல்வாசகங்கள் சட்டவாக்கமொன்றிலும் மற்றும் அந்த வாசகங்களுக்கு ஏற்புடைத்தான பொருள்கோடல் சட்டங்களிலும் காணப்பட்டவாறு பொருள் கொள்ளப்படும் என்பதுடன் ;

(ஆ) ஒரு சட்டவாக்கத்திற்கான குறிப்பீடுகள், இந்த விலக்களிப்புக் கட்டளை செயல்வலுப் பெறும் நாளின் பின்னர் மேற்கொள்ளப்படும் அந்த சட்டவாக்கதின் ஏதாவது திருத்தம் அல்லது மறுசட்டமாக்கல் ஆகிய இரண்டிலும் அடிப்படையாகவும், துணையாகவும் அமைகின்ற சட்டவாக்கத்தை உள்ளடக்கியிருக்கும்.

2. முரண்பட்ட பொருள் எழாத வரையில், குறித்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது நோக்கத்தின் நிமித்தம் சட்டத்தில் தெளிவாக விவரிக்கப்பட்ட ஏதாவது சொல் அல்லது சொல்வாசகங்கள் குறித்த அட்டவணையில் அல்லது நிபந்தனைகளில் பிரயோகிக்கப்பட்ட நேரத்திலிருந்த முரணற்ற அதே கருத்தைக் கொண்டிருக்கும்.

3. நிபந்தனைகளிலும் அட்டவணையிலும் குறிப்பிடப்படாத அல்லது தேவைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் :

| | |
|---|---|
| "இணைத்தரப்பு" | விலக்களிக்கப்பட்ட தரப்பு தொடர்பில், இணைத்தரப்பு என்பது, ஒவ்வெரு விடயத்திலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது முதலீட்டுக் கம்பனி அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது துணை நிறுவனம் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் முதலீட்டுக் கம்பனியொன்றின் ஏதாவது துணை நிறுவனம் எனப் பொருள்படும். |
| "அங்கீகரிக்கப்பட்டது" | அங்கீகரிக்கப்பட்டது என்பது, 4, 9, 13, 16, 19 மற்றும் 20 ஆம் நிபந்தனைகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும். மேலும் "அங்கீகாரம்" என்ற பதமும் அதையொத்த ஒரு கருத்தையே கொண்டிருக்கும். |
| "அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு " | அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியானவொரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும். |
| "மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை" | மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை என்பது, பிரதானமாக மேன்தலை மின்சார மார்க்கங்கள், நிலகீழ் கேபல்கள், மின்சார சேவை மார்க்கங்கள், மின்மாற்றிகள், மாணி வாசிப்புக் கருவிகள், மற்றும் வடிவமைக்கப்பட்ட 33kv (பேசஸ் கடத்திகளுக்கு இடையில்) அல்லது அதற்குக் குறைவான மின்விசை அடங்கிய ஏனைய துணை |

மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன உள்ளிட்ட விலக்களிக்கப்பட்ட தரப்புக்குச் சொந்தமானதும், அந்தக் குறித்த தரப்பினால் இயக்கப்படுகின்றதுமானவொரு மின்சார முறைமையைப் பயன்படுத்துகின்றவொரு மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து அல்லது மின்னுற்பத்திப் பொறித்தொகுதி களிலிருந்து அல்லது ஏனைய கொள்வனவுப் புள்ளிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப் படுகின்ற மின் சக்தியை, 33kV அல்லது அதற்குக் குறைவான மின் விசையொன்றில் மின்சார விநியோகத்தைப் பெறுவதற்கு விருப்பமுடைய முடிவுப் பயனரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குநர்களின் மின்சார விநியோக இடங்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கான மின்சார அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினது அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கை எனப் பொருள்படும்.

"விலக்களிக்கப்பட்ட தரப்பு" — மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கவும் விநியோகிக்கவும் அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்க அல்லது விநியோகிக்க குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு" — மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு என்பது, மின்சார பகிர்ந்தளிப்பு நடவடிக்கையில் அல்லது மின்சார விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் ஏதேனுமொரு தரப்பு எனப் பொருள்படும்.

"முதலீட்டுக் கம்பனி" — முதலீட்டுக் கம்பனி என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தினுள் வரும் ஒரு கம்பனி எனப் பொருள்படும்.

"விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை" — விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமை என்பது, இதற்கான அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட வளாகத்தினுள், மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து பாகமாக உருவாகுகின்ற மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த, ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் பாகமெனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற அந்தத் தரப்புக் கொண்டிருக்கலாம் எனும் ஏதாவது பிற மின்சார மார்க்கங்களும், வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்லப் பயன்படுகின்ற விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது மின்பொறித்தொகுதி, மாணிவாசிப்புக் கருவிகள், மின்மாற்றிகள் மற்றும் ஆளிப்பலகை உந்துகை என்பன உள்ளடங்கலாக விலக்களிக்கப்பட்ட தரப்பின் சகல மின்சார மார்க்கங்களும் எனப் பொருள்படும்.

"அனுமதிப்பத்திரத் திருத்தம்" — அனுமதிப்பத்திரத் திருத்தம் என்பது, அதில் சேர்த்தல், நீக்குதல், திருத்துதல் மற்றும் பிரதியீடு செய்தல் எனப் பொருள் படும். மேலும் அதற்கிணங்க ஒரே வகையான சொல்வாசகங்கள் பொருள் கொள்ளப்படவும் வேண்டும்.

"இபொபஆச" — இபொபஆச என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்.

"சம்பந்தப்பட்ட நிறுவனம்" — சம்பந்தப்பட்ட நிறுவனம் என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள் வரும் ஏதாவது ஒரு நிறுவனம் எனப் பொருள்படும்.

"பிரதிநிதித்துவம்" — இங்கு பிரதிநிதித்துவம் என்பது, எழுத்தில் விடுக்கப்படும் ஏதேனும் ஆட்சேபனை அல்லது பிரேரணை எனப் பொருள்படும்.

"துணை நிறுவனம்" இதற்கு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தில் வழங்கப்பட்ட பொருளுண்டு. மேலும், அதற்கிணங்கவே "துணை நிறுவனங்கள்" வரைவிலக்கணப்படுத்தப்படவும் வேண்டும்.

"மின்சார செலுத்துகைக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு" மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (இ) (i) (ஆ) பிரிவின் கீழ், மின்சார செலுத்துகைக்கான ஒரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார செலுத்துகை முறைமை" மின்சார செலுத்துகை முறைமை என்பது, பாரியளவில் மின்சாரத்தை நுகரும் கட்டிட வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படும் (ஆனால் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் ஏதாவது பாகமாக வருகின்ற அத்தகைய ஏதேனும் மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த) சகல மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்கள் அடங்கலாக, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து உப-மின் நிலையமொன்றுக்கு, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து மற்றுமொரு மின்னுற்பத்திப் பொறித் தொகுதிக்கு அல்லது உப-மின் நிலையமொன்றிலிருந்து மற்றுமொரு உப-மின் நிலையத்திற்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படுகின்ற மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்களையும், மின் பொறித்தொகுதியையும் (முழுமையாக அல்லது பிரதானமாக) கொண்டிருக்கின்ற மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினால் இயக்கப்படுகின்ற அந்தத் தரப்புக்கு உரித்தான மின்சார முறைமை எனப் பொருள்படும்.

4. குறிப்பீடு செய்யப்படாத வரையில்:

(அ) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு நிபந்தனைக்கான அல்லது இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு அட்டவணைக்கான ஏதாவதொரு குறிப்பானது, முறையே இந்த விலக்களிப்புக் கட்டளையில் இலக்கம் குறிக்கப்பட்ட நிபந்தனைக்கான அல்லது அட்டவணைக்கான ஒரு குறிப்பாக விளங்கும்.;

(ஆ) இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கான ஏதாவதொரு குறிப்பானது, குறிப்பு நிகழும் அட்டவணையிலுள்ள அந்த இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கானவொரு குறிப்பாக விளங்கும்.

(இ) இலக்கம் குறிக்கப்பட்டவொரு பந்திக்கான ஏதாவதொரு குறிப்பானது, அந்தக் குறிப்பு நிகழும் நிபந்தனையில் அல்லது வாசகத்தில் இலக்கம் குறிக்கப்பட்ட பந்திக்கானவொரு குறிப்பாக விளங்கும்.

அத்தகைய வித்தியாசத்தை, குறைநிரப்பலை அல்லது மீள்நிரப்பலை வரையறுக்கின்ற ஏதேனுமொரு ஏற்பாட்டிற்கு முரணற்ற விதத்தில், ஏதேனுமொரு ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, (இந்த விலக்களிப்புக் கட்டளை தவிர்ந்த), விதிமுறைக்கான அல்லது பிற பத்திரத்திற்கான ஏதேனுமொரு குறிப்பானது, அத்தகைய ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, விதிமுறைக்கான அல்லது அவ்வப்பொழுது வேறுபடுகின்ற, குறைநிரப்பப்படுகின்ற அல்லது மீள்நிரப்பப் படுகின்ற பிற பத்திரத்திற்கான குறிப்பொன்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

5. ஏதாவது ஒரு பகுதியின், நிபந்தனையின், அட்டவணையின் அல்லது பந்தியின் தலையங்கம் அல்லது தலைப்பு அதன் கட்டமைப்பைப் பாதிக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும்.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதேனுமொரு கடப்பாட்டை, குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கால வரையறையினுள் நிறைவேற்றுமாறு தெரிவிக்கப்படுமிடத்து, விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கால வரையறையினுள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால் (ஆனால், குறித்த கால வரையறையினுள் விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறியமை தொர்பில் நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படுவதன் பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு கிடைக்கக் கூடிய அனைத்து உரிமைகளுக்கும் பரிகாரங்களுக்கும் முரணற்ற விதத்தில்) குறித்த கடப்பாடானது, குறித்த கால வரையறையின் பின்னரும் கூட தொடர்ந்தும் கடப்பாடுடையதாகவும், செயலாக்கக் கூடியதாகவுமிருக்கும்.

7. குறித்த சட்டத்திற்கும் இந்த விலக்களிப்புக் கட்டளைக்கும் இடையே ஏதாவது முரண்பாடு நிலவுமாயின், இந்தச் சட்டம் அத்தகைய ஏதாவது முரண்பாடளவுக்கு மேலோங்கி நிற்கும். இந்தச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள், குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விலக்களிப்புக் கட்டளையின் முழுமையானவொரு பாகமாகவுமிருக்கும்.

**நிபந்தனை 2: ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு தேவைப்படுத்தலாமெனும் தகவல்களை, ஆணைக் குழு தேவைப்படுத்தும் விதத்திலும், குறிப்பிடும் காலங்களிலும் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளின் விளக்கத்தில், குறித்த சட்டத்தின் கீழ் அல்லது இபொபஆ சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது மாற்றி ஒப்படைக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் அறிக்கைகளையும் தேடி முனைந்து வழங்கவும் வேண்டும்.

2.1 ஆம் பந்தியின் பொதுக் கோட்பாட்டுக்கு முரணற்ற வகையில், தயாரிக்கப்பட்டு வழங்கப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கணக்கீட்டுத் தகவல்களை விட மிக விரிவான, அல்லது வித்தியாசமான தகவல்களை தனக்கு வழங்குமாறு ஆணைக்குழு அறிவிக்கலாம்.

3.1 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல்களை அழைப்பதற்கான ஆணைக்குழுவின் அதிகாரத் தத்துவமானது, இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது பிற நிபந்தனையின் கீழும் அல்லது அந்த நிபந்தனைக்கு இணங்கவும் அல்லது குறித்த சட்டத்தின் கீழும், இபொபஆ சட்டத்தின் கீழும் அல்லது அந்தச் சட்டங்களுக்கு இணங்கவும், அல்லது பிற சட்டவாக்கத்தின் கீழும் அல்லது அதற்கு இணங்கவும் தகவல்களை அழைப்பதற்கான தனது அதிகாரத்தத்துவத்திற்கு முரணற்றதாகவிருத்தல் வேண்டும்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த விலக்களிப்பைப் பெற்று ஒரு மாத காலத்திற்குள், மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கைக்குப் பொறுப்பாக, தனது நிறுவனத்தில் ஒரு நபரை நியமிக்க வேண்டும்.

5. இந்த நிபந்தனையில் :

"தகவல்" என்பது, ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில், ஏதாவது விபரங்களை உள்ளிட்ட ஏதாவது புத்தகங்கள், ஆவணங்கள், பதிவுகள், கணக்குகள், மதிப்பீடுகள், விபரத் திரட்டுக்கள் அல்லது அறிக்கைகள் (குறிப்பாக ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத) எனப் பொருள்படும்.

**நிபந்தனை 3: ஆணைக்குழுவின் தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டிகள் மற்றும் நிர்ணயங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, விலக்களிப்புக் கட்டளைக்கு இணங்க, ஆணைக்குழு மேற் கொள்ளலாமெனும் ஏதாவது தீர்மானங்களுக்கும், கட்டளைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

2. அத்தகைய கட்டளைகளுக்கும், தீர்மானங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இணங்க சம்பந்தப்படுகின்ற ஏதாவது கிரயங்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு பொறுப்பேற்க வேண்டும்.

3. ஆணைக்குழு ஏதாவது கட்டளையை அல்லது தீர்மானத்தை வெளியிட்டால், விலக்களிக்கப்பட்ட தரப்பு அவற்றுக்கு இயைந்தொழுகி, ஆணைக்குழு தேவைப் படுத்துகின்ற விதத்தில் தனது ஆதனத்தை அணுக அல்லது கட்டுப்படுத்த ஆணைக்குழுவை அல்லது ஆணைக்குழுவின் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது பிற அதிகாரியை அல்லது நபரை அனுமதிக்க வேண்டும்.

**நிபந்தனை 4: தொழில்நுட்ப மற்றும் இயக்க விதிக்கோவைகளுடனான இணக்கப்பாடு**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், அவ்வப்பொழுது ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு, குறித்த தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளை, ஆணைக் குழு பொருத்தம் எனக் கருதும் ஏதாவது மின்சாரப் பணிகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்களுடனான ஆலோசனையுடன் தயாரித்துச் செயற்படுத்த வேண்டும்.

2.1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகள், செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. விலக்களிக்கப்பட்ட தரப்பு, உரிய தொழில்நுட்ப இயக்க விதிக்கோவையில் குறிப்பீடு செய்யப்பட்ட திருத்தல் நடவடிக்கைக்கு இணங்க, உரிய நேரத்தில் செயல்வலுப் பெறும் ஒரு விதிக்கோவைக்கான தனது திருத்தங்களை ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதன் மூலம் முன்மொழியலாம்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த நிபந்தனைக்கு இணங்க, தான் தயாரித்துச் செயற்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட சகல தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளினதும் பிரதிகளை (இதற்கான ஏதாவது திருத்தங்களுடன்):

(அ) ஆணைக்குழுவுக்கும்,
(ஆ) அதனைத் தேவைப்படுத்தும் எவரேனுமொரு நபருக்கும்

வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 (ஆ) பந்திக்கு இணங்க தான் வழங்குகின்ற அல்லது அனுப்பி வைக்கின்ற ஏதாவது விதிக்கோவையின் பிரதியொன்று தொடர்பில், ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில், இந்த நிபந்தனையின் நோக்கங்கள் தொடர்பில் தற்காலிகமாக குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது கட்டணத் தொகையை விஞ்சாதவொரு கட்டணத் தொகையை அறவிடலாம். விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதில் தனக்கு ஏற்புடையது எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளின் ஏற்பாடுகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

6. மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஏதாவது நிறுவனங்களிலிருந்து உரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் கிடைக்கும் ஆலோசனையைத் தொடர்ந்து, ஆணைக்குழு, விலக்களிக்கப்பட்ட தரப்பை 6 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிக்கின்ற, பொருத்தம் எனக் கருதும் வழிகாட்டல்களை, ஆணைக்குழு நிர்ணயிக்கலாமெனும் நிபந்தனைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, அந்த வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாமெனும் அளவுக்கு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளின் குறித்த பாகம் அல்லது பாகங்கள் தொடர்பில் கட்டளைகளை வெளியிடலாம்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுக் கிடைக்கச் செய்யப்படும் காலம் வரை, சகல செயற்பாடுகள் தொடர்பிலும், ஏற்கனவேயிருக்கின்ற தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.

**நிபந்தனை 5 : ஏனைய ஒப்பந்தங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு உரிய அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுடன் மின்சார இணைப்பு மற்றும் வரித்தீர்வை ஒப்பந்தங்கள் உள்ளிட்ட, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்ற பிற நபர்களுடனான ஏதாவது ஒப்பந்தங்களுக்குள்ளாக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பங்குபற்றத் தேவைப் படுத்தப்படும்.

3. ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டவொரு ஒப்பந்தத்திற்கு, விலக்களிக்கப்பட்ட தரப்பு உள்ளாகத் தவறியுள்ளது என உரிய நோக்கத்தின் நிமித்தம் நியாயமென ஆணைக்குழுவுக்குத் தோன்றுமொரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர், ஆணைக்குழு, அத்தகைய தரப்பினது அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினது விண்ணப்பத்தின் பேரில், பிணக்கிலிருக்கும் தரப்புக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் இடையில் ஒப்பந்த விதிமுறைகளில் நிலவும் ஏதாவது முரண்பாட்டை ஆணைக்குழுவுக்கு நியாயம் எனத் தோன்றுமொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 6 : விலக்களிப்புக் கட்டளையும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை உரிமை மாற்றலும்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக் குழுவின் முன்கூட்டிய எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையை முழுமையாக அல்லது பாகமாக சாட்டக் கூடாது.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை முழுமையாக அல்லது பாகமாக மற்றொரு தரப்புக்கு ("உரிமை மாற்றிப் பெறுபவர்") உரிமை மாற்றக் கூடாது.

3. இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது சாட்டுதல் பணிக்கான அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையின் உரிமை மாற்றத்திற்கான ஆணைக்குழுவின் ஏதாவது அனுமதியானது, சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு அல்லது உரிமை மாற்றிப் பெறுபவருக்கு, இந்த விலக்களிப்புக் கட்டளையின் நிபந்தனையை அனுசரிக்கும் வகையில், தொழில்நுட்ப, நிதி ஆற்றல் காணப்படுகின்றது என ஆணைக்குழு திருப்திப்படுகின்றது என்பதற்கு அமைவாகவும், ஒரு உரிமை மாற்றம் எனின் மாத்திரம், விலக்களிப்புக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கும் உரிமை மாற்றிப் பெறுபவர், ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் பட்சத்தில், குறித்த சட்டத்திற்கு இணங்க, இந்த விலக்களிப்புக் கட்டளையின் திருத்தம் அடங்கலாக, ஆணைக்குழு அவசியம் என நிர்ணயிக்கும் ஏதாவது ஏனைய விடயங்களை, சாட்டுதல் பணியை ஏற்பவர் அல்லது உரிமை மாற்றிப் பெருபவர் அனுசரித்து நடப்பார் என்பதற்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

*4.* இந்த நிபந்தனையில் எதுவும், அத்தகைய சாட்டுதல் பணிக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கிய பட்சத்தில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட பின்னர் சாத்தியமான விதத்தில் உடனடியாக அத்தகைய உரிமை மாற்றம் செயல்வலுப் பெறும் என்ற அடிப்படையில், விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை, ஒரு சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு உரிமை மாற்றிக் கையளிப்பதைத் தடுக்கக் கூடாது.

**நிபந்தனை 7 : விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்தல் அல்லது வாபஸ்பெறுதல்**

*1.* பின்வரும் சந்தர்ப்பங்களில், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க, ஆணைக்குழு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய வேண்டும் என ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்து உடன்படும் பட்சத்திலும் ;

(ஆ) இந்தக் கட்டளையின் 2 ஆம் நிபந்தனையின் கீழ், ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் ஒரு கட்டளையை அல்லது பணிப்புரையை, விலக்களிக்கப்பட்ட தரப்பு, அந்தக் கட்டளை அல்லது பணிப்புரை விடுக்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அந்தக் கட்டளையில் அல்லது பணிப்புரையில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாம் எனும் அத்தகைய நீடிக்கும் காலத்தினுள், குறித்த கட்டளையை அல்லது பணிப்புரையை அனுசரிக்கத் தவறும் பட்சத்திலும் ;

(இ) இல்லையெனில்.

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிலவும் பட்சத்திலும்:,

(ii) மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை இயக்குவதற்கு புதிய பங்குதாரர் அல்லது அந்தப் புதிய பங்குதாரரினால் (ஏதாவது பங்குதாரர் இருப்பின்) நியமிக்கப்பட்ட நிறுவனம் ஆகிய இரு தரப்புகளுக்குமே, விலக்களிக்கப்பட்ட தரப்பின் பங்குவகித்தலின் அளவுப் பரிமாணத்தைக் கருத்திற் கொண்டு, அந்த மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் போதிய தொழில்நுட்பம், நிதி அல்லது முகாமைத்துவம் சார்ந்த ஆற்றலில்லை என ஆணைக்குழு திருப்திப்படும் பட்சத்திலும்:,

(iii) இந்தப் பந்திக்கு இணங்க, ஆணைக்குழு இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய உத்தேசிக்கின்றது என அறிவித்து விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அறிவித்தலை விடுத்து, அந்த அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியைக் கொண்டு ஆரம்பமாகும் மூன்று மாத காலத்திற்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றவாறு விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் மேலும் மாற்றம் நிகழாத பட்சத்திலும்:, மற்றும்

(iv) அந்தக் காலப் பகுதியில் மேலும் மாற்றம் நிகழாது எனும் பட்சத்திலும்:,

(ஈ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்த பின்னரும் முடியுமான வரை உடனடியாக விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவுக்கு அந்த மாற்றம் பற்றி அறிவிக்கத் தவறும் பட்சத்திலும் ;

(உ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொடர்ச்சியாக ஒரு 03 மாத காலத்திற்கு, அதாவது ஆணைக் குழு அதன் தனித் தற்றுணிவில், சகல சந்தர்ப்பங்களிலும் நியாயம் எனக் கருதி, அவ்வாறு அத்தகைய நீடிக்கும் காலத்தைப் பிரதியீடு செய்யும் நிலையில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்த நிகழ்வுகளின் பயனாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என ஆணைக்குழு திருப்திப்படும் சந்தர்ப்பம் தவிர, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை நிறுத்தும் பட்சத்திலும் ;

(ஊ) விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்கிய எந்தத் தகவல்களின் அடிப்படையில் இந்த விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்ததோ அந்தத் தகவல்கள் கணிசமானளவில் தவறானவை அல்லது பொய்யானவை எனக் காணப்படும் பட்சத்திலும் ;

(எ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவதொரு நிபந்தனையை விலக்களிப்பட்ட தரப்பு மீறும் /அல்லது முறிக்கும் பட்சத்திலும் ;

இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்யலாம்.

**நிபந்தனை 8 : சுற்றாடல்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, இலங்கையில் ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்களுக்கும், அத்தகைய சுற்றாடல் சட்டங்களின் கீழ், அனுசரிக்கும் முகமாக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வழங்கப்படலாமெனும் ஏதாவது விலக்களிப்புக் கட்டளைகளுக்கு அல்லது கருணைக் காலங்களுக்கு அமைய இயைந்தொழுதிக வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக்குழுவுடனான ஆலோசனையில் விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்கங்களின் கீழுள்ள தனது கடமைகளையும் கடப்பாடுகளையும் அனுசரிக்கும் வகையில், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு முன்வைக்கும் விதத்தில் எழுத்திலான ஒரு கொள்கையைத் தயாரித்து, அவ்வப்பொழுது திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும்.

*3.* ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய காலங்களில், அத்தகைய படிவத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பு தனது சுற்றாடல் செயலாற்றுகை பற்றி வருடா வருடம் ஆணைக் குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

*4.* இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் நோக்கங்களுக்கான "சுற்றாடல் சட்டங்கள்" என்பது, சுற்றாடலில் தங்கியிருக்கின்ற தாவர இனங்கள், விலங்கு இனங்கள், மானிட சுகாதாரம், மற்றும் உயிரியல் சுற்றாடல் முறைமைகள் என்பவற்றின் பாதுகாப்பு உள்ளிட்ட, சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக உள்ளடக்க வேண்டுமெனும், ஆனால் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசியச் சுற்றாடல் சட்டத்திற்கு வரையறுக்கப்படாத சுற்றாடல் பாதுகாப்புத்தான் நோக்கம் என்ற அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்டங்களும், சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் வளி, நிலம், நீர் ஆகியவற்றின் பாதுகாப்பு சம்பந்தமான பொருத்தமான சகல சட்டவாக்கங்களும் எனப் பொருள்படும்.

***நிபந்தனை 9: சுகாதாரமும் பாதுகாப்பும்*** :

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளுகின்ற நேரம் ஏற்படலாமெனும் உடற்காயங்களிலிருந்து நபர்களையும், பாதிப்புகளிலிருந்து பொறித்தொகுதிகளையும், ஆதனங்களையும், உபகரணங்களையும் பாதுகாப்பதற்கு, கீழ் காணும் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல் அடங்கலாக சகல நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக் குழுவுடனான ஆலோசனையில் ஒரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டத்தை அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் ;

(ஆ) அந்தத் திட்டத்தின் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாட்டை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, தேவையாயின் அந்தத் திட்டத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தி, இற்றைப்படுத்தி அங்கீகாரத்திற்காக ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவும் வேண்டும் ;

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு (அவ்வப்பொழுது இற்றைப்படுத்தப் பட்டவாறான) குறித்த திட்டத்தை அனுசரித்து நடக்க வேண்டும் ;

(ஈ) ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி குறித்த திட்டத்தைத் திருத்தக் கூடாது ;

(உ) குறித்த திட்டத்தின் கீழுள்ள கடப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு, வருடாந்தக் கணக்காய்வு ஆணைக்குழு அங்கீகரிக்கும் சுயாதீன நிபுனர் ஒருவரினால் குறித்த திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் ;

(ஊ) ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்படும் சுகாதாரப் பாதுகாப்பு சம்பந்தமான புள்ளிவிபரங்களையும் சுட்டிகளையும் தொகுத்து வழங்க வேண்டும் ;

(எ) அந்தக் கணக்காய்வுகளினதும், புள்ளிவிபரங்களினதும், சுட்டிகளினதும் பெறுபேறுகள் பற்றி உடனே ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

***நிபந்தனை 10: காப்புறுதி***

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை சம்பந்தமான ஆபத்துக்களின் முகாமைத்துவமும் காப்புறுதியும் தொடர்பில் நியாயமான, நுட்பமான கொள்கைகளைப் பின்பற்றி, அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

***நிபந்தனை 11: இரகசியத் தகவல்கள்***

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் அதற்குக் கிடைத்த சகல தகவல்களும்:

(அ) பணிப்பாளர்களுக்கு, அலுவலர்களுக்கு, ஊளியர்களுக்கு, அல்லது இந்த இரகசியத் தன்மையின் தேவைப்பாட்டை அவதானிக்கும் பொருட்டு எழுத்தில் உடன்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட தரப்பின் முகவர்நிலையத்திற்கு தமது சட்டபூர்வத் தொழிற்பாடுகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற அத்தியாவசியமான இந்த விலக்களிப்பு அல்லது அனுமதிக்கப்பட்ட ஏதாவதொரு செயன்முறை விதிக் கோவை மற்றும் அத்தகைய இரகசியத் தகவல்களுக்கான அணுகுமுறை ஆகிய அம்சங்கள் ஆணைக்குழு அனுமதித்தவாறு, இல்லையெனில் புறம்பாக விலக்களிக்கப் பட்ட தரப்பினால் இரகசியமாகப் பேணப்படுகின்றனவா என்பதையும் ;

(ஆ) இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது அனுமதிக்கப்பட்ட ஒரு செயன்முறை விதிக்கோவையினால் அனுமதிக்கப்பட்ட ஒரு நோக்கத்திற்காக அல்லது தகவல்கள் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக அன்றி ஏதாவதொரு பிற நோக்கத்திற்காகப் பயன் படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும் ;

(இ) இந்த அனுமதிக்கப்பட்ட மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையில் அடங்கிய ஒரு சேவை தவிர ஏதாவதொரு சேவையின் ஏற்பாட்டில் ஏதாவதொரு வர்த்தக அனுகூலத்தின் நிமித்தம் பயன்படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும்

உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

***நிபந்தனை 12: பிணக்குகள் தீர்த்தல்***

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஒரு வரித்தீர்வை வாடிக்கையாளருக்கும், தனக்கும் இடையில் எழுகின்ற தீர்க்க இயலாதவொரு பிணக்கை இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யலாம் ;

(ஆ) இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்க்க இயலாதவொரு பிணக்கை 1 (அ) பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டவொரு பிணக்குத் தவிர்ந்த) அத்தகைய விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் 1995ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்திற்கு இணங்க குறித்த பிணக்கைக் குறிப்பீடு செய்யுமாறு பணிக்கப்படும் நடுத்தீர்ப்புக் குழுவுக்கு அல்லது நீதிமன்றத்திற்கு குறிப்பீடு செய்யலாம்.

***பாகம் III மின்சாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான விஷேட நிபந்தனைகள்***

***நிபந்தனை 13: விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - விதிமுறைகளை விதிப்பதற்கான தேவைப்பாடு***

*1.* 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பில் ஒரு விண்ணபத்தை சமர்ப்பித்துள்ள, விலக்களிப்புக் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் ஏதாவது உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் மின்சார இணைப்பை வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும்:,

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான ஒரு மின்சார இணைப்பை மாற்றுவதற்காக ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள ஏதாவது தரப்புடன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கானவொரு மின்சார இணைப்பை மாற்றுவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும்.

உள்ளாக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை சாத்தியமான முறையில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஒப்பந்தமொன்று தொடர்பில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், விதி முறைகளை வகுத்தமைக்கும் நோக்கங்களுக்காக நியாயமான விதத்தில் தேவைப் படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளிட்டவொரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் விதிமுறைகளை வகுத்தமைக்க வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனின் பயனாகவும், ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படுவதற்கென நியாயமான ரீதியில் உத்தேசிக்கப்பட்ட பாவனையின் பயனாகவும், குறிப்பீடு செய்யப்பட்ட அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் எவரேனுமொரு உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் ஒப்பந்தத்திற்குள்ளாகக் கடமைப்படுத்தப்பட மாட்டாது. எனினும், விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதன் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்குமாறு அல்லது மீளப் பலப்படுத்துமாறு தேவைப் படுத்தப்படும் பட்சத்தில், அந்தத் தரப்பு அவ்வாறு செய்யவில்லை எனில், சகல சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, பொது மக்களின் நலன் கருதி அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்க அல்லது மீளப் பலப்படுத்தத் தேவைப் படுத்தப்படலாம்.

4. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த மின்சார இணைப்பானது அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் பாதுகாப்புக்கும் ஸ்தீரத்தன்மைக்கும் ஆபத்தாக அமையுமென்றிருக்குமிடத்து, மின்சார இணைப்பை மேற்கொள்கின்ற அந்தத் தரப்புடன் ஏதாவது ஒப்பந்தத்திற்குள்ளாகுமாறு கடமைப்படுத்தப்பட மாட்டாது.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப அல்லது இயக்க விதிக்கோவைகளை அல்லது:,

(ஆ) குறித்த சட்டத்தை அல்லது குறித்த சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளை:, அல்லது

(இ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு ஏற்புடைய பாதுகாப்பு விடயத்துடன் அல்லது நியமங்களுடன் தொடர்புடைய ஏதாவது சட்டவாக்கத்தை:, அல்லது

(ஈ) ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஏதாவது பிற நிபந்தனைகளை மீறுவதற்கு அநேகமாக அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை ஆளாக்கும் ஏதாவதொரு தரப்புடன் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகக் கூடாது.

6. 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஏதாவதொரு தரப்புடன் ஒப்பந்தத்திற்கு உள்ளாகுவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு மறுக்குமிடத்து, முடியுமான வரையில் சாத்தியமான முறையில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், அந்தத் தரப்பிடமிருந்து ஒரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அந்தத் தரப்புக்கு அறியப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 14: விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள்**

1. குறித்த நோக்கம் தொடர்பில் நியாயமானதாக அமைய வேண்டும் என ஆணைக்குழுவுக்குத் தென்படுகின்ற ஒரு காலப் பகுதியின் பின்னர், 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, ஒரு விண்ணப்பத்தைத் தொடர்ந்து, அதற்கு உரித்தான அல்லது உரித்தெனக் கோருகின்ற ஏதாவதொரு தரப்புடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு ஒரு ஒப்பந்தத்திற்கு உள்ளாகத் தவறியுள்ளது என்றிருந்தால், ஆணைக்குழு, அத்தகைய தரப்பின் அல்லது அந்த விலக்களிக்கப் பட்ட தரப்பின் விண்ணப்பத்தின் பேரில், பிரச்சினைக்குரிய குறித்த தரப்புக்கும், விலக்களிக்கப் பட்ட தரப்புக்கும் இடையில் பிணக்கிலுள்ள ஏதாவது ஒப்பந்த நிபந்தனைகளை, நியாயமானதாகவிருக்கும் எனத் தனக்குத் தோன்றுகின்றவொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

2. ஆணைக்குழுவினால் தீர்த்து வைக்கப்பட்டவாறு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏதாவது தனது நடவடிக்கையைத் தொடர விரும்பினால், விலக்களிக்கப்பட்ட தரப்பு தாமதியாது உடனடியாக அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகி அதன் விதிமுறைகளுக்கு இணங்க அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு அல்லது 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பான அல்லது மின்சார இணைப்பு மாற்றம் தொடர்பான ஒரு ஒப்பந்தத்திற்கான தரப்புகளில் ஏதாவதொரு தரப்பு, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில் அத்தகைய ஒப்பந்தத்தின் ஒப்பந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசித்தால், அத்தகைய ஒப்பந்தத்திற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது அல்லது பிற தரப்பினது வேண்டுகோளின் பேரில், ஆணைக்குழு, தனக்கு நியாயம் எனத் தென்படும் ஒரு விதத்தில், அத்தகைய மாற்றம் தொடர்பில் நிலவும் ஏதாவது பிணக்கைத் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 15: விலக்களிக்கப்பட்ட தரப்பினது பகிர்ந்தளிப்பு முறைமைக்கு பாரபட்சமற்ற முறையில் மின்சார இணைப்பை வழங்குதல்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு மின்சார இணைப்பை வழங்கும் அல்லது அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பை நிறுத்தும் நோக்கத்திற்கான பணிகளை மேற்கொள்வதில், விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் ;

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஏதேனும் துணை நிறுவனத்திற்கு அல்லது மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்கு மற்றும் எவரேனும் நபருக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் பாரபட்சம் காட்டக் கூடாது.

**நிபந்தனை 16: விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் அடிப்படை**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்வில், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்ற பின்னர், 28 நாட்களுக்குள், அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்ற அடிப்படையை எடுத்துரைக்கின்றதும், அந்த மின்சார இணைப்பு தொடர்பில் பிணை வைப்புகளைத் தேவைப் படுத்துகின்றதுமானவொரு கூற்றைத் தயாரித்து ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழமையாக மீளாய்வுக்கு உட்படுத்தலாம். அதே நேரம் 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றுப் படிவத்தை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த விலக்களிப்புக் கட்டளை செல்லுபடியாகும் காலத்தில், ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் திருத்தத்திற்கும் உட்படுத்தலாம். கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் தொடர்ந்தும் சகல விதத்திலும் செவ்வையாக அமைய வேண்டும் என்பதற்காக அத்தகைய தகவல்களை மீளாய்வு செய்யலாம்.

*3.* அட்டவணை 1 இல் விவரிக்கப்பட்ட வளாகத்தினுள் ஒரு மின்சார விநியோகத்தைத் தேவைப் படுத்துகின்ற ஒரு தரப்புக்கு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் ஏதாவதொரு மின்சார விநியோகம் வழங்கப்படுமிடத்து, மின்சார விநியோகத்தை வழங்குவதில் தனக்கு நியாயமாக ஏற்பட்ட அத்தகைய அளவுக்கு, செலுத்தப்பட வேண்டிய, மின்சார விநியோகத்தை வழங்குவதில் ஏற்பட்ட ஏதாவது செலவை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்தும் தரப்பைச் செலுத்துமாறு தேவைப் படுத்தலாம்.

*4.* விலக்களிக்கப்பட்டவொரு தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, ஆகக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஏதாவதொரு தரப்பைக் கோரலாம்.

இந்த நிபந்தனையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதாவதொரு தரப்பினால் அத்தகைய பிணை வழங்கப்படவில்லை அல்லது அத்தகைய தரப்பினால் வழங்கப்பட்ட பிணை போதுமானதாகக் காணப்படவில்லை என்னுமிடத்து:-

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, அதாவது ஆகக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை அத்தகைய அறிவித்தலின் பின்னர் ஏழு நாட்களுக்குள் வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் குறித்த தரப்பைக் கோரலாம் ;

(ஆ) குறித்த தரப்பு அத்தகைய பிணையை வழங்கத் தவறும் பட்சத்தில், அந்தத் தவறுகை தொடர்ந்துமிருக்கும் வரை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார இணைப்பை வழங்க மறுக்கலாம் அல்லது மின்சார விநியோகத்தைத் துண்டிக்கலாம்;

(இ) விலக்களிக்கப்பட்டவொரு தரப்புக்கு, இந்த நிபந்தனைக்கு இணங்க பிணை வழியில் ஏதாவதொரு பணத் தொகை வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பணத் தொகை விலக்களிக்கப்பட்ட தரப்பின் கைவசமிருக்கும் காலம் தொடர்பில், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அவ்வப்பொழுது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் நிர்ணயிக்கப் படலாமெனும் அத்தகைய வீதத்தில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பணத் தொகை மீதான வட்டியைச் செலுத்த வேண்டும்.

*5.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றினதும் இன்னும் 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் ஒவ்வொரு திருத்தத்தினதும் பிரதியை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு திருத்தத்திற்கும் ஆணைக் குழுவின் அங்கீகாரம் அவசியம் என்பதுடன், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வரை அத்தகைய திருத்தம் செயல்வலுப் பெற மாட்டாது.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பு, அத்தகைய கூற்றின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் நபருக்கு, 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கூற்றின் அல்லது (விடயம் இவ்வாறிருக்கலாம் எனும் நிலையில்) அத்தகைய பந்திக்கு இணங்க ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் புதிய திருத்தத்தின் பிரதியை வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 ஆம் பந்திக்கு இணங்க தான் வழங்கிய அல்லது அனுப்பி வைத்த ஏதாவதொரு கூற்றின் பிரதி தொடர்பில், இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் தொகையை விஞ்சாத, அத்தகையதொரு கூற்றின் பிரதியை வழங்கும் விலக்களிக்கப்பட்ட தரப்பினது நியாயமான ஆகுசெலவை ஈடுசெய்யக்கூடியவொரு கட்டணத் தொகையை அறவிடலாம்.

**நிபந்தனை 17: மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுக்கும், மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையில் இயற்கையாகவே நிலவுகின்ற தொழில்நுட்பமும் தொழில்நுட்பம் சாராததுமான இழப்பீடுகள் ;

(ஆ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு இணைக்கப்பட்டிருக்கின்ற மின்பிறப்பாக்கிகளின் (ஏதுமிருப்பின்) மூலம் வழங்கப்படுகின்ற மின்சக்தி ;

(இ) புதிதாக வழங்கப்படும் மின்சார இணைப்புகளின் தாக்கம் ;

(ஈ) கேள்வி முகாமைத்துவத்தின் தாக்கம் ;

(உ) வித்தியாசமான நுகர்வோர் வகுதிகளினது மின்பளு சிறப்பம்சங்கள் ஆகிய விபரங்கள் உள்ளிட்ட, மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்தும் அத்தகைய தேவைப்பாட்டு கேள்விசார் குறிப்பிலிருந்தும் வரும் தனது சக்திக்கான எதிர்காலத் தேவைப்பாட்டை எதிர்வுகூறப் போதிய பதிவுகளைப் பேண வேண்டும்.

2. முழு மின்சார முறைமையினதும் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாடு, ஒருங்கிணைந்த அபிவிருத்தி, உள்ளக–இயக்கத்திறன் என்பவற்றைப் பேணுவதற்கும், அவற்றை உறுதிசெய்து கொள்வதற்கும், மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினாலும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளினாலும் நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய தகவல்கள் அல்லது எதிர்வுகூறல்கள் என்பன நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய காலங்களிலும் அத்தகைய விதத்திலும் மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புக்கும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் அந்தத் தகவல்களை அல்லது அந்த எதிர்வுகூறல்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்க வேண்டும்.

3. இந்த நிபந்தனையில்:

"முழு முறைமைகள்" முழு முறைமைகள் என்பது, மின்சார செலுத்துகை முறைமை, அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை மற்றும் ஒன்றாகக்கொள்ளப்படும் மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய சகல தரப்புகளினதும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை யாவும் எனப் பொருள்படும்.

**பாகம் IV மின்சார விநியோகம் தொடர்பான விஷேட நிபந்தனைகள்**

நிபந்தனை 18: மின்சார விநியோகத்தில் நிகழும் பாரபட்சத்தைத் தடுத்தல்

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் அல்லது மின்சார விநியோகம் தொடர்பில் விதிமுறைகளை விதிப்பதில்:

(அ) எவரேனும் நபருக்கு அல்லது நபர்கள் வகுதிக்கு பாரபட்சம் காட்டவும் ;

(ஆ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர்கள் வகுதிகளுக்கு இடையில் பாரபட்சத்தைப் பிரயோகிக்கவும் ;

(இ) நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகளை விதிக்கவும்,

கூடாது.

*2.* இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, குறித்த விதிமுறைகளின் பேரில் நுகர்வோருக்கு விநியோக்கின்ற மின்சாரத்திலிருந்து வரும் வருமானம், அந்த மின்சார விநியோகத்தின் ஆகுசெலவை கணிசமானளவு விஞ்சுமாயின், அந்த விதிமுறைகள், நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகள் எனக் கருதப்படும்.

*3.* இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு, பிரச்சினையிலுள்ள நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதன் பயனாக ஏற்பட்ட ஆகுசெலவுகளை நியாயமான விதத்தில் உள்ளீர்க்காத கட்டணங்களுடன் அத்தகைய விதிமுறைகள் கூட்டிணைகின்றனவா என்பது தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தி, நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற ஏதேனும் பிரச்சினைக்குரிய விடயத்தைத் தீர்மானிக்கும்.

*4* இந்த நிபந்தனையில் :

"விதிமுறைகள்" விதிமுறைகள் என்பது அந்த மின்சார விநியோக மதிப்பீட்டை கணிசமானளவு பாதிக்கின்ற விலைக்கான விதிமுறைகள் உள்ளிட்ட மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றமை அல்லது வழங்கப்படுகின்றமை தொடர்பான சகல விதிமுறைகளும் எனப் பொருள்படும்.

**நிபந்தனை 19: மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணை**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்விலும், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்றதன் பின்னரும், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வெளியிடப்படும் வழிகாட்டல்களில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் திகதி கழிய முன்னரும், இன்னும் அதன் பின்னரும் காலத்திற்குக் காலம், நுகர்வோருக்கான மின்சார விநியோகங்கள் தொடர்பான ஒரு வரித்தீர்வை அட்டவணையைத் தயாரித்து வழங்க வேண்டும்.

*2.* இந்த வரித்தீர்வை அட்டவணையானது:

(அ) ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படுமொரு அமைப்பிலும்,

(ஆ) யாரேனுமொரு நுகர்வாளரை மின்சாரக் கொள்வனவுகள் தொடர்பில் செலுத்தக் கடமையாகக்கூடிய கட்டணங்களின் நியாயமானவொரு மதிப்பீட்டை மேற்கொள்ளும் வகையில் இயலச் செய்வதற்கு அவசியமெனும் விபரங்களை உள்ளடக்கியதாகவும்,

(இ) குறிப்பீடு செய்யப்பட்ட பகல், இரவு நேரங்களில், வார நாட்களில், ஆண்டு காலங்களில் மின்சாரத்தை வழங்குவதிலான விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஆகுசெலவுகளை ஈடுசெய்யும் வகையிலும், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை அறவிட அனுமதிக்கின்ற, இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை வினைத் திறன் வாய்ந்தவொரு அடிப்படையில் நிறைவேற்றுவதிலான சகல நியாயமான ஆகுசெலவுகளையும் உள்ளீர்க்கும் வகையிலும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு முறையியலுக்கு இணங்கவும்,

(ஈ) தனித்தனியாக:

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையினது பாவனை தொடர்பான வரித்தீர்வை,

(ii) முன்கூட்டிய அல்லது அவசரதேவை மின்பிறப்பாக்கிச் செயற்பாட்டு பராமரிப்பு ஆகுசெலவு,

(iii) மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை இயக்க முகாமைத்துவ பராமரிப்பு ஆகுசெலவு ஆகிய ஆக்கக்கூறுகளைக் கண்டறியக்கூடிய வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

*3.* விலக்களிக்கப்பட்ட தரப்பினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வரித்தீர்வைகளின் சிக்கல் வாய்ந்த தன்மையின் அல்லது நுகர்வாளர்களின் புரிந்துகொள்ளும் அறிவாற்றலின் நிமித்தம் இலகுவான விளக்கக் கூற்றுக்கள் தேவைப்படுகின்றன என ஆணைக்குழு கருதுமிடத்து, அத்தகைய விளக்கக் கூற்றுக்களைத் தயாரித்து, அதன் பின்னர் அந்த விளக்கக் கூற்றுக்களை வரித்தீர்வை அட்டவணையுடன் சேர்த்துப் பிரசுரிக்குமாறு ஆணைக்குழு விலக்களிக்கப்பட்ட தரப்பைப் பணிக்கலாம்.

*4.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்திற்கான ஆணைக்குழுவினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தின் (அவ்வப்பொழுது திருத்தப்பட்டவாறான) ஒரு பிரதியை, அந்தத் திட்டத்தை ஏதாவது பிற நபருக்குக் கிடைக்கச் செய்வதற்கு முன்னர், 14 நாட்கள் கழிய முன்னர், ஆணைக்குழுவுக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையைப் பிரசுரிக்க வேண்டும்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, (8 ஆம் பந்திக்கு அமைய) மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை, அதனை அவசியம் எனக் கோரும் யாரேனும் நபருக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

8. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 7 ஆம் பந்திக்கு இணங்க, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை வழங்குவது அல்லது அனுப்பி வைப்பது தொடர்பில், ஆணைக்குழுவினால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிகாட்டல்களில், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக தற்காலிகமாகக் குறிப்பீடு செய்யப்படுகின்ற தொகையை விஞ்சாத ஒரு கட்டணத் தொகையை அறவிடலாம்.

9. வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய விதத்தில் அல்லது அந்த வழி காட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாம் எனும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்காக மின்சார விநியோகம் தொடர்பான குறித்த வரித்தீர்வை அட்டவணையின் அமைப்பை மாற்றுமாறு விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு ஆணைக்குழு பணிப்புரைகளை விடுக்கலாம் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு, உடனடியாக ஏதேனும் அத்தகைய பணிப்புரைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.

10. ஆணைக்குழு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையின் மீளாய்வு பற்றிய ஒரு நடைமுறையைக் குறிப்பீடு செய்யலாம்.

**நிபந்தனை 20: மின்சார பகிர்ந்தளிப்பும் விநியோகமும் தொடர்பான வரித்தீர்வை ஒப்பந்தம்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு (கீழ்காணும் 3 ஆம் பந்திக்கும், 14 ஆம் நிபந்தனைக்கும் அமைய), ஒரு மின்சார நுகர்வாளராக ஆகுவதற்கு எண்ணுகின்ற எவரேனுமொரு மின்சார நுகர்வாளருடன் அல்லது நபருடன் ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும். விலக்களிக்கப்பட்ட தரப்பு அவ்வாறு உள்ளாகும் அந்த ஒப்பந்தமானது, அத்தகைய மின்சார விநியோகங்கள் தொடர்பில் ஆக்கப்பட வேண்டிய கட்டணங்களுக்கும், மேலே கூறப்பட்ட 19 ஆம் நிபந்தனையில் நிர்ணயிக்கப்பட்ட வரித்தீர்வை அட்டவணைக்கான குறிப்பாக அமைய வேண்டிய அத்தகையதொரு விதத்தில் முன்வைக்கப்பட வேண்டிய அத்தகைய கட்டணங்களுக்குமான ஏற்பாடுகளை வழங்குவதாகவும் அமைய வேண்டும்.

2. குறித்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை வகுத்தமைக்கும் நோக்கம் தொடர்பில் விலக்களிக்கப் பட்ட தரப்பு நியாயமானளவில் தேவைப்படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளடங்குகின்ற ஒரு விண்ணப்பம், விலக்களிக்கப்பட்ட தரப்பினால் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர், ஏதாவதொரு நிகழ்வில் முடியுமான வரை சாத்தியமான விதத்தில் (ஒரு நீண்ட காலப் பகுதியை ஆணைக்குழு வழங்குகின்றவிடத்து) 1 ஆம் பந்திக்கு இணங்க, குறித்த விலக்களிக்கப் பட்ட தரப்பு ஒப்பந்தங்களுக்கான விதிமுறைகளை முன்வைக்க வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு இணங்க ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கு அல்லது உள்ளாக முனைவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு கடமைப்படுத்தப்பட மாட்டாது. எனினும் குறித்த விலக்களிக்கப்பட்ட தரப்பு, அவ்வாறு அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகுமாயின் அல்லது முனையுமாயின்:

(அ) குறித்த சட்டத்தின் கீழுள்ள தனது கடமைகளை நிறைவேற்றத் தவறிய, அல்லது

(ஆ) குறித்த சட்டத்தின் அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் ஏற்புடைய பாதுகாப்பு அல்லது நியமங்கள் தொடர்பான ஏதாவது பிற சட்டவாக்கத்தின் ஏதாவது ஒழுங்குவிதிகளை மீறிய, அல்லது

(இ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது நிபந்தனைகளை மீறிய, அல்லது

(ஈ) அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை மீறிய தரப்பாகக் கருதப்படும்.

4. 25 ஆம் நிபந்தனைக்கு இணங்க உள்ளான ஒப்பந்தம் தொடர்பான சரியான வாசகங்கள் உள்ளடங்கினால் இந்த நிபந்தனைக்கு இணங்க ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது கடப்பாடு திருப்தி கொள்ளப்படும்.

***நிபந்தனை 21 : வளாகங்களுக்குள் பிரவேசித்தல்***

*1.* இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் ஏதாவது வளாகங்களுக்குள் பிரவேசிப்பது பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்பு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் அது குறித்து அறிவித்தல்களை விடுக்க வேண்டும் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கும்:-

(i) மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயல்களின் தன்மையையும் அளவையும் சாத்தியமான விதத்தில் முழுமையாகவும் செவ்வையாகவும் குறிப்பிட்டு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உத்தேச பிரவேசம் பற்றிய மூன்று நாள் அறிவித்தல் விடுக்கப்படாத ;

(ii) அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் தனக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கான சான்று முன்வைக்கப்படாத ;

(iii) குறித்த பிரவேசத்தினால் ஏற்படும் ஏதாவது இடையூறு, பாகங்களிழப்பு அல்லது பாதிப்பு தொடர்பில் காணியின் அல்லது வளாகத்தின் உரிமையாளருக்கு நியாயமான நஷ்டஈடு செலுத்தப்படாத

வரையில் வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கு உரிமை கிடையாது.

*2.* 1 (அ) என்ற உப பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு அறிவித்தல் விடுப்பு நோக்கத்திற்காக அதன் சார்பில் எழுத்தில் அந்த அறிவித்தலை விடுக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு குறித்த காணியினுள் பிரவேசிப்பதற்கு உரித்துண்டு.

*3.* இந்த விடயத்தினால் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத்தத்துவங்களை எவரேனுமொரு நபர் பிரயோகிக்குமிடத்து, எழுத்தில் அந்த நபரினால் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பு அல்லது, விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பிரவேசத்தின் விளைவாக வளாகங்களுக்கு ஏற்பட்ட ஏதாவது பாதிப்பை ஈடுசெய்ய வேண்டும்.

*4.* இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அல்லது அதன் கீழ் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத் தத்துவத்தைக் கொண்டு வளாகத்தினுள் பிரவேசிப்பதனால் அந்த வளாகத்திற்கு அல்லது ஏதேனும் அசையும் ஆதனங்களுக்கு, வளாகத்தில் அல்லது அசையும் ஆதனங்களில் அக்கறையுடைய எவரேனும் நபருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், எந்தத் தரப்பின் சார்பாக அதிகாரத்தத்துவம் பிரயோகிக்கப்படுகின்றதோ அதாவது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து அத்தகைய பாதிப்புக்கான நஷ்டஈட்டைக் கோரி அறவிடலாம். அத்தகையதொரு அதிகாரத்தத்துவத்தைப் பிரயோகிப்பதன் விளைவாக நபர் ஒருவருக்கு அவரது ஏதேனும் வளாகத்தை அனுபவிக்கும் உரிமைக்கு அல்லது அசையும் ஆதனங்களுக்கு இடையூறு ஏற்படுமிடத்து, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அந்த இடையூறு தொடர்பில் விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து நியாயமான நஷ்டஈட்டை அந்த நபருக்கு கோரி அறவிட்டுக் கொள்ளலாம்.

### *அட்டவணை 1*

*340, 342, 342/1* (பாகம்) ஆகிய வரிமதிப்பீட்டு இலக்கங்களையுடைய உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. எம் . என். கே. ஏக்கநாயக்க அவர்களினால் *2008*, ஏப்பிறல் மாதம் *30* ஆந் திகதி தயாரிக்கப்பட்ட *121* ஆம் இலக்க நிலஅளவுத் திட்டத்தில் X எனக் காட்டப்பட்டுள்ள காணித் துண்டினதும் அந்தக் காணித் துண்டிலிருந்து வரும் ஒரு காணித் துண்டாகக் காணப்படுகின்ற அதிலுள்ள கட்டிடங்களும் தாவரங்களும் அடங்கலாக MJF - *1* தொகுதி எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள "ரததொட்டநெல்ல", தியபரகஹதெனிய, "கஹட்டகஹவத்த" கஹட்டகஹஓவிட்ட" என்ற ஒரு காணித்துண்டினது தொகுதியின் பிரகாரம் மொரட்டுவை மாநகர சபை எல்லைகளுக்குள் காலி, வீதி, லக்ஷபத்திய என்ற இடத்தில் :

வடக்கு : *121* ஆம் இலக்க நில அளவைத் திட்டத்தில் X எனக் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் மீதிப் பாகம் (MJF பவுன்டேஷன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (ப்ரைவட்) லிமிட்டெட்.

கிழக்கு : காலி வீதி ;

தெற்கு : ப்ரைம்லேண்ட் டிவலொப்பர்ஸ் கம்பனியின் ஆதனம் ;

மேற்கு : *121* ஆம் இலக்க நிலஅளவைத் திட்டத்தில் X எனக் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் மீதிப் பாகம் (MJF பவுன்டேஷன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (ப்ரைவட்) லிமிட்டெட்.

ஆகிய எல்லைகளினால் சூழப்பட்ட காணி :

காணியின் பரப்பளவு : *2*ஏ. *1*றூட். *29.69* பேர். (0.9857 ஹெக்டேயர்) இரண்டு ஏக்கர் ஒரு றூட் இருபத்தொன்பது தசம் ஆறு ஒன்பது பேர்ச்சஸ்.

*5- 626/1*

**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்*

***10 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் விலக்களிப்புக் கட்டளை***

***1. விலக்களிப்பு வழங்கல்***

*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பீடு செய்யப் படும்), 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10 (1) ஆம் பிரிவினால் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்களைக் கொண்டு, இலக்கம் 01, பகத்தல வீதி, கொழும்பு 03, என்ற முகவரியில் அமைந்துள்ள ப்லட்டினம் றியல்டி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திற்கு (இதனகத்துப் பின்னர் விலக்களிக்கப்படும் தரப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்), இந்தக் கட்டளையில் உள்ளடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைய,*

*இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 1 இல் முழுமையாக விபரிக்கப்பட்ட இலக்கம் 01, பகத்தல வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள தனது வளாகத்தினுள் மின்சாரத்தைப் பகிர்ந்தளித்து விநியோகிப்பதற்கு அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அல்லது விநியோகிப்பதற்கு என்ற வரையறுக்கப்பட்ட நோக்கம் தொடர்பில் ஒரு அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான அதன் தேவைப்பாட்டிலிருந்து இத்தால் அதனை விலக்களிப்புச் செய்கின்றது.*

***2. அங்கீகாரங்கள்***

*இவ்வாறு விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பையும் மின்சார விநியோகத்தையும் மேற்கொள்ளுவதற்கான, ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகள், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகள், மற்றும் குறித்த ஏற்பாடுகளுக்கு வரையறுக்கப்படாத விடயங்கள் என்பவற்றின் கீழ், தேவையான சகல அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

***3. விலக்களிப்பு பற்றிய நியதி***

*இத்தால் வழங்கப்படும் விலக்களிப்பானது, கீழே காணப்படும் விலக்களிப்புக் கட்டளையிலுள்ள இரத்துச் செய்தல் மற்றும் விலக்களிப்பு வாபஸ்பெறல் தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைய இரத்துச்செய்யப்படாத அல்லது வாபஸ்பெறப்படாத வரையில், 2012.01.26 ஆம் நாள் செயல்வலுப் பெறும் என்பதுடன், அந்த 2012.01.26 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ஐந்து (05) வருட காலமொன்றுக்கு முற்றிலும் செயல்வலுப் பெற்று நடைமுறையிலுமிருக்கும்.*

***4. விலக்களிப்பை இரத்துச்செய்தலும் வாபஸ்பெறுதலும் :***

*இந்த விலக்களிப்பானது, குறித்த சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க இரத்துச்செய்யப்படலாம் அல்லது வாபஸ்பெறப்படலாம்.*

*கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா,*
*தலைவர்,*
*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.*

***விலக்களிப்பு பற்றிய நிபந்தனைகள்***

***நிபந்தனை 1: பொருளும் பொருள்கோடலும்***

*1. முரண்பட்ட பொருள் எழாத வரையில்:*

*(அ) குறித்த நிபந்தனைகளில் அல்லது அட்டவணையில் பிரயோகிக்கப்பட்ட சொற்கள் அல்லது சொல்வாசகங்கள் சட்டவாக்கமொன்றிலும் மற்றும் அந்த வாசகங்களுக்கு ஏற்புடைத்தான பொருள்கோடல் சட்டங்களிலும் காணப்பட்டவாறு பொருள் கொள்ளப்படும் என்பதுடன் ;*

(ஆ) ஒரு சட்டவாக்கத்திற்கான குறிப்பீடுகள், இந்த விலக்களிப்புக் கட்டளை செயல்வலுப் பெறும் நாளின் பின்னர் மேற்கொள்ளப்படும் அந்த சட்டவாக்கதின் ஏதாவது திருத்தம் அல்லது மறுசட்டமாக்கல் ஆகிய இரண்டிலும் அடிப்படையாகவும், துணையாகவும் அமைகின்ற சட்டவாக்கத்தை உள்ளடக்கியிருக்கும்.

2. முரண்பட்ட பொருள் எழாத வரையில், குறித்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது நோக்கத்தின் நிமித்தம் சட்டத்தில் தெளிவாக விவரிக்கப்பட்ட ஏதாவது சொல் அல்லது சொல்வாசகங்கள் குறித்த அட்டவணையில் அல்லது நிபந்தனைகளில் பிரயோகிக்கப்பட்ட நேரத்திலிருந்த முரணற்ற அதே கருத்தைக் கொண்டிருக்கும்.

3. நிபந்தனைகளிலும் அட்டவணையிலும் குறிப்பிடப்படாத அல்லது தேவைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் :

"இணைத்தரப்பு" — விலக்களிக்கப்பட்ட தரப்பு தொடர்பில், இணைத்தரப்பு என்பது, ஒவ்வெரு விடயத்திலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது முதலீட்டுக் கம்பனி அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது துணை நிறுவனம் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் முதலீட்டுக் கம்பனியொன்றின் ஏதாவது துணை நிறுவனம் எனப் பொருள்படும்.

"அங்கீகரிக்கப்பட்டது" — அங்கீகரிக்கப்பட்டது என்பது, 4, 9, 13, 16, 19 மற்றும் 20 ஆம் நிபந்தனைகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும். மேலும் "அங்கீகாரம்" என்ற பதமும் அதையொத்த ஒரு கருத்தையே கொண்டிருக்கும்.

"அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு " — அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியானவொரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை" — மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை என்பது, பிரதானமாக மேன்தலை மின்சார மார்க்கங்கள், நிலகீழ் கேபல்கள், மின்சார சேவை மார்க்கங்கள், மின்மாற்றிகள், மாணி வாசிப்புக் கருவிகள், மற்றும் வடிவமைக்கப்பட்ட 33kv (பேஸ் கடத்திகளுக்கு இடையில்) அல்லது அதற்குக் குறைவான மின்விசை அடங்கிய ஏனைய துணை மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன உள்ளிட்ட விலக்களிக்கப்பட்ட தரப்புக்குச் சொந்தமானதும், அந்தக் குறித்த தரப்பினால் இயக்கப்படுகின்றதுமானவொரு மின்சார முறைமையைப் பயன்படுத்துகின்றவொரு மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து அல்லது மின்னுற்பத்திப் பொறித்தொகுதி களிலிருந்து அல்லது ஏனைய கொள்வனவுப் புள்ளிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப் படுகின்ற மின் சக்தியை, 33kV அல்லது அதற்குக் குறைவான மின் விசையொன்றில் மின்சார விநியோகத்தைப் பெறவதற்கு விருப்பமுடைய முடிவுப் பயனரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குநர்களின் மின்சார விநியோக இடங்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கான மின்சார அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினது அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கை எனப் பொருள்படும்.

"விலக்களிக்கப்பட்ட தரப்பு" — மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கவும் விநியோக்கவும் அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்க அல்லது விநியோக்க குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு" — மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு என்பது, மின்சார பகிர்ந்தளிப்பு நடவடிக்கையில் அல்லது மின்சார விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் ஏதேனுமொரு தரப்பு எனப் பொருள்படும்.

"முதலீட்டுக் கம்பனி" — முதலீட்டுக் கம்பனி என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தினுள் வரும் ஒரு கம்பனி எனப் பொருள்படும்.

"விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை" — விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமை என்பது, இதற்கான அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட வளாகத்தினுள், மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து பாகமாக உருவாகுகின்ற மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த, ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் பாகமெனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற அந்தத் தரப்புக் கொண்டிருக்கலாம் எனும் ஏதாவது பிற மின்சார மார்க்கங்களும், வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்லப் பயன்படுகின்ற விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது மின்பொறித்தொகுதி, மாணிவாசிப்புக் கருவிகள், மின்மாற்றிகள் மற்றும் ஆளிப்பலகை உந்துகை என்பன உள்ளடங்கலாக விலக்களிக்கப்பட்ட தரப்பின் சகல மின்சார மார்க்கங்களும் எனப் பொருள்படும்.

"அனுமதிப்பத்திரத் திருத்தம்" — அனுமதிப்பத்திரத் திருத்தம் என்பது, அதில் சேர்த்தல், நீக்குல், திருத்துதல் மற்றும் பிரதியீடு செய்தல் எனப் பொருள் படும். மேலும் அதற்கிணங்க ஒரே வகையான சொல்வாசகங்கள் பொருள் கொள்ளப்படவும் வேண்டும்.

"இபொபஆச" — இபொபஆச என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்.

"சம்பந்தப்பட்ட நிறுவனம்" — சம்பந்தப்பட்ட நிறுவனம் என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள் வரும் ஏதாவது ஒரு நிறுவனம் எனப் பொருள்படும்.

"பிரதிநிதித்துவம" — இங்கு பிரதிநிதித்துவம் என்பது, எழுத்தில் விடுக்கப்படும் ஏதேனும் ஆட்சேபனை அல்லது பிரேரணை எனப் பொருள்படும்.

"துணை நிறுவனம்" — இதற்கு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தில் வழங்கப்பட்ட பொருளுண்டு. மேலும், அதற்கிணங்கவே "துணை நிறுவனங்கள்" வரைவிலக்கணப்படுத்தப்படவும் வேண்டும்.

"மின்சார செலுத்துகைக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு" — மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (இ) (i) (ஆ) பிரிவின் கீழ், மின்சார செலுத்துகைக்கான ஒரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார செலுத்துகை முறைமை" — மின்சார செலுத்துகை முறைமை என்பது, பாரியளவில் மின்சாரத்தை நுகரும் கட்டிட வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படும் (ஆனால் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் ஏதாவது பாகமாக வருகின்ற அத்தகைய ஏதேனும் மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த) சகல மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்கள் அடங்கலாக, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து உப-மின் நிலையமொன்றுக்கு, மின்னுற்பத்திப் பொறித்தொகுதி யொன்றிலிருந்து மற்றுமொரு மின்னுற்பத்திப் பொறித் தொகுதிக்கு அல்லது உப-மின்

நிலையமொன்றிலிருந்து மற்றுமொரு உப-மின் நிலையத்திற்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படுகின்ற மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்களையும், மின் பொறித்தொகுதியையும் (முழுமையாக அல்லது பிரதானமாக) கொண்டிருக்கின்ற மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினால் இயக்கப்படுகின்ற அந்தத் தரப்புக்கு உரித்தான மின்சார முறைமை எனப் பொருள்படும்.

4. குறிப்பீடு செய்யப்படாத வரையில்:

(அ) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு நிபந்தனைக்கான அல்லது இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு அட்டவணைக்கான ஏதாவதொரு குறிப்பானது, முறையே இந்த விலக்களிப்புக் கட்டளையில் இலக்கம் குறிக்கப்பட்ட நிபந்தனைக்கான அல்லது அட்டவணைக்கான ஒரு குறிப்பாக விளங்கும்.;

(ஆ) இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கான ஏதாவதொரு குறிப்பானது, குறிப்பு நிகழும் அட்டவணையிலுள்ள அந்த இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கானவொரு குறிப்பாக விளங்கும்.

(இ) இலக்கம் குறிக்கப்பட்டவொரு பந்திக்கான ஏதாவதொரு குறிப்பானது, அந்தக் குறிப்பு நிகழும் நிபந்தனையில் அல்லது வாசகத்தில் இலக்கம் குறிக்கப்பட்ட பந்திக்கானவொரு குறிப்பாக விளங்கும்.

அத்தகைய வித்தியாசத்தை, குறைநிரப்பலை அல்லது மீள்நிரப்பலை வரையறுக்கின்ற ஏதேனுமொரு ஏற்பாட்டிற்கு முரணற்ற விதத்தில், ஏதேனுமொரு ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, (இந்த விலக்களிப்புக் கட்டளை தவிர்ந்த), விதிமுறைக்கான அல்லது பிற பத்திரத்திற்கான ஏதேனுமொரு குறிப்பானது, அத்தகைய ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, விதிமுறைக்கான அல்லது அவ்வப்பொழுது வேறுபடுகின்ற, குறைநிரப்பப்படுகின்ற அல்லது மீள்நிரப்பப் படுகின்ற பிற பத்திரத்திற்கான குறிப்பொன்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

5. ஏதாவது ஒரு பகுதியின், நிபந்தனையின், அட்டவணையின் அல்லது பந்தியின் தலையங்கம் அல்லது தலைப்பு அதன் கட்டமைப்பைப் பாதிக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும்.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதேனுமொரு கடப்பாட்டை, குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கால வரையறையினுள் நிறைவேற்றுமாறு தெரிவிக்கப் படுமிடத்து, விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கால வரையறையினுள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால் (ஆனால், குறித்த கால வரையறையினுள் விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறியமை தொர்பில் நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படுவதன் பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு கிடைக்கக் கூடிய அனைத்து உரிமைகளுக்கும் பரிகாரங்களுக்கும் முரணற்ற விதத்தில்) குறித்த கடப்பாடானது, குறித்த கால வரையறையின் பின்னரும் கூட தொடர்ந்தும் கடப்பாடுடையதாகவும், செயலாக்கக் கூடியதாகவுமிருக்கும்.

7. குறித்த சட்டத்திற்கும் இந்த விலக்களிப்புக் கட்டளைக்கும் இடையே ஏதாவது முரண்பாடு நிலவுமாயின், இந்தச் சட்டம் அத்தகைய ஏதாவது முரண்பாடளவுக்கு மேலோங்கி நிற்கும். இந்தச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள், குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விலக்களிப்புக் கட்டளையின் முழுமையானவொரு பாகமாகவுமிருக்கும்.

**நிபந்தனை 2: ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு தேவைப்படுத்தலாமெனும் தகவல்களை, ஆணைக் குழு தேவைப்படுத்தும் விதத்திலும், குறிப்பிடும் காலங்களிலும் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளின் விளக்கத்தில், குறித்த சட்டத்தின் கீழ் அல்லது இபொபஆ சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது மாற்றி ஒப்படைக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் அறிக்கைகளையும் தேடி முனைந்து வழங்கவும் வேண்டும்.

2. 1 ஆம் பந்தியின் பொதுக் கோட்பாட்டுக்கு முரணற்ற வகையில், தயாரிக்கப் பட்டு வழங்கப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கணக்கீட்டுத் தகவல்களை விட மிக விரிவான, அல்லது வித்தியாசமான தகவல்களை தனக்கு வழங்குமாறு ஆணைக்குழு அறிவிக்கலாம்.

3. 1 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல்களை அழைப்பதற்கான ஆணைக்குழுவின் அதிகாரத் தத்துவமானது, இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது பிற நிபந்தனையின் கீழும் அல்லது அந்த நிபந்தனைக்கு இணங்கவும் அல்லது குறித்த சட்டத்தின் கீழும், இபொபஆ சட்டத்தின் கீழும் அல்லது அந்தச் சட்டங்களுக்கு இணங்கவும், அல்லது பிற சட்டவாக்கத்தின் கீழும் அல்லது அதற்கு இணங்கவும் தகவல்களை அழைப்பதற்கான தனது அதிகாரத்தத்துவத்திற்கு முரணற்றதாகவிருத்தல் வேண்டும்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த விலக்களிப்பைப் பெற்று ஒரு மாத காலத்திற்குள், மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கைக்குப் பொறுப்பாக, தனது நிறுவனத்தில் ஒரு நபரை நியமிக்க வேண்டும்.

5. இந்த நிபந்தனையில் :

"தகவல்" என்பது, ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில், ஏதாவது விபரங்களை உள்ளிட்ட ஏதாவது புத்தகங்கள், ஆவணங்கள், பதிவுகள், கணக்குகள், மதிப்பீடுகள், விபரத் திரட்டுக்கள் அல்லது அறிக்கைகள் (குறிப்பாக ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத) எனப் பொருள்படும்.

**நிபந்தனை 3: ஆணைக்குழுவின் தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டிகள் மற்றும் நிர்ணயங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, விலக்களிப்புக் கட்டளைக்கு இணங்க, ஆணைக்குழு மேற் கொள்ளலாமெனும் ஏதாவது தீர்மானங்களுக்கும், கட்டளைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

2. அத்தகைய கட்டளைகளுக்கும், தீர்மானங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இணங்க சம்பந்தப்படுகின்ற ஏதாவது கிரயங்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு பொறுப்பேற்க வேண்டும்.

3. ஆணைக்குழு ஏதாவது கட்டளையை அல்லது தீர்மானத்தை வெளியிட்டால், விலக்களிக்கப்பட்ட தரப்பு அவற்றுக்கு இயைந்தொழுகி, ஆணைக்குழு தேவைப் படுத்துகின்ற விதத்தில் தனது ஆதனத்தை அணுக அல்லது கட்டுப்படுத்த ஆணைக்குழுவை அல்லது ஆணைக்குழுவின் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது பிற அதிகாரியை அல்லது நபரை அனுமதிக்க வேண்டும்.

**நிபந்தனை 4: தொழில்நுட்ப மற்றும் இயக்க விதிக்கோவைகளுடனான இணக்கப்பாடு**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், அவ்வப்பொழுது ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு, குறித்த தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளை, ஆணைக் குழு பொருத்தம் எனக் கருதும் ஏதாவது மின்சாரப் பணிகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்களுடனான ஆலோசனையுடன் தயாரித்துச் செயற்படுத்த வேண்டும்.

2. 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகள், செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. விலக்களிக்கப்பட்ட தரப்பு, உரிய தொழில்நுட்ப இயக்க விதிக்கோவையில் குறிப்பீடு செய்யப்பட்ட திருத்தல் நடபடிக்கைக்கு இணங்க, உரிய நேரத்தில் செயல்வலுப் பெறும் ஒரு விதிக்கோவைக்கான தனது திருத்தங்களை ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதன் மூலம் முன்மொழியலாம்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த நிபந்தனைக்கு இணங்க, தான் தயாரித்துச் செயற்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட சகல தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளினதும் பிரதிகளை (இதற்கான ஏதாவது திருத்தங்களுடன்):

(அ) ஆணைக்குழுவுக்கும்,
(ஆ) அதனைத் தேவைப்படுத்தும் எவரேனுமொரு நபருக்கும்

வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 (ஆ) பந்திக்கு இணங்க தான் வழங்குகின்ற அல்லது அனுப்பி வைக்கின்ற ஏதாவது விதிக்கோவையின் பிரதியொன்று தொடர்பில், ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில், இந்த நிபந்தனையின் நோக்கங்கள் தொடர்பில் தற்காலிகமாக குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது கட்டணத் தொகையை விஞ்சாதவொரு கட்டணத் தொகையை அறவிடலாம். விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதில் தனக்கு ஏற்புடையது எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளின் ஏற்பாடுகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

6. மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஏதாவது நிறுவனங்களிலிருந்து உரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் கிடைக்கும் ஆலோசனையைத் தொடர்ந்து, ஆணைக்குழு, விலக்களிக்கப்பட்ட தரப்பை 6 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிக்கின்ற, பொருத்தம் எனக் கருதும் வழிகாட்டல்களை, ஆணைக்குழு நிர்ணயிக்கலாமெனும் நிபந்தனைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, அந்த வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாமெனும் அளவுக்கு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளின் குறித்த பாகம் அல்லது பாகங்கள் தொடர்பில் கட்டளைகளை வெளியிடலாம்.

*7.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுக் கிடைக்கச் செய்யப்படும் காலம் வரை, சகல செயற்பாடுகள் தொடர்பிலும், ஏற்கனவேயிருக்கின்ற தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.

நிபந்தனை 5: ஏனைய ஒப்பந்தங்கள்

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு உரிய அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுடன் மின்சார இணைப்பு மற்றும் வரித்தீர்வை ஒப்பந்தங்கள் உள்ளிட்ட, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்ற பிற நபர்களுடனான ஏதாவது ஒப்பந்தங்களுக்குள்ளாக வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பங்குபற்றத் தேவைப் படுத்தப்படும்.

*3.* ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டவொரு ஒப்பந்தத்திற்கு, விலக்களிக்கப்பட்ட தரப்பு உள்ளாகத் தவறியுள்ளது என உரிய நோக்கத்தின் நிமித்தம் நியாயமென ஆணைக்குழுவுக்குத் தோன்றுமொரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர், ஆணைக்குழு, அத்தகைய தரப்பினது அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினது விண்ணப்பத்தின் பேரில், பிணக்கிலிருக்கும் தரப்புக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் இடையில் ஒப்பந்த விதிமுறைகளில் நிலவும் ஏதாவது முரண்பாட்டை ஆணைக்குழுவுக்கு நியாயம் எனத் தோன்றுமொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 6 : விலக்களிப்புக் கட்டளையும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை உரிமை மாற்றலும்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக் குழுவின் முன்கூட்டிய எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையை முழுமையாக அல்லது பாகமாக சாட்டக் கூடாது.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை முழுமையாக அல்லது பாகமாக மற்றொரு தரப்புக்கு ("உரிமை மாற்றிப் பெறுபவர்") உரிமை மாற்றக் கூடாது.

*3.* இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது சாட்டுதல் பணிக்கான அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையின் உரிமை மாற்றத்திற்கான ஆணைக்குழுவின் ஏதாவது அனுமதியானது, சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு அல்லது உரிமை மாற்றிப் பெறுபவருக்கு, இந்த விலக்களிப்புக் கட்டளையின் நிபந்தனையை அனுசரிக்கும் வகையில், தொழில்நுட்ப, நிதி ஆற்றல் காணப்படுகின்றது என ஆணைக்குழு திருப்திப்படுகின்றது என்பதற்கு அமைவாகவும், ஒரு உரிமை மாற்றம் எனின் மாத்திரம், விலக்களிப்புக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கும் உரிமை மாற்றிப் பெறுபவர், ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் பட்சத்தில், குறித்த சட்டத்திற்கு இணங்க, இந்த விலக்களிப்புக் கட்டளையின் திருத்தம் அடங்கலாக, ஆணைக்குழு அவசியம் என நிர்ணயிக்கும் ஏதாவது ஏனைய விடயங்களை, சாட்டுதல் பணியை ஏற்பவர் அல்லது உரிமை மாற்றிப் பெருபவர் அனுசரித்து நடப்பார் என்பதற்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

*4.* இந்த நிபந்தையில் எதுவும், அத்தகைய சாட்டுதல் பணிக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கிய பட்சத்தில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட பின்னர் சாத்தியமான விதத்தில் உடனடியாக அத்தகைய உரிமை மாற்றம் செயல்வலுப் பெறும் என்ற அடிப்படையில், விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை, ஒரு சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு உரிமை மாற்றிக் கையளிப்பதைத் தடுக்கக் கூடாது.

**நிபந்தனை 7 : விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்தல் அல்லது வாபஸ்பெறுதல்**

*1.* பின்வரும் சந்தர்ப்பங்களில், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க, ஆணைக்குழு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய வேண்டும் என ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்து உடன்படும் பட்சத்திலும் ;

(ஆ) இந்தக் கட்டளையின் 2 ஆம் நிபந்தனையின் கீழ், ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் ஒரு கட்டளையை அல்லது பணிப்புரையை, விலக்களிக்கப்பட்ட தரப்பு, அந்தக் கட்டளை அல்லது பணிப்புரை விடுக்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அந்தக் கட்டளையில் அல்லது பணிப்புரையில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாம் எனும் அத்தகைய நீடிக்கும் காலத்தினுள், குறித்த கட்டளையை அல்லது பணிப்புரையை அனுசரிக்கத் தவறும் பட்சத்திலும் ;

(இ) இல்லையெனில்.

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிலவும் பட்சத்திலும்:,

(ii) மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை இயக்குவதற்கு புதிய பங்குதாரர் அல்லது அந்தப் புதிய பங்குதாரரினால் (ஏதாவது பங்குதாரர் இருப்பின்) நியமிக்கப்பட்ட நிறுவனம் ஆகிய இரு தரப்புகளுக்குமே, விலக்களிக்கப்பட்ட தரப்பின் பங்குவகித்தலின் அளவுப் பரிமாணத்தைக் கருத்திற் கொண்டு, அந்த மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் போதிய தொழில்நுட்பம், நிதி அல்லது முகாமைத்துவம் சார்ந்த ஆற்றலில்லை என ஆணைக்குழு திருப்திப்படும் பட்சத்திலும்:,

(iii) இந்தப் பந்திக்கு இணங்க, ஆணைக்குழு இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய உத்தேசிக்கின்றது என அறிவித்து விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அறிவித்தலை விடுத்து, அந்த அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியைக் கொண்டு ஆரம்பமாகும் மூன்று மாத காலத்திற்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றவாறு விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் மேலும் மாற்றம் நிகழாத பட்சத்திலும் ; மற்றும்

(iv) அந்தக் காலப் பகுதியில் மேலும் மாற்றம் நிகழாது எனும் பட்சத்திலும் ;

(ஈ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்த பின்னரும் முடியுமான வரை உடனடியாக விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவுக்கு அந்த மாற்றம் பற்றி அறிவிக்கத் தவறும் பட்சத்திலும்:,

(உ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொடர்ச்சியாக ஒரு 03 மாத காலத்திற்கு, அதாவது ஆணைக் குழு அதன் தனித் தற்றுணிவில், சகல சந்தர்ப்பங்களிலும் நியாயம் எனக் கருதி, அவ்வாறு அத்தகைய நீடிக்கும் காலத்தைப் பிரதியீடு செய்யும் நிலையில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்த நிகழ்வுகளின் பயனாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என ஆணைக்குழு திருப்திப்படும் சந்தர்ப்பம் தவிர, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை நிறுத்தும் பட்சத்திலும்:,

(ஊ) விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்கிய எந்தத் தகவல்களின் அடிப்படையில் இந்த விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்ததோ அந்தத் தகவல்கள் கணிசமானளவில் தவறானவை அல்லது பொய்யானவை எனக் காணப்படும் பட்சத்திலும்:,

(எ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவதொரு நிபந்தனையை விலக்களிப்பட்ட தரப்பு மீறும் /அல்லது முறிக்கும் பட்சத்திலும்

இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்யலாம்.

**நிபந்தனை 8: சுற்றாடல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, இலங்கையில் ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்களுக்கும், அத்தகைய சுற்றாடல் சட்டங்களின் கீழ், அனுசரிக்கும் முகமாக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வழங்கப்படலாமெனும் ஏதாவது விலக்களிப்புக் கட்டளைகளுக்கு அல்லது கருணைக் காலங்களுக்கு அமைய இயைந்தொழுக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக்குழுவுடனான ஆலோசனையில் விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்கங்களின் கீழுள்ள தனது கடமைகளையும் கடப்பாடுகளையும் அனுசரிக்கும் வகையில், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு முன்வைக்கும் விதத்தில் எழுத்திலான ஒரு கொள்கையைத் தயாரித்து, அவ்வப்பொழுது திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும்.

3. ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய காலங்களில், அத்தகைய படிவத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பு தனது சுற்றாடல் செயலாற்றுகை பற்றி வருடா வருடம் ஆணைக் குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

4. இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் நோக்கங்களுக்கான "சுற்றாடல் சட்டங்கள்" என்பது, சுற்றாடலில் தங்கியிருக்கின்ற தாவர இனங்கள், விலங்கு இனங்கள், மானிட சுகாதாரம், மற்றும் உயிரியல் சுற்றாடல் முறைமைகள் என்பவற்றின் பாதுகாப்பு உள்ளிட்ட, சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக உள்ளடக்க வேண்டுமெனும், ஆனால் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசியச் சுற்றாடல் சட்டத்திற்கு வரையறுக்கப்படாத சுற்றாடல் பாதுகாப்புதான் நோக்கம் என்ற அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்டங்களும், சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் வளி, நிலம், நீர் ஆகியவற்றின் பாதுகாப்பு சம்பந்தமான பொருத்தமான சகல சட்டவாக்கங்களும் எனப் பொருள்படும்.

**நிபந்தனை 9: சுகாதாரமும் பாதுகாப்பும்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளுகின்ற நேரம் ஏற்படலாமெனும் உடற்காயங்களிலிருந்து நபர்களையும், பாதிப்புகளிலிருந்து பொறித்தொகுதிகளையும், ஆதனங்களையும், உபகரணங்களையும் பாதுகாப்பதற்கு, கீழ் காணும் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல் அடங்கலாக சகல நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக் குழுவுடனான ஆலோசனையில் ஒரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டத்தை அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் ;

(ஆ) அந்தத் திட்டத்தின் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாட்டை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, தேவையாயின் அந்தத் திட்டத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தி, இற்றைப்படுத்தி அங்கீகாரத்திற்காக ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவும் வேண்டும் ;

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு (அவ்வப்பொழுது இற்றைப்படுத்தப் பட்டவாறான) குறித்த திட்டத்தை அனுசரித்து நடக்க வேண்டும் ;

(ஈ) ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி குறித்த திட்டத்தைத் திருத்தக் கூடாது ;

(உ) குறித்த திட்டத்தின் கீழுள்ள கடப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு, வருடாந்தக் கணக்காய்வு ஆணைக்குழு அங்கீகரிக்கும் சுயாதீன நிபுனர் ஒருவரினால் குறித்த திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் ;

(ஊ) ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்படும் சுகாதாரப் பாதுகாப்பு சம்பந்தமான புள்ளிவிபரங்களையும் சுட்டிகளையும் தொகுத்து வழங்க வேண்டும் ;

(எ) அந்தக் கணக்காய்வுகளினதும், புள்ளிவிபரங்களினதும், சுட்டிகளினதும் பெறுபேறுகள் பற்றி உடனே ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

**நிபந்தனை 10: காப்புறுதி**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை சம்பந்தமான ஆபத்துக்களின் முகாமைத்துவமும் காப்புறுதியும் தொடர்பில் நியாயமான, நுட்பமான கொள்கைகளைப் பின்பற்றி, அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 11: இரகசியத் தகவல்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் அதற்குக் கிடைத்த சகல தகவல்களும்:

(அ) பணிப்பாளர்களுக்கு, அலுவலர்களுக்கு, ஊளியர்களுக்கு, அல்லது இந்த இரகசியத் தன்மையின் தேவைப்பாட்டை அவதானிக்கும் பொருட்டு எழுத்தில் உடன்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட தரப்பின் முகவர்நிலையத்திற்கு தமது சட்டபூர்வத் தொழிற்பாடுகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற அத்தியாவசியமான இந்த விலக்களிப்பு அல்லது அனுமதிக்கப்பட்ட ஏதாவதொரு செயன்முறை விதிக் கோவை மற்றும் அத்தகைய இரகசியத் தகவல்களுக்கான அணுகுமுறை ஆகிய அம்சங்கள் ஆணைக்குழு அனுமதித்தவாறு, இல்லையெனில் புறம்பாக விலக்களிக்கப் பட்ட தரப்பினால் இரகசியமாகப் பேணப்படுகின்றனவா என்பதையும் ;

(ஆ) இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது அனுமதிக்கப்பட்ட ஒரு செயன்முறை விதிக்கோவையினால் அனுமதிக்கப்பட்ட ஒரு நோக்கத்திற்காக அல்லது தகவல்கள் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக அன்றி ஏதாவதொரு பிற நோக்கத்திற்காகப் பயன் படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும் ;

(இ) இந்த அனுமதிக்கப்பட்ட மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையில் அடங்கிய ஒரு சேவை தவிர ஏதாவதொரு சேவையின் ஏற்பாட்டில் ஏதாவதொரு வர்த்தக அனுகூலத்தின் நிமித்தம் பயன்படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும்

உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நிபந்தனை 12: பிணக்குகள் தீர்த்தல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஒரு வரித்தீர்வை வாடிக்கையாளருக்கும், தனக்கும் இடையில் எழுகின்ற தீர்க்க இயலாதவொரு பிணக்கை இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யலாம் ;

(ஆ) இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்க்க இயலாதவொரு பிணக்கை 1 (அ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவொரு பிணக்குத் தவிர்ந்த) அத்தகைய விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் 1995ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்திற்கு இணங்க குறித்த பிணக்கைக் குறிப்பீடு செய்யுமாறு பணிக்கப்படும் நடுத்தீர்ப்புக் குழுவுக்கு அல்லது நீதிமன்றத்திற்கு குறிப்பீடு செய்யலாம்.

**பாகம் III மின்சாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான விஷேட நிபந்தனைகள்**

**நிபந்தனை 13: விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - விதிமுறைகளை விதிப்பதற்கான தேவைப்பாடு**

1. 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பில் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள, விலக்களிப்புக் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் ஏதாவது உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் மின்சார இணைப்பை வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும்:,

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான ஒரு மின்சார இணைப்பை மாற்றுவதற்காக ஒரு விண்ணபத்தை சமர்ப்பித்துள்ள ஏதாவது தரப்புடன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கானவொரு மின்சார இணைப்பை மாற்றுவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும்.

உள்ளாக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை சாத்தியமான முறையில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஒப்பந்தமொன்று தொடர்பில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், விதி முறைகளை வகுத்தமைக்கும் நோக்கங்களுக்காக நியாயமான விதத்தில் தேவைப் படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளிட்டவொரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் விதிமுறைகளை வகுத்தமைக்க வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனின் பயனாகவும், ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படுவதற்கென நியாயமான ரீதியில் உத்தேசிக்கப்பட்ட பாவனையின் பயனாகவும், குறிப்பீடு செய்யப்பட்ட அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் எவரேனுமொரு உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் ஒப்பந்தத்திற்குள்ளாகக் கடமைப்படுத்தப்பட மாட்டாது. எனினும், விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதன் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்குமாறு அல்லது மீளப் பலப்படுத்துமாறு தேவைப் படுத்தப்படும் பட்சத்தில், அந்தத் தரப்பு அவ்வாறு செய்யவில்லை எனில், சகல சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, பொது மக்களின் நலன் கருதி அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்க அல்லது மீளப் பலப்படுத்தத் தேவைப் படுத்தப்படலாம்.

4. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த மின்சார இணைப்பானது அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் பாதுகாப்புக்கும் ஸ்தீரத்தன்மைக்கும் ஆபத்தாக அமையுமென்றிருக்குமிடத்து, மின்சார இணைப்பை மேற்கொள்கின்ற அந்தத் தரப்புடன் ஏதாவது ஒப்பந்தத்திற்குள்ளாகுமாறு கடமைப்படுத்தப்பட மாட்டாது.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப அல்லது இயக்க விதிக்கோவைகளை அல்லது:,

(ஆ) குறித்த சட்டத்தை அல்லது குறித்த சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளை:, அல்லது

(இ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு ஏற்புடைய பாதுகாப்பு விடயத்துடன் அல்லது நியமங்களுடன் தொடர்புடைய ஏதாவது சட்டவாக்கத்தை:, அல்லது

(ஈ) ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஏதாவது பிற நிபந்தனைகளை மீறுவதற்கு அநேகமாக அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை ஆளாக்கும் ஏதாவதொரு தரப்புடன் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகக் கூடாது.

6. 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஏதாவதொரு தரப்புடன் ஒப்பந்தத்திற்கு உள்ளாகுவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு மறுக்குமிடத்து, முடியுமான வரையில் சாத்தியமான முறையில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், அந்தத் தரப்பிடமிருந்து ஒரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அந்தத் தரப்புக்கு அறியப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 14: விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள்**

1. குறித்த நோக்கம் தொடர்பில் நியாயமானதாக அமைய வேண்டும் என ஆணைக்குழுவுக்குத் தென்படுகின்ற ஒரு காலப் பகுதியின் பின்னர், 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, ஒரு விண்ணப்பத்தைத் தொடர்ந்து, அதற்கு உரித்தான அல்லது உரித்தெனக் கோருகின்ற ஏதாவதொரு தரப்புடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு ஒரு ஒப்பந்தத்திற்கு உள்ளாகத் தவறியுள்ளது என்றிருந்தால், ஆணைக்குழு, அத்தகைய தரப்பின் அல்லது அந்த விலக்களிக்கப் பட்ட தரப்பின் விண்ணப்பத்தின் பேரில், பிரச்சினைக்குரிய குறித்த தரப்புக்கும், விலக்களிக்கப் பட்ட தரப்புக்கும் இடையில் பிணக்கிலுள்ள ஏதாவது ஒப்பந்த நிபந்தனைகளை, நியாயமானதாகவிருக்கும் எனத் தனக்குத் தோன்றுகின்றவொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

2. ஆணைக்குழுவினால் தீர்த்து வைக்கப்பட்டவாறு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏதாவது தனது நடவடிக்கையைத் தொடர விரும்பினால், விலக்களிக்கப்பட்ட தரப்பு தாமதியாது உடனடியாக அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகி அதன் விதிமுறைகளுக்கு இணங்க அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு அல்லது 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பான அல்லது மின்சார இணைப்பு மாற்றம் தொடர்பான ஒரு ஒப்பந்தத்திற்கான தரப்புகளில் ஏதாவதொரு தரப்பு, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில் அத்தகைய ஒப்பந்தத்தின் ஒப்பந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசித்தால், அத்தகைய ஒப்பந்தத்திற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது அல்லது பிற தரப்பினது வேண்டுகோளின் பேரில், ஆணைக்குழு, தனக்கு நியாயம் எனத் தென்படும் ஒரு விதத்தில், அத்தகைய மாற்றம் தொடர்பில் நிலவும் ஏதாவது பிணக்கைத் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 15: விலக்களிக்கப்பட்ட தரப்பினது பகிர்ந்தளிப்பு முறைமைக்கு பாரபட்சமற்ற முறையில் மின்சார இணைப்பை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு மின்சார இணைப்பை வழங்கும் அல்லது அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பை நிறுத்தும் நோக்கத்திற்கான பணிகளை மேற்கொள்வதில், விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் ;

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஏதேனும் துணை நிறுவனத்திற்கு அல்லது மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்கு மற்றும் எவரேனும் நபருக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் பாரபட்சம் காட்டக் கூடாது.

**நிபந்தனை 16: விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் அடிப்படை**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்வில், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்ற பின்னர், 28 நாட்களுக்குள், அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்ற அடிப்படையை எடுத்துரைக்கின்றதும், அந்த மின்சார இணைப்பு தொடர்பில் பிணை வைப்புகளைத் தேவைப் படுத்துகின்றதுமானவொரு கூற்றைத் தயாரித்து ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழமையாக மீளாய்வுக்கு உட்படுத்தலாம். அதே நேரம் 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றுப் படிவத்தை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த விலக்களிப்புக் கட்டளை செல்லுபடியாகும் காலத்தில், ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் திருத்தத்திற்கும் உட்படுத்தலாம். கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் தொடர்ந்தும் சகல விதத்திலும் செவ்வையாக அமைய வேண்டும் என்பதற்காக அத்தகைய தகவல்களை மீளாய்வு செய்யலாம்.

3. அட்டவணை 1 இல் விவரிக்கப்பட்ட வளாகத்தினுள் ஒரு மின்சார விநியோகத்தைத் தேவைப் படுத்துகின்ற ஒரு தரப்புக்கு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் ஏதாவதொரு மின்சார விநியோகம் வழங்கப்படுமிடத்து, மின்சார விநியோகத்தை வழங்குவதில் தனக்கு நியாயமாக ஏற்பட்ட அத்தகைய அளவுக்கு, செலுத்தப்பட வேண்டிய, மின்சார விநியோகத்தை வழங்குவதில் ஏற்பட்ட ஏதாவது செலவை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்தும் தரப்பைச் செலுத்துமாறு தேவைப் படுத்தலாம்.

4. விலக்களிக்கப்பட்டவொரு தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, ஆககக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஏதாவதொரு தரப்பைக் கோரலாம்.

இந்த நிபந்தனையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதாவதொரு தரப்பினால் அத்தகைய பிணை வழங்கப்படவில்லை அல்லது அத்தகைய தரப்பினால் வழங்கப்பட்ட பிணை போதுமானதாகக் காணப்படவில்லை எனுமிடத்து:-

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, அதாவது ஆககக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை அத்தகைய அறிவித்தலின் பின்னர் ஏழு நாட்களுக்குள் வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் குறித்த தரப்பைக் கோரலாம் ;

(ஆ) குறித்த தரப்பு அத்தகைய பிணையை வழங்கத் தவறும் பட்சத்தில், அந்தத் தவறுகை தொடர்ந்துமிருக்கும் வரை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார இணைப்பை வழங்க மறுக்கலாம் அல்லது மின்சார விநியோகத்தைத் துண்டிக்கலாம்;

(இ) விலக்களிக்கப்பட்டவொரு தரப்புக்கு, இந்த நிபந்தனைக்கு இணங்க பிணை வழியில் ஏதாவதொரு பணத் தொகை வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பணத் தொகை விலக்களிக்கப்பட்ட தரப்பின் கைவசமிருக்கும் காலம் தொடர்பில், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அவ்வப்பொழுது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் நிர்ணயிக்கப் படலாமெனும் அத்தகைய வீதத்தில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பணத் தொகை மீதான வட்டியைச் செலுத்த வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றினதும் இன்னும் 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் ஒவ்வொரு திருத்தத்தினதும் பிரதியை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு திருத்தத்திற்கும் ஆணைக் குழுவின் அங்கீகாரம் அவசியம் என்பதுடன், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வரை அத்தகைய திருத்தம் செயல்வலுப் பெற மாட்டாது.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பு, அத்தகைய கூற்றின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் நபருக்கு, 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கூற்றின் அல்லது (விடயம் இவ்வாறிருக்கலாம் எனும் நிலையில்) அத்தகைய பந்திக்கு இணங்க ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் புதிய திருத்தத்தின் பிரதியை வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 ஆம் பந்திக்கு இணங்க தான் வழங்கிய அல்லது அனுப்பி வைத்த ஏதாவதொரு கூற்றின் பிரதி தொடர்பில், இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் தொகையை விஞ்சாத, அத்தகையதொரு கூற்றின் பிரதியை வழங்கும் விலக்களிக்கப்பட்ட தரப்பினது நியாயமான ஆகுசெலவை ஈடுசெய்யக்கூடியவொரு கட்டணத் தொகையை அறவிடலாம்.

**நிபந்தனை 17: மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுக்கும், மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையில் இயற்கையாகவே நிலவுகின்ற தொழில்நுட்பமும் தொழில்நுட்பம் சாராததுமான இழப்பீடுகள் ;

(ஆ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு இணைக்கபட்டிருக்கின்ற மின்பிறப்பாக்கிகளின் (ஏதுமிருப்பின்) மூலம் வழங்கப்படுகின்ற மின்சக்தி ;

(இ) புதிதாக வழங்கப்படும் மின்சார இணைப்புகளின் தாக்கம் ;

(ஈ) கேள்வி முகாமைத்துவத்தின் தாக்கம் ;

(உ) வித்தியாசமான நுகர்வோர் வகுதிகளினது மின்பளு சிறப்பம்சங்கள் ஆகிய விபரங்கள் உள்ளிட்ட, மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்தும் அத்தகைய தேவைப்பாட்டு கேள்விசார் குறிப்பிலிருந்தும் வரும் தனது சக்திக்கான எதிர்காலத் தேவைப்பாட்டை எதிர்வுகூறப் போதிய பதிவுகளைப் பேண வேண்டும்.

2. முழு மின்சார முறைமையினதும் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாடு, ஒருங்கிணைந்த அபிவிருத்தி, உள்ளக–இயக்கத்திறன் என்பவற்றைப் பேணுவதற்கும், அவற்றை உறுதிசெய்து கொள்வதற்கும், மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினாலும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளினாலும் நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய தகவல்கள் அல்லது எதிர்வுகூறல்கள் என்பன நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய காலங்களிலும் அத்தகைய விதத்திலும் மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புக்கும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் அந்தத் தகவல்களை அல்லது அந்த எதிர்வுகூறல்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்க வேண்டும்.

3. இந்த நிபந்தனையில்:

"முழு முறைமைகள்" முழு முறைமைகள் என்பது, மின்சார செலுத்துகை முறைமை, அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை மற்றும் ஒன்றாகக்கொள்ளப்படும் மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய சகல தரப்புகளினதும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை யாவும் எனப் பொருள்படும்.

**பாகம் IV மின்சார விநியோகம் தொடர்பான விசேட நிபந்தனைகள்**

**நிபந்தனை 18: மின்சார விநியோகத்தில் நிகழும் பாரபட்சத்தைத் தடுத்தல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் அல்லது மின்சார விநியோகம் தொடர்பில் விதிமுறைகளை விதிப்பதில்:

(அ) எவரேனும் நபருக்கு அல்லது நபர்கள் வகுதிக்கு பாரபட்சம் காட்டவும் ;

(ஆ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர்கள் வகுதிகளுக்கு இடையில் பாரபட்சத்தைப் பிரயோகிக்கவும் ;

(இ) நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகளை விதிக்கவும்,

கூடாது.

2. இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, குறித்த விதிமுறைகளின் பேரில் நுகர்வோருக்கு விநியோக்கின்ற மின்சாரத்திலிருந்து வரும் வருமானம், அந்த மின்சார விநியோகத்தின் ஆகுசெலவை கணிசமானளவு விஞ்சுமாயின், அந்த விதிமுறைகள், நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகள் எனக் கருதப்படும்.

3. இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு, பிரச்சினையிலுள்ள நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதன் பயனாக ஏற்பட்ட ஆகுசெலவுகளை நியாயமான விதத்தில் உள்ளீர்க்காத கட்டணங்களுடன் அத்தகைய விதிமுறைகள் கூட்டிணைகின்றனவா என்பது தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தி, நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற ஏதேனும் பிரச்சினைக்குரிய விடயத்தைத் தீர்மானிக்கும்.

*4* **இந்த நிபந்தனையில் :**

"விதிமுறைகள்" விதிமுறைகள் என்பது அந்த மின்சார விநியோக மதிப்பீட்டை கணிசமானளவு பாதிக்கின்ற விலைக்கான விதிமுறைகள் உள்ளிட்ட மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றமை அல்லது வழங்கப்படுகின்றமை தொடர்பான சகல விதிமுறைகளும் எனப் பொருள்படும்.

**நிபந்தனை 19: மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணை**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்விலும், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்றதன் பின்னரும், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வெளியிடப்படும் வழிகாட்டல்களில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் திகதி கழிய முன்னரும், இன்னும் அதன் பின்னரும் காலத்திற்குக் காலம், நுகர்வோருக்கான மின்சார விநியோகங்கள் தொடர்பான ஒரு வரித்தீர்வை அட்டவணையைத் தயாரித்து வழங்க வேண்டும்.

*2.* இந்த வரித்தீர்வை அட்டவணையானது:

(அ) ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படுமொரு அமைப்பிலும்,

(ஆ) யாரேனுமொரு நுகர்வாளரை மின்சாரக் கொள்வனவுகள் தொடர்பில் செலுத்தக் கடமையாகக்கூடிய கட்டணங்களின் நியாயமானவொரு மதிப்பீட்டை மேற்கொள்ளும் வகையில் இயலச் செய்வதற்கு அவசியமெனும் விபரங்களை உள்ளடக்கியதாகவும்,

(இ) குறிப்பீடு செய்யப்பட்ட பகல், இரவு நேரங்களில், வார நாட்களில், ஆண்டு காலங்களில் மின்சாரத்தை வழங்குவதிலான விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஆகுசெலவுகளை ஈடுசெய்யும் வகையிலும், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை அறவிட அனுமதிக்கின்ற, இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை வினைத் திறன் வாய்ந்தவொரு அடிப்படையில் நிறைவேற்றுவதிலான சகல நியாயமான ஆகுசெலவுகளையும் உள்ளீர்க்கும் வகையிலும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு முறையியலுக்கு இணங்கவும்,

(ஈ) தனித்தனியாக:

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையினது பாவனை தொடர்பான வரித்தீர்வை,

(ii) முன்கூட்டிய அல்லது அவசரதேவை மின்பிறப்பாக்கிச் செயற்பாட்டு பராமரிப்பு ஆகுசெலவு,

(iii) மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை இயக்க முகாமைத்துவ பராமரிப்பு ஆகுசெலவு ஆகிய ஆக்கக்கூறுகளைக் கண்டறியக்கூடிய வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

*3.* விலக்களிக்கப்பட்ட தரப்பினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வரித்தீர்வைகளின் சிக்கல் வாய்ந்த தன்மையின் அல்லது நுகர்வாளர்களின் புரிந்துகொள்ளும் அறிவாற்றலின் நிமித்தம் இலகுவான விளக்கக் கூற்றுக்கள் தேவைப்படுகின்றன என ஆணைக்குழு கருதுமிடத்து, அத்தகைய விளக்கக் கூற்றுக்களைத் தயாரித்து, அதன் பின்னர் அந்த விளக்கக் கூற்றுக்களை வரித்தீர்வை அட்டவணையுடன் சேர்த்துப் பிரசுரிக்குமாறு ஆணைக்குழு விலக்களிக்கப்பட்ட தரப்பைப் பணிக்கலாம்.

*4.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்திற்கான ஆணைக்குழுவினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*5.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தின் (அவ்வப்பொழு திருத்தப்பட்டவாறான) ஒரு பிரதியை, அந்தத் திட்டத்தை ஏதாவது பிற நபருக்குக் கிடைக்கச் செய்வதற்கு முன்னர், 14 நாட்கள் கழிய முன்னர், ஆணைக்குழுவுக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

*6.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையைப் பிரசுரிக்க வேண்டும்.

*7.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, (8 ஆம் பந்திக்கு அமைய) மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை, அதனை அவசியம் எனக் கோரும் யாரேனும் நபருக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

*8. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 7 ஆம் பந்திக்கு இணங்க, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை வழங்குவது அல்லது அனுப்பி வைப்பது தொடர்பில், ஆணைக்குழுவினால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிகாட்டல்களில், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக தற்காலிகமாகக் குறிப்பீடு செய்யப்படுகின்ற தொகையை விஞ்சாத ஒரு கட்டணத் தொகையை அறவிடலாம்.*

*9. வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய விதத்தில் அல்லது அந்த வழி காட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாம் எனும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்காக மின்சார விநியோகம் தொடர்பான குறித்த வரித்தீர்வை அட்டவணையின் அமைப்பை மாற்றுமாறு விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு ஆணைக்குழு பணிப்புரைகளை விடுக்கலாம் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு, உடனடியாக ஏதேனும் அத்தகைய பணிப்புரைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.*

*10. ஆணைக்குழு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையின் மீளாய்வு பற்றிய ஒரு நடைமுறையைக் குறிப்பீடு செய்யலாம்.*

***நிபந்தனை 20: மின்சார பகிர்ந்தளிப்பும் விநியோகமும் தொடர்பான வரித்தீர்வை ஒப்பந்தம்***

*1. விலக்களிக்கப்பட்ட தரப்பு (கீழ்காணும் 3 ஆம் பந்திக்கும், 14 ஆம் நிபந்தனைக்கும் அமைய), ஒரு மின்சார நுகர்வாளராக ஆகுவதற்கு எண்ணுகின்ற எவரேனுமொரு மின்சார நுகர்வாளருடன் அல்லது நபருடன் ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும். விலக்களிக்கப்பட்ட தரப்பு அவ்வாறு உள்ளாகும் அந்த ஒப்பந்தமானது, அத்தகைய மின்சார விநியோகங்கள் தொடர்பில் ஆக்கப்பட வேண்டிய கட்டணங்களுக்கும், மேலே கூறப்பட்ட 19 ஆம் நிபந்தனையில் நிர்ணயிக்கப்பட்ட வரித்தீர்வை அட்டவணைக்கான குறிப்பாக அமைய வேண்டிய அத்தகையதொரு விதத்தில் முன்வைக்கப்பட வேண்டிய அத்தகைய கட்டணங்களுக்குமான ஏற்பாடுகளை வழங்குவதாகவும் அமைய வேண்டும்.*

*2. குறித்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை வகுத்தமைக்கும் நோக்கம் தொடர்பில் விலக்களிக்கப் பட்ட தரப்பு நியாயமானளவில் தேவைப்படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளடங்குகின்ற ஒரு விண்ணப்பம், விலக்களிக்கப்பட்ட தரப்பினால் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர், ஏதாவதொரு நிகழ்வில் முடியுமான வரை சாத்தியமான விதத்தில் (ஒரு நீண்ட காலப் பகுதியை ஆணைக்குழு வழங்குகின்றவிடத்து) 1 ஆம் பந்திக்கு இணங்க, குறித்த விலக்களிக்கப் பட்ட தரப்பு ஒப்பந்தங்களுக்கான விதிமுறைகளை முன்வைக்க வேண்டும்.*

*3. இந்த நிபந்தனைக்கு இணங்க ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கு அல்லது உள்ளாக முனைவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு கடமைப்படுத்தப்பட மாட்டாது. எனினும் குறித்த விலக்களிக்கப்பட்ட தரப்பு, அவ்வாறு அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகுமாயின் அல்லது முனையுமாயின்:*

*(அ) குறித்த சட்டத்தின் கீழுள்ள தனது கடமைகளை நிறைவேற்றத் தவறிய, அல்லது*

*(ஆ) குறித்த சட்டத்தின் அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் ஏற்புடைய பாதுகாப்பு அல்லது நியமங்கள் தொடர்பான ஏதாவது பிற சட்டவாக்கத்தின் ஏதாவது ஒழுங்குவிதிகளை மீறிய, அல்லது*

*(இ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது நிபந்தனைகளை மீறிய, அல்லது*

*(ஈ) அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை மீறிய தரப்பாகக் கருதப்படும்.*

*4. 25 ஆம் நிபந்தனைக்கு இணங்க உள்ளான ஒப்பந்தம் தொடர்பான சரியான வாசகங்கள் உள்ளடங்கினால் இந்த நிபந்தனைக்கு இணங்க ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது கடப்பாடு திருப்தி கொள்ளப்படும்.*

***நிபந்தனை 21 வளாகங்களுக்குள் பிரவேசித்தல்***

*1. இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் ஏதாவது வளாகங்களுக்குள் பிரவேசிப்பது பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்பு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் அது குறித்து அறிவித்தல்களை விடுக்க வேண்டும் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கும்:-*

*(i) மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயல்களின் தன்மையையும் அளவையும் சாத்தியமான விதத்தில் முழுமையாகவும் செவ்வையாகவும் குறிப்பிட்டு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உத்தேச பிரவேசம் பற்றிய மூன்று நாள் அறிவித்தல் விடுக்கப்படாத ;*

*(ii) அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் தனக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கான சான்று முன்வைக்கப்படாத ;*

(iii) குறித்த பிரவேசத்தினால் ஏற்படும் ஏதாவது இடையூறு, பாகங்களிப்பு அல்லது பாதிப்பு தொடர்பில் காணியின் அல்லது வளாகத்தின் உரிமையாளருக்கு நியாயமான நஷ்டஈடு செலுத்தப்படாத

வரையில் வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கு உரிமை கிடையாது.

2. 1 (அ) என்ற உப பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு அறிவித்தல் விடுப்பு நோக்கத்திற்காக அதன் சார்பில் எழுத்தில் அந்த அறிவித்தலை விடுக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு குறித்த காணியினுள் பிரவேசிப்பதற்கு உரித்துண்டு.

3. இந்த விடயத்தினால் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத்தத்துவங்களை எவரேனுமொரு நபர் பிரயோகிக்குமிடத்து, எழுத்தில் அந்த நபரினால் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பு அல்லது, விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பிரவேசத்தின் விளைவாக வளாகங்களுக்கு ஏற்பட்ட ஏதாவது பாதிப்பை ஈடுசெய்ய வேண்டும்.

4. இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அல்லது அதன் கீழ் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத் தத்துவத்தைக் கொண்டு வளாகத்தினுள் பிரவேசிப்பதனால் அந்த வளாகத்திற்கு அல்லது ஏதேனும் அசையும் ஆதனங்களுக்கு, வளாகத்தில் அல்லது அசையும் ஆதனங்களில் அக்கறையுடைய எவரேனும் நபருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், எந்தத் தரப்பின் சார்பாக அதிகாரத்தத்துவம் பிரயோகிக்கப்படுகின்றதோஅதாவது, அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து அத்தகைய பாதிப்புக்கான நஷ்டஈட்டைக் கோரி அறவிடலாம். அத்தகையதொரு அதிகாரத்தத்துவத்தைப் பிரயோகிப்பதன் விளைவாக நபர் ஒருவருக்கு அவரது ஏதேனும் வளாகத்தை அனுபவிக்கும் உரிமைக்கு அல்லது அசையும் ஆதனங்களுக்கு இடையூறு ஏற்படுமிடத்து, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அந்த இடையூறு தொடர்பில் விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து நியாயமான நஷ்டஈட்டை அந்த நபருக்கு கோரி அறவிட்டுக் கொள்ளலாம்.

**அட்டவணை 1**

2009.09.03 ஆந் திகதிய ME/ PBP/ BA/41/ 8 என்ற குறிப்பு இலக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்தின் பிரகாரம் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தினது கொழும்பு மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள வளாகம்.

5- 626/2

---

**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்

**10 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் விலக்களிப்புக் கட்டளை**

**1. விலக்களிப்பு வழங்கல் :**

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பீடு செய்யப்படும்), 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10 (1) ஆம் பிரிவினால் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்களைக் கொண்டு, இலக்கம் 200, யூனியன் இடம், கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள யூனியன் ரெசிடன்சீஸ் (ப்ரைவட்) லிமிட்டெட் நிறுவனத்திற்கு (இதனகத்துப் பின்னர் விலக்களிக்கப்படும் தரப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்), இந்தக் கட்டளையில் உள்ளடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைய,

இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 1 இல் முழுமையாக விபரிக்கப்பட்ட இலக்கம் 200, யூனியன் இடம், கொழும்பு 02, என்ற முகவரியில் அமைந்துள்ள தனது வளாகத்தினுள் மின்சாரத்தைப் பகிர்ந்தளித்து விநியோகிப்பதற்கு அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அல்லது விநியோகிப்பதற்கு என்ற வரையறுக்கப்பட்ட நோக்கம் தொடர்பில் ஒரு அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான அதன் தேவைப்பாட்டிலிருந்து இத்தால் அதனை விலக்களிப்புச் செய்கின்றது.

**2. அங்கீகாரங்கள்**

இவ்வாறு விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பையும் மின்சார விநியோகத்தையும் மேற்கொள்ளுவதற்கான, ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகள், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் குறித்த ஏற்பாடுகளுக்கு வரையறுக்கப்படாத விடயங்கள் என்பவற்றின் கீழ், தேவையான சகல அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**3. விலக்களிப்பு பற்றிய நியதி**

இத்தால் வழங்கப்படும் விலக்களிப்பானது, கீழே காணப்படும் விலக்களிப்புக் கட்டளையிலுள்ள இரத்துச் செய்தல் மற்றும் விலக்களிப்பு வாபஸ்பெறல் தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைய இரத்துச்செய்யப்படாத அல்லது வாபஸ்பெறப்படாத வரையில், 2012.01.26 ஆம் நாள் செயல்வலுப் பெறும் என்பதுடன், அந்த 2012.01.26 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ஐந்து (05) வருட காலமொன்றுக்கு முற்றிலும் செயல்வலுப் பெற்று நடைமுறையிலுமிருக்கும்.

**4. விலக்களிப்பை இரத்துச்செய்தலும் வாபஸ்பெறுதலும் :**

இந்த விலக்களிப்பானது, குறித்த சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க இரத்துச்செய்யப்படலாம் அல்லது வாபஸ்பெறப்படலாம்.

கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா,
தலைவர்,
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

***விலக்களிப்பு பற்றிய நிபந்தனைகள்***

நிபந்தனை 1 : பொருளும் பொருள்கோடலும்

1. முரண்பட்ட பொருள் எழாத வரையில்:

(அ) குறித்த நிபந்தனைகளில் அல்லது அட்டவணையில் பிரயோகிக்கப்பட்ட சொற்கள் அல்லது சொல்வாசகங்கள் சட்டவாக்கமொன்றிலும் மற்றும் அந்த வாசகங்களுக்கு ஏற்புடைத்தான பொருள்கோடல் சட்டங்களிலும் காணப்பட்டவாறு பொருள் கொள்ளப்படும் என்பதுடன் ;

(ஆ) ஒரு சட்டவாக்கத்திற்கான குறிப்பீடுகள், இந்த விலக்களிப்புக் கட்டளை செயல்வலுப் பெறும் நாளின் பின்னர் மேற்கொள்ளப்படும் அந்த சட்டவாக்கதின் ஏதாவது திருத்தம் அல்லது மறுசட்டமாக்கல் ஆகிய இரண்டிலும் அடிப்படையாகவும், துணையாகவும் அமைகின்ற சட்டவாக்கத்தை உள்ளடக்கியிருக்கும்.

2. முரண்பட்ட பொருள் எழாத வரையில், குறித்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது நோக்கத்தின் நிமித்தம் சட்டத்தில் தெளிவாக விவரிக்கப்பட்ட ஏதாவது சொல் அல்லது சொல்வாசகங்கள் குறித்த அட்டவணையில் அல்லது நிபந்தனைகளில் பிரயோகிக்கப்பட்ட நேரத்திலிருந்த முரணற்ற அதே கருத்தைக் கொண்டிருக்கும்.

3. நிபந்தனைகளிலும் அட்டவணையிலும் குறிப்பிடப்படாத அல்லது தேவைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் :

| | |
|---|---|
| "இணைத்தரப்பு" | விலக்களிக்கப்பட்ட தரப்பு தொடர்பில், இணைத்தரப்பு என்பது, ஒவ்வெரு விடயத்திலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது முதலீட்டுக் கம்பனி அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது துணை நிறுவனம் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் முதலீட்டுக் கம்பனியொன்றின் ஏதாவது துணை நிறுவனம் எனப் பொருள்படும். |
| "அங்கீகரிக்கப்பட்டது" | அங்கீகரிக்கப்பட்டது என்பது, 4, 9, 13, 16, 19 மற்றும் 20 ஆம் நிபந்தனைகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும். மேலும் "அங்கீகாரம்" என்ற பதமும் அதையொத்த ஒரு கருத்தையே கொண்டிருக்கும். |
| "அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு " | அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியானவொரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும். |

| | |
|---|---|
| "மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை" | மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை என்பது, பிரதானமாக மேன்தலை மின்சார மார்க்கங்கள், நிலக்கீழ் கேபல்கள், மின்சார சேவை மார்க்கங்கள், மின்மாற்றிகள், மாணி வாசிப்புக் கருவிகள், மற்றும் வடிவமைக்கப்பட்ட 33kv (பேஃஸ் கடத்திகளுக்கு இடையில்) அல்லது அதற்குக் குறைவான மின்விசை அடங்கிய ஏனைய துணை மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன உள்ளிட்ட விலக்களிக்கப்பட்ட தரப்புக்குச் சொந்தமானதும், அந்தக் குறித்த தரப்பினால் இயக்கப்படுகின்றதுமானவொரு மின்சார முறைமையைப் பயன்படுத்துகின்றவொரு மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து அல்லது மின்னுற்பத்திப் பொறித்தொகுதி களிலிருந்து அல்லது ஏனைய கொள்வனவுப் புள்ளிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப் படுகின்ற மின் சக்தியை, 33kV அல்லது அதற்குக் குறைவான மின் விசையொன்றில் மின்சார விநியோகத்தைப் பெறுவதற்கு விருப்பமுடைய முடிவுப் பயனரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குநர்களின் மின்சார விநியோக இடங்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கான மின்சார அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினது அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கை எனப் பொருள்படும். |
| "விலக்களிக்கப்பட்ட தரப்பு" | மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கவும் விநியோக்கவும் அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்க அல்லது விநியோக்க குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தரப்பு எனப் பொருள்படும். |
| "மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு" | மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு என்பது, மின்சார பகிர்ந்தளிப்பு நடவடிக்கையில் அல்லது மின்சார விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் ஏதேனுமொரு தரப்பு எனப் பொருள்படும். |
| "முதலீட்டுக் கம்பனி" | முதலீட்டுக் கம்பனி என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தினுள் வரும் ஒரு கம்பனி எனப் பொருள்படும். |
| "விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை" | விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமை என்பது, இதற்கான அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட வளாகத்தினுள், மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து பாகமாக உருவாகுகின்ற மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த, ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் பாகமெனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற அந்தத் தரப்புக் கொண்டிருக்கலாம் எனும் ஏதாவது பிற மின்சார மார்க்கங்களும், வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்லப் பயன்படுகின்ற விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது மின்பொறித்தொகுதி, மாணிவாசிப்புக் கருவிகள், மின்மாற்றிகள் மற்றும் ஆளிப்பலகை, உந்துகை என்பன உள்ளடங்கலாக விலக்களிக்கப்பட்ட தரப்பின் சகல மின்சார மார்க்கங்களும் எனப் பொருள்படும். |
| "அனுமதிப்பத்திரத் திருத்தம்" | அனுமதிப்பத்திரத் திருத்தம் என்பது, அதில் சேர்த்தல், நீக்குல், திருத்துதல் மற்றும் பிரதியீடு செய்தல் எனப் பொருள்படும். மேலும் அதங்கிணங்க ஒரே வகையான சொல்வாசகங்கள் பொருள் கொள்ளப்படவும் வேண்டும். |
| "இபொபஆச" | இபொபஆச என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும். |
| "சம்பந்தப்பட்ட நிறுவனம்" | சம்பந்தப்பட்ட நிறுவனம் என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள் வரும் ஏதாவது ஓரு நிறுவனம் எனப் பொருள்படும். |

"பிரதிநிதித்துவம்" — இங்கு பிரதிநிதித்துவம் என்பது, எழுத்தில் விடுக்கப்படும் ஏதேனும் ஆட்சேபனை அல்லது பிரேரணை எனப் பொருள்படும்.

"துணை நிறுவனம்" — இதற்கு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தில் வழங்கப்பட்ட பொருளுண்டு. மேலும், அதற்கிணங்கவே "துணை நிறுவனங்கள்" வரைவிலக்கணப்படுத்தப்படவும் வேண்டும்.

"மின்சார செலுத்துகைக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு" — மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (இ) (i) (ஆ) பிரிவின் கீழ், மின்சார செலுத்துகைக்கான ஒரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார செலுத்துகை முறைமை" — மின்சார செலுத்துகை முறைமை என்பது, பாரியளவில் மின்சாரத்தை நுகரும் கட்டிட வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படும் (ஆனால் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் ஏதாவது பாகமாக வருகின்ற அத்தகைய ஏதேனும் மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த) சகல மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்கள் அடங்கலாக, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து உப-மின் நிலையமொன்றுக்கு, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து மற்றுமொரு மின்னுற்பத்திப் பொறித் தொகுதிக்கு அல்லது உப-மின் நிலையமொன்றிலிருந்து மற்றுமொரு உப-மின் நிலையத்திற்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படுகின்ற மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்களையும், மின் பொறித்தொகுதியையும் (முழுமையாக அல்லது பிரதானமாக) கொண்டிருக்கின்ற மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினால் இயக்கப்படுகின்ற அந்தத் தரப்புக்கு உரித்தான மின்சார முறைமை எனப் பொருள்படும்.

4. குறிப்பீடு செய்யப்படாத வரையில்:

(அ) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு நிபந்தனைக்கான அல்லது இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு அட்டவணைக்கான ஏதாவதொரு குறிப்பானது, முறையே இந்த விலக்களிப்புக் கட்டளையில் இலக்கம் குறிக்கப்பட்ட நிபந்தனைக்கான அல்லது அட்டவணைக்கான ஒரு குறிப்பாக விளங்கும் ;

(ஆ) இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கான ஏதாவதொரு குறிப்பானது, குறிப்பு நிகழும் அட்டவணையிலுள்ள அந்த இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கானவொரு குறிப்பாக விளங்கும்.

(இ) இலக்கம் குறிக்கப்பட்டவொரு பந்திக்கான ஏதாவதொரு குறிப்பானது, அந்தக் குறிப்பு நிகழும் நிபந்தனையில் அல்லது வாசகத்தில் இலக்கம் குறிக்கப்பட்ட பந்திக்கானவொரு குறிப்பாக விளங்கும்.

அத்தகைய வித்தியாசத்தை, குறைநிரப்பலை அல்லது மீள்நிரப்பலை வரையறுக்கின்ற ஏதேனுமொரு ஏற்பாட்டிற்கு முரணற்ற விதத்தில், ஏதேனுமொரு ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, (இந்த விலக்களிப்புக் கட்டளை தவிர்ந்த), விதிமுறைக்கான அல்லது பிற பத்திரத்திற்கான ஏதேனுமொரு குறிப்பானது, அத்தகைய ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, விதிமுறைக்கான அல்லது அவ்வப்பொழுது வேறுபடுகின்ற, குறைநிரப்பப்படுகின்ற அல்லது மீள்நிரப்பப்படுகின்ற பிற பத்திரத்திற்கான குறிப்பொன்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

5. ஏதாவது ஒரு பகுதியின், நிபந்தனையின், அட்டவணையின் அல்லது பந்தியின் தலையங்கம் அல்லது தலைப்பு அதன் கட்டமைப்பைப் பாதிக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும்.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதேனுமொரு கடப்பாட்டை, குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கால வரையறையினுள் நிறைவேற்றுமாறு தெரிவிக்கப் படுமிடத்து, விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கால வரையறையினுள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால் (ஆனால், குறித்த கால வரையறையினுள் விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறியமை தொடர்பில் நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படுவதன் பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு கிடைக்கக் கூடிய அனைத்து உரிமைகளுக்கும் பரிகாரங்களுக்கும் முரணற்ற விதத்தில்) குறித்த கடப்பாடானது, குறித்த கால வரையறையின் பின்னரும் கூட தொடர்ந்தும் கடப்பாடுடையதாகவும், செயலாக்கக் கூடியதாகவுமிருக்கும்.

7. குறித்த சட்டத்திற்கும் இந்த விலக்களிப்புக் கட்டளைக்கும் இடையே ஏதாவது முரண்பாடு நிலவுமாயின், இந்தச் சட்டம் அத்தகைய ஏதாவது முரண்பாடளவுக்கு மேலோங்கி நிற்கும். இந்தச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள், குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விலக்களிப்புக் கட்டளையின் முழுமையானவொரு பாகமாகவுமிருக்கும்.

**நிபந்தனை 2: ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு தேவைப்படுத்தலாமெனும் தகவல்களை, ஆணைக்குழு தேவைப்படுத்தும் விதத்திலும், குறிப்பிடும் காலங்களிலும் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளின் விளக்கத்தில், குறித்த சட்டத்தின் கீழ் அல்லது இபொபஆ சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது மாற்றி ஒப்படைக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் அறிக்கைகளையும் தேடி முனைந்து வழங்கவும் வேண்டும்.

2. 1 ஆம் பந்தியின் பொதுக் கோட்பாட்டுக்கு முரணற்ற வகையில், தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கணக்கீட்டுத் தகவல்களை விட மிக விரிவான, அல்லது வித்தியாசமான தகவல்களை தனக்கு வழங்குமாறு ஆணைக்குழு அறிவிக்கலாம்.

3. 1 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல்களை அழைப்பதற்கான ஆணைக்குழுவின் அதிகாரத் தத்துவமானது, இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது பிற நிபந்தனையின் கீழும் அல்லது அந்த நிபந்தனைக்கு இணங்கவும் அல்லது குறித்த சட்டத்தின் கீழும், இபொபஆ சட்டத்தின் கீழும் அல்லது அந்தச் சட்டங்களுக்கு இணங்கவும், அல்லது பிற சட்டவாக்கத்தின் கீழும் அல்லது அதற்கு இணங்கவும் தகவல்களை அழைப்பதற்கான தனது அதிகாரத்தத்துவத்திற்கு முரணற்றதாகவிருத்தல் வேண்டும்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த விலக்களிப்பைப் பெற்று ஒரு மாத காலத்திற்குள், மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கைக்குப் பொறுப்பாக, தனது நிறுவனத்தில் ஒரு நபரை நியமிக்க வேண்டும்.

5. இந்த நிபந்தனையில் :

"தகவல்" என்பது, ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில், ஏதாவது விபரங்களை உள்ளிட்ட ஏதாவது புத்தகங்கள், ஆவணங்கள், பதிவுகள், கணக்குகள், மதிப்பீடுகள், விபரத் திரட்டுக்கள் அல்லது அறிக்கைகள் (குறிப்பாக ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத) எனப் பொருள்படும்.

**நிபந்தனை 3: ஆணைக்குழுவின் தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டிகள் மற்றும் நிர்ணயங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, விலக்களிப்புக் கட்டளைக்கு இணங்க, ஆணைக்குழு மேற் கொள்ளலாமெனும் ஏதாவது தீர்மானங்களுக்கும், கட்டளைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

2. அத்தகைய கட்டளைகளுக்கும், தீர்மானங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இணங்க சம்பந்தப்படுகின்ற ஏதாவது கிரயங்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு பொறுப்பேற்க வேண்டும்.

3. ஆணைக்குழு ஏதாவது கட்டளையை அல்லது தீர்மானத்தை வெளியிட்டால், விலக்களிக்கப்பட்ட தரப்பு அவற்றுக்கு இயைந்தொழுகி, ஆணைக்குழு தேவைப் படுத்துகின்ற விதத்தில் தனது ஆதனத்தை அணுக அல்லது கட்டுப்படுத்த ஆணைக்குழுவை அல்லது ஆணைக்குழுவின் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது பிற அதிகாரியை அல்லது நபரை அனுமதிக்க வேண்டும்.

**நிபந்தனை 4: தொழில்நுட்ப மற்றும் இயக்க விதிக்கோவைகளுடனான இணக்கப்பாடு**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், அவ்வப்பொழுது ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு, குறித்த தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளை, ஆணைக் குழு பொருத்தம் எனக் கருதும் ஏதாவது மின்சாரப் பணிகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்களுடனான ஆலோசனையுடன் தயாரித்துச் செயற்படுத்த வேண்டும்.

2. 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகள், செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. விலக்களிக்கப்பட்ட தரப்பு, உரிய தொழில்நுட்ப இயக்க விதிக்கோவையில் குறிப்பீடு செய்யப்பட்ட திருத்தல் நடபடிக்கைக்கு இணங்க, உரிய நேரத்தில் செயல்வலுப் பெறும் ஒரு விதிக்கோவைக்கான தனது திருத்தங்களை ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதன் மூலம் முன்மொழியலாம்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த நிபந்தனைக்கு இணங்க, தான் தயாரித்துச் செயற்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட சகல தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளினதும் பிரதிகளை (இதற்கான ஏதாவது திருத்தங்களுடன்):

(அ) ஆணைக்குழுவுக்கும்,
(ஆ) அதனைத் தேவைப்படுத்தும் எவரேனுமொரு நபருக்கும்

வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 (ஆ) பந்திக்கு இணங்க தான் வழங்குகின்ற அல்லது அனுப்பி வைக்கின்ற ஏதாவது விதிக்கோவையின் பிரதியொன்று தொடர்பில், ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில், இந்த நிபந்தனையின் நோக்கங்கள் தொடர்பில் தற்காலிகமாக குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது கட்டணத் தொகையை விஞ்சாதவொரு கட்டணத் தொகையை அறவிடலாம். விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதில் தனக்கு ஏற்புடையது எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளின் ஏற்பாடுகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

6. மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஏதாவது நிறுவனங்களிலிருந்து உரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் கிடைக்கும் ஆலோசனையைத் தொடர்ந்து, ஆணைக்குழு, விலக்களிக்கப்பட்ட தரப்பை 6 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிக்கின்ற, பொருத்தம் எனக் கருதும் வழிகாட்டல்களை, ஆணைக்குழு நிர்ணயிக்கலாமெனும் நிபந்தனைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, அந்த வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாமெனும் அளவுக்கு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளின் குறித்த பாகம் அல்லது பாகங்கள் தொடர்பில் கட்டளைகளை வெளியிடலாம்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுக் கிடைக்கச் செய்யப்படும் காலம் வரை, சகல செயற்பாடுகள் தொடர்பிலும், ஏற்கனவேயிருக்கின்ற தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.

**நிபந்தனை 5 : ஏனைய ஒப்பந்தங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு உரிய அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுடன் மின்சார இணைப்பு மற்றும் வரித்தீர்வை ஒப்பந்தங்கள் உள்ளிட்ட, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்ற பிற நபர்களுடனான ஏதாவது ஒப்பந்தங்களுக்குள்ளாக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பங்குபற்றத் தேவைப்படுத்தப்படும்.

3. ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டவொரு ஒப்பந்தத்திற்கு, விலக்களிக்கப்பட்ட தரப்பு உள்ளாகத் தவறியுள்ளது என உரிய நோக்கத்தின் நிமித்தம் நியாயமென ஆணைக்குழுவுக்குத் தோன்றுமொரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர், ஆணைக்குழு, அத்தகைய தரப்பினது அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினது விண்ணப்பத்தின் பேரில், பிணக்கிலிருக்கும் தரப்புக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் இடையில் ஒப்பந்த விதிமுறைகளில் நிலவும் ஏதாவது முரண்பாட்டை ஆணைக்குழுவுக்கு நியாயம் எனத் தோன்றுமொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 6 : விலக்களிப்புக் கட்டளையும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை உரிமை மாற்றலும்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக் குழுவின் முன்கூட்டிய எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையை முழுமையாக அல்லது பாகமாக சாட்டக் கூடாது.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை முழுமையாக அல்லது பாகமாக மற்றொரு தரப்புக்கு ("உரிமை மாற்றிப் பெறுபவர்") உரிமை மாற்றக் கூடாது.

3. இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது சாட்டுதல் பணிக்கான அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையின் உரிமை மாற்றத்திற்கான ஆணைக்குழுவின் ஏதாவது அனுமதியானது, சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு அல்லது உரிமை மாற்றிப் பெறுபவருக்கு, இந்த விலக்களிப்புக் கட்டளையின் நிபந்தனையை அனுசரிக்கும் வகையில், தொழில்நுட்ப, நிதி ஆற்றல் காணப்படுகின்றது என ஆணைக்குழு திருப்திப்படுகின்றது என்பதற்கு அமைவாகவும், ஒரு உரிமை மாற்றம் எனின் மாத்திரம், விலக்களிப்புக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கும் உரிமை மாற்றிப் பெறுபவர், ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் பட்சத்தில்,

குறித்த சட்டத்திற்கு இணங்க, இந்த விலக்களிப்புக் கட்டளையின் திருத்தம் அடங்கலாக, ஆணைக்குழு அவசியம் என நிர்ணயிக்கும் ஏதாவது ஏனைய விடயங்களை, சாட்டுதல் பணியை ஏற்பவர் அல்லது உரிமை மாற்றிப் பெறுபவர் அனுசரித்து நடப்பார் என்பதற்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

4. இந்த நிபந்தனையில் எதுவும், அத்தகைய சாட்டுதல் பணிக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கிய பட்சத்தில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட பின்னர் சாத்தியமான விதத்தில் உடனடியாக அத்தகைய உரிமை மாற்றம் செயல்வலுப் பெறும் என்ற அடிப்படையில், விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை, ஒரு சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு உரிமை மாற்றிக் கையளிப்பதைத் தடுக்கக் கூடாது.

**நிபந்தனை 7: விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்தல் அல்லது வாபஸ் பெறுதல்**

1. பின்வரும் சந்தர்ப்பங்களில், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க, ஆணைக்குழு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய வேண்டும் என ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்து உடன்படும் பட்சத்திலும் ;

(ஆ) இந்தக் கட்டளையின் 2 ஆம் நிபந்தனையின் கீழ், ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் ஒரு கட்டளையை அல்லது பணிப்புரையை, விலக்களிக்கப்பட்ட தரப்பு, அந்தக் கட்டளை அல்லது பணிப்புரை விடுக்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அந்தக் கட்டளையில் அல்லது பணிப்புரையில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாம் எனும் அத்தகைய நீடிக்கும் காலத்தினுள், குறித்த கட்டளையை அல்லது பணிப்புரையை அனுசரிக்கத் தவறும் பட்சத்திலும் ;

(இ) இல்லையெனில் ,

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிலவும் பட்சத்திலும் ;

(ii) மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை இயக்குவதற்கு புதிய பங்குதாரர் அல்லது அந்தப் புதிய பங்குதாரரினால் (ஏதாவது பங்குதாரர் இருப்பின்) நியமிக்கப்பட்ட நிறுவனம் ஆகிய இரு தரப்புகளுக்குமே, விலக்களிக்கப்பட்ட தரப்பின் பங்குவகித்தலின் அளவுப் பரிமாணத்தைக் கருத்திற் கொண்டு, அந்த மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் போதிய தொழில்நுட்பம், நிதி அல்லது முகாமைத்துவம் சார்ந்த ஆற்றலில்லை என ஆணைக்குழு திருப்திப்படும் பட்சத்திலும் ;

(iii) இந்தப் பந்திக்கு இணங்க, ஆணைக்குழு இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய உத்தேசிக்கின்றது என அறிவித்து விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அறிவித்தலை விடுத்து, அந்த அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியைக் கொண்டு ஆரம்பமாகும் மூன்று மாத காலத்திற்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றவாறு விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் மேலும் மாற்றம் நிகழாத பட்சத்திலும் ; மற்றும்

(iv) அந்தக் காலப் பகுதியில் மேலும் மாற்றம் நிகழாது எனும் பட்சத்திலும்

(ஈ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்த பின்னரும் முடியுமான வரை உடனடியாக விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவுக்கு அந்த மாற்றம் பற்றி அறிவிக்கத் தவறும் பட்சத்திலும் ;

(உ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொடர்ச்சியாக ஒரு 03 மாத காலத்திற்கு, அதாவது ஆணைக் குழு அதன் தனித் தற்றுணிவில், சகல சந்தர்ப்பங்களிலும் நியாயம் எனக் கருதி, அவ்வாறு அத்தகைய நீடிக்கும் காலத்தைப் பிரதியீடு செய்யும் நிலையில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்த நிகழ்வுகளின் பயனாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என ஆணைக்குழு திருப்திப்படும் சந்தர்ப்பம் தவிர, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை நிறுத்தும் பட்சத்திலும் ;

(ஊ) விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்கிய எந்தத் தகவல்களின் அடிப்படையில் இந்த விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்ததோ அந்தத் தகவல்கள் கணிசமானளவில் தவறானவை அல்லது பொய்யானவை எனக் காணப்படும் பட்சத்திலும்:,

(எ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவதொரு நிபந்தனையை விலக்களிக்கப்பட்ட தரப்பு மீறும் /அல்லது முறிக்கும் பட்சத்திலும்

இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்யலாம்.

**நிபந்தனை 8: சுற்றாடல்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, இலங்கையில் ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்களுக்கும், அத்தகைய சுற்றாடல் சட்டங்களின் கீழ், அனுசரிக்கும் முகமாக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வழங்கப்படலாமெனும் ஏதாவது விலக்களிப்புக் கட்டளைகளுக்கு அல்லது கருணைக் காலங்களுக்கு அமைய இயைந்தொழுதிக வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக்குழுவுடனான ஆலோசனையில் விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்களின் கீழுள்ள தனது கடமைகளையும் கடப்பாடுகளையும் அனுசரிக்கும் வகையில், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு முன்வைக்கும் விதத்தில் எழுத்திலான ஒரு கொள்கையைத் தயாரித்து, அவ்வப்பொழுது திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும்.

*3.* ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய காலங்களில், அத்தகைய படிவத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பு தனது சுற்றாடல் செயலாற்றுகை பற்றி வருடா வருடம் ஆணைக் குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

*4.* இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் நோக்கங்களுக்கான “சுற்றாடல் சட்டங்கள்” என்பது, சுற்றாடலில் தங்கியிருக்கின்ற தாவர இனங்கள், விலங்கு இனங்கள், மானிட சுகாதாரம் மற்றும் உயிரியியல் சுற்றாடல் முறைமைகள் என்பவற்றின் பாதுகாப்பு உள்ளிட்ட, சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக உள்ளடக்க வேண்டுமெனும், ஆனால் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசியச் சுற்றாடல் சட்டத்திற்கு வரையறுக்கப்படாத சுற்றாடல் பாதுகாப்புதான் நோக்கம் என்ற அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்டங்களும், சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் வளி, நிலம், நீர் ஆகியவற்றின் பாதுகாப்பு சம்பந்தமான பொருத்தமான சகல சட்டவாக்கங்களும் எனப் பொருள்படும்.

**நிபந்தனை 9: சுகாதாரமும் பாதுகாப்பும்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளுகின்ற நேரம் ஏற்படலாமெனும் உடற்காயங்களிலிருந்து நபர்களையும், பாதிப்புகளிலிருந்து பொறித்தொகுதிகளையும், ஆதனங்களையும், உபகரணங்களையும் பாதுகாப்பதற்கு, கீழ்க்காணும் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல் அடங்கலாக சகல நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக் குழுவுடனான ஆலோசனையில் ஒரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டத்தை அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் ;

(ஆ) அந்தத் திட்டத்தின் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாட்டை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, தேவையாயின் அந்தத் திட்டத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தி, இற்றைப்படுத்தி அங்கீகாரத்திற்காக ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவும் வேண்டும் ;

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு (அவ்வப்பொழுது இற்றைப்படுத்தப்பட்டவாறான) குறித்த திட்டத்தை அனுசரித்து நடக்க வேண்டும் ;

(ஈ) ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி குறித்த திட்டத்தைத் திருத்தக் கூடாது ;

(உ) குறித்த திட்டத்தின் கீழுள்ள கடப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு, வருடாந்தக் கணக்காய்வு ஆணைக்குழு அங்கீகரிக்கும் சுயாதீன நிபுனர் ஒருவரினால் குறித்த திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் ;

(ஊ) ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்படும் சுகாதாரப் பாதுகாப்பு சம்பந்தமான புள்ளிவிபரங்களையும் சுட்டிகளையும் தொகுத்து வழங்க வேண்டும் ;

(எ) அந்தக் கணக்காய்வுகளினதும், புள்ளிவிபரங்களினதும், சுட்டிகளினதும் பெறுபேறுகள் பற்றி உடனே ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

**நிபந்தனை 10: காப்புறுதி**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை சம்பந்தமான ஆபத்துக்களின் முகாமைத்துவமும் காப்புறுதியும் தொடர்பில் நியாயமான, நுட்பமான கொள்கைகளைப் பின்பற்றி, அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 11: இரகசியத் தகவல்கள்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் அதற்குக் கிடைத்த சகல தகவல்களும்:

(அ) பணிப்பாளர்களுக்கு, அலுவலர்களுக்கு, ஊழியர்களுக்கு, அல்லது இந்த இரகசியத் தன்மையின் தேவைப்பாட்டை அவதானிக்கும் பொருட்டு எழுத்தில் உடன்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட தரப்பின் முகவர்நிலையத்திற்கு தமது சட்டபூர்வத் தொழிற்பாடுகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற அத்தியாவசியமான இந்த விலக்களிப்பு அல்லது அனுமதிக்கப்பட்ட ஏதாவதொரு செயன்முறை விதிக் கோவை மற்றும் அத்தகைய இரகசியத் தகவல்களுக்கான அணுகுமுறை ஆகிய அம்சங்கள் ஆணைக்குழு அனுமதித்தவாறு, இல்லையெனில் புறம்பாக விலக்களிக்கப்பட்ட தரப்பினால் இரகசியமாகப் பேணப்படுகின்றனவா என்பதையும் ;

(ஆ) இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது அனுமதிக்கப்பட்ட ஒரு செயன்முறை விதிக்கோவையினால் அனுமதிக்கப்பட்ட ஒரு நோக்கத்திற்காக அல்லது தகவல்கள் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக அன்றி ஏதாவதொரு பிற நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும் ;

(இ) இந்த அனுமதிக்கப்பட்ட மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையில் அடங்கிய ஒரு சேவை தவிர ஏதாவதொரு சேவையின் ஏற்பாட்டில் ஏதாவதொரு வர்த்தக அனுகூலத்தின் நிமித்தம் பயன்படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும்

உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நிபந்தனை 12: பிணக்குகள் தீர்த்தல்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஒரு வரித்தீர்வை வாடிக்கையாளருக்கும், தனக்கும் இடையில் எழுகின்ற தீர்க்க இயலாதவொரு பிணக்கை இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யலாம் ;

(ஆ) இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்க்க இயலாதவொரு பிணக்கை 1 (அ) பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டவொரு பிணக்குத் தவிர்ந்த) அத்தகைய விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் 1995ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்திற்கு இணங்க குறித்த பிணக்கைக் குறிப்பீடு செய்யுமாறு பணிக்கப்படும் நடுத்தீர்ப்புக் குழுவுக்கு அல்லது நீதிமன்றத்திற்கு குறிப்பீடு செய்யலாம்.

**பாகம் III மின்சாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான விசேட நிபந்தனைகள்**

**நிபந்தனை 13: விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - விதிமுறைகளை விதிப்பதற்கான தேவைப்பாடு**

*1.* 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பில் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள, விலக்களிப்புக் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் ஏதாவது உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் மின்சார இணைப்பை வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும் ;

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான ஒரு மின்சார இணைப்பை மாற்றுவதற்காக ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள ஏதாவது தரப்புடன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கானவொரு மின்சார இணைப்பை மாற்றுவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும்

உள்ளாக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை சாத்தியமான முறையில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஒப்பந்தமொன்று தொடர்பில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், விதி முறைகளை வகுத்தமைக்கும் நோக்கங்களுக்காக நியாயமான விதத்தில் தேவைப்படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளிட்டவொரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் விதிமுறைகளை வகுத்தமைக்க வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனின் பயனாகவும், ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படுவதற்கென நியாயமான ரீதியில் உத்தேசிக்கப்பட்ட பாவனையின் பயனாகவும், குறிப்பீடு செய்யப்பட்ட அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் எவரேனுமொரு உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் ஒப்பந்தத்திற்குள்ளாகக் கடமைப்படுத்தப்பட மாட்டாது. எனினும், விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதன் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்குமாறு அல்லது மீளப் பலப்படுத்துமாறு தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், அந்தத் தரப்பு அவ்வாறு செய்யவில்லை எனில், சகல சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, பொது மக்களின் நலன் கருதி அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்க அல்லது மீளப் பலப்படுத்தத் தேவைப்படுத்தப்படலாம்.

4. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த மின்சார இணைப்பானது அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் பாதுகாப்புக்கும் ஸ்தீரத்தன்மைக்கும் ஆபத்தாக அமையுமென்றிருக்குமிடத்து, மின்சார இணைப்பை மேற்கொள்கின்ற அந்தத் தரப்புடன் ஏதாவது ஒப்பந்தத்திற்குள்ளாகுமாறு கடமைப்படுத்தப்பட மாட்டாது.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப அல்லது இயக்க விதிக்கோவைகளை ; அல்லது

(ஆ) குறித்த சட்டத்தை அல்லது குறித்த சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளை ; அல்லது

(இ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு ஏற்புடைய பாதுகாப்பு விடயத்துடன் அல்லது நியமங்களுடன் தொடர்புடைய ஏதாவது சட்டவாக்கத்தை:, அல்லது

(ஈ) ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஏதாவது பிற நிபந்தனைகளை

மீறுவதற்கு அநேகமாக அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை ஆளாக்கும் ஏதாவதொரு தரப்புடன் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகக் கூடாது.

6. 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஏதாவதொரு தரப்புடன் ஒப்பந்தத்திற்கு உள்ளாகுவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு மறுக்குமிடத்து, முடியுமான வரையில் சாத்தியமான முறையில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், அந்தத் தரப்பிடமிருந்து ஒரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அந்தத் தரப்புக்கு அறியப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 14 : விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் :**

1. குறித்த நோக்கம் தொடர்பில் நியாயமானதாக அமைய வேண்டும் என ஆணைக்குழுவுக்குத் தென்படுகின்ற ஒரு காலப் பகுதியின் பின்னர், 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, ஒரு விண்ணப்பத்தைத் தொடர்ந்து, அதற்கு உரித்தான அல்லது உரித்தெனக் கோருகின்ற ஏதாவதொரு தரப்புடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு ஒரு ஒப்பந்தத்திற்கு உள்ளாகத் தவறியுள்ளது என்றிருந்தால், ஆணைக்குழு, அத்தகைய தரப்பின் அல்லது அந்த விலக்களிக்கப் பட்ட தரப்பின் விண்ணப்பத்தின் பேரில், பிரச்சினைக்குரிய குறித்த தரப்புக்கும், விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் இடையில் பிணக்கிலுள்ள ஏதாவது ஒப்பந்த நிபந்தனைகளை, நியாயமானதாகவிருக்கும் எனத் தனக்குத் தோன்றுகின்றவொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

*2*. ஆணைக்குழுவினால் தீர்த்து வைக்கப்பட்டவாறு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏதாவது தனது நடவடிக்கையைத் தொடர விரும்பினால், விலக்களிக்கப்பட்ட தரப்பு தாமதியாது உடனடியாக அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகி அதன் விதிமுறைகளுக்கு இணங்க அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும்.

*3*. இந்த நிபந்தனைக்கு அல்லது 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பான அல்லது மின்சார இணைப்பு மாற்றம் தொடர்பான ஒரு ஒப்பந்தத்திற்கான தரப்புகளில் ஏதாவதொரு தரப்பு, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில் அத்தகைய ஒப்பந்தத்தின் ஒப்பந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசித்தால், அத்தகைய ஒப்பந்தத்திற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது அல்லது பிற தரப்பினது வேண்டுகோளின் பேரில், ஆணைக்குழு, தனக்கு நியாயம் எனத் தென்படும் ஒரு விதத்தில், அத்தகைய மாற்றம் தொடர்பில் நிலவும் ஏதாவது பிணக்கைத் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 15: விலக்களிக்கப்பட்ட தரப்பினது பகிர்ந்தளிப்பு முறைமைக்கு பாரபட்சமற்ற முறையில் மின்சார இணைப்பை வழங்குதல்**

*1*. விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு மின்சார இணைப்பை வழங்கும் அல்லது அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பை நிறுத்தும் நோக்கத்திற்கான பணிகளை மேற்கொள்வதில், விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் ;

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஏதேனும் துணை நிறுவனத்திற்கு அல்லது மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்கு மற்றும் எவரேனும் நபருக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் பாரபட்சம் காட்டக் கூடாது.

**நிபந்தனை 16: விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் அடிப்படை**

*1*. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்வில், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்ற பின்னர், 28 நாட்களுக்குள், அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்ற அடிப்படையை எடுத்துரைக்கின்றதும், அந்த மின்சார இணைப்பு தொடர்பில் பிணை வைப்புகளைத் தேவைப் படுத்துகின்றதுமானவொரு கூற்றைத் தயாரித்து ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

*2*. விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழமையாக மீளாய்வுக்கு உட்படுத்தலாம். அதே நேரம் 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றுப் படிவத்தை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த விலக்களிப்புக் கட்டளை செல்லுபடியாகும் காலத்தில், ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் திருத்தத்திற்கும் உட்படுத்தலாம். கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் தொடர்ந்தும் சகல விதத்திலும் செவ்வையாக அமைய வேண்டும் என்பதற்காக அத்தகைய தகவல்களை மீளாய்வு செய்யலாம்.

*3*. அட்டவணை 1 இல் விவரிக்கப்பட்ட வளாகத்தினுள் ஒரு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஒரு தரப்புக்கு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் ஏதாவதொரு மின்சார விநியோகம் வழங்கப்படுமிடத்து, மின்சார விநியோகத்தை வழங்குவதில் தனக்கு நியாயமாக ஏற்பட்ட அத்தகைய அளவுக்கு, செலுத்தப்பட வேண்டிய, மின்சார விநியோகத்தை வழங்குவதில் ஏற்பட்ட ஏதாவது செலவை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்தும் தரப்பைச் செலுத்துமாறு தேவைப்படுத்தலாம்.

*4*. விலக்களிக்கப்பட்டவொரு தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, ஆகக்கக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஏதாவதொரு தரப்பைக் கோரலாம்.

இந்த நிபந்தனையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதாவதொரு தரப்பினால் அத்தகைய பிணை வழங்கப்படவில்லை அல்லது அத்தகைய தரப்பினால் வழங்கப்பட்ட பிணை போதுமானதாகக் காணப்படவில்லை எனுமிடத்து:-

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, அதாவது ஆககக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை அத்தகைய அறிவித்தலின் பின்னர் ஏழு நாட்களுக்குள் வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் குறித்த தரப்பைக் கோரலாம் ;

(ஆ) குறித்த தரப்பு அத்தகைய பிணையை வழங்கத் தவறும் பட்சத்தில், அந்தத் தவறுகை தொடர்ந்துமிருக்கும் வரை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார இணைப்பை வழங்க மறுக்கலாம் அல்லது மின்சார விநியோகத்தைத் துண்டிக்கலாம்;

(இ) விலக்களிக்கப்பட்டவொரு தரப்புக்கு, இந்த நிபந்தனைக்கு இணங்க பிணை வழியில் ஏதாவதொரு பணத் தொகை வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பணத் தொகை விலக்களிக்கப்பட்ட தரப்பின் கைவசமிருக்கும் காலம் தொடர்பில், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அவ்வப்பொழுது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் நிர்ணயிக்கப் படலாமெனும் அத்தகைய வீதத்தில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பணத் தொகை மீதான வட்டியைச் செலுத்த வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றினதும் இன்னும் 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் ஒவ்வொரு திருத்தத்தினதும் பிரதியை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு திருத்தத்திற்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் அவசியம் என்பதுடன், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வரை அத்தகைய திருத்தம் செயல்வலுப் பெற மாட்டாது.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பு, அத்தகைய கூற்றின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் நபருக்கு, 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கூற்றின் அல்லது (விடயம் இவ்வாறிருக்கலாம் எனும் நிலையில்) அத்தகைய பந்திக்கு இணங்க ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் புதிய திருத்தத்தின் பிரதியை வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 ஆம் பந்திக்கு இணங்க தான் வழங்கிய அல்லது அனுப்பி வைத்த ஏதாவதொரு கூற்றின் பிரதி தொடர்பில், இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் தொகையை விஞ்சாத, அத்தகையதொரு கூற்றின் பிரதியை வழங்கும் விலக்களிக்கப்பட்ட தரப்பினது நியாயமான ஆகுசெலவை ஈடுசெய்யக்கூடியவொரு கட்டணத் தொகையை அறவிடலாம்.

**நிபந்தனை 17: மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுக்கும், மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையில் இயற்கையாகவே நிலவுகின்ற தொழில்நுட்பமும் தொழில்நுட்பம் சாராததுமான இழப்பீடுகள் ;

(ஆ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு இணைக்கப்பட்டிருக்கின்ற மின்பிறப்பாக்கிகளின் (ஏதுமிருப்பின்) மூலம் வழங்கப்படுகின்ற மின்சக்தி ;

(இ) புதிதாக வழங்கப்படும் மின்சார இணைப்புகளின் தாக்கம் ;

(ஈ) கேள்வி முகாமைத்துவத்தின் தாக்கம் ;

(உ) வித்தியாசமான நுகர்வோர் வகுதிகளினது மின்பளு சிறப்பம்சங்கள்

ஆகிய விபரங்கள் உள்ளிட்ட, மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்தும் அத்தகைய தேவைப்பாட்டு கேள்விசார் குறிப்பிலிருந்தும் வரும் தனது சக்திக்கான எதிர்காலத் தேவைப்பாட்டை எதிர்வுகூறப் போதிய பதிவுகளைப் பேண வேண்டும்.

2. முழு மின்சார முறைமையினதும் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாடு, ஒருங்கிணைந்த அபிவிருத்தி, உள்ளக–இயக்கத்திறன் என்பவற்றைப் பேணுவதற்கும், அவற்றை உறுதிசெய்து கொள்வதற்கும், மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினாலும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளினாலும் நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய தகவல்கள் அல்லது எதிர்வுகூறல்கள் என்பன நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய காலங்களிலும் அத்தகைய விதத்திலும் மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புக்கும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் அந்தத் தகவல்களை அல்லது அந்த எதிர்வுகூறல்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்க வேண்டும்.

3. இந்த நிபந்தனையில்:

"முழு முறைமைகள்" முழு முறைமைகள் என்பது, மின்சார செலுத்துகை முறைமை, அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை மற்றும் ஒன்றாகக்கொள்ளப்படும் மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய சகல தரப்புகளினதும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை யாவும் எனப் பொருள்படும்.

***பாகம் IV மின்சார விநியோகம் தொடர்பான விஷேட நிபந்தனைகள்***

***நிபந்தனை 18: மின்சார விநியோகத்தில் நிகழும் பாரபட்சத்தைத் தடுத்தல்***

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் அல்லது மின்சார விநியோகம் தொடர்பில் விதிமுறைகளை விதிப்பதில்:

(அ) எவரேனும் நபருக்கு அல்லது நபர்கள் வகுதிக்கு பாரபட்சம் காட்டவும் ;

(ஆ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர்கள் வகுதிகளுக்கு இடையில் பாரபட்சத்தைப் பிரயோகிக்கவும் ;

(இ) நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகளை விதிக்கவும்,

கூடாது.

*2.* இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, குறித்த விதிமுறைகளின் பேரில் நுகர்வோருக்கு விநியோக்கின்ற மின்சாரத்திலிருந்து வரும் வருமானம், அந்த மின்சார விநியோகத்தின் ஆகுசெலவை கணிசமானளவு விஞ்சுமாயின், அந்த விதிமுறைகள், நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகள் எனக் கருதப்படும்.

*3.* இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு, பிரச்சினையிலுள்ள நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதன் பயனாக ஏற்பட்ட ஆகுசெலவுகளை நியாயமான விதத்தில் உள்ளீர்க்காத கட்டணங்களுடன் அத்தகைய விதிமுறைகள் கூட்டிணைகின்றனவா என்பது தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தி, நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற ஏதேனும் பிரச்சினைக்குரிய விடயத்தைத் தீர்மானிக்கும்.

*4.* இந்த நிபந்தனையில் :

"விதிமுறைகள்" விதிமுறைகள் என்பது அந்த மின்சார விநியோக மதிப்பீட்டை கணிசமானளவு பாதிக்கின்ற விலைக்கான விதிமுறைகள் உள்ளிட்ட மின்சாரம் விநியோரிக்கப்படுகின்றமை அல்லது வழங்கப்படுகின்றமை தொடர்பான சகல விதிமுறைகளும் எனப் பொருள்படும்.

***நிபந்தனை 19: மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணை***

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்விலும், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்றதன் பின்னரும், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வெளியிடப்படும் வழிகாட்டல்களில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் திகதி கழிய முன்னரும், இன்னும் அதன் பின்னரும் காலத்திற்குக் காலம், நுகர்வோருக்கான மின்சார விநியோகங்கள் தொடர்பான ஒரு வரித்தீர்வை அட்டவணையைத் தயாரித்து வழங்க வேண்டும்.

*2.* இந்த வரித்தீர்வை அட்டவணையானது:

(அ) ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படுமொரு அமைப்பிலும்,

(ஆ) யாரேனுமொரு நுகர்வாளரை மின்சாரக் கொள்வனவுகள் தொடர்பில் செலுத்தக் கடமையாகக்கூடிய கட்டணங்களின் நியாயமானவொரு மதிப்பீட்டை மேற்கொள்ளும் வகையில் இயலச் செய்வதற்கு அவசியமெனும் விபரங்களை உள்ளடக்கியதாகவும்,

(இ) குறிப்பீடு செய்யப்பட்ட பகல், இரவு நேரங்களில், வார நாட்களில், ஆண்டு காலங்களில் மின்சாரத்தை வழங்குவதிலான விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஆகுசெலவுகளை ஈடுசெய்யும் வகையிலும், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை அறவிட அனுமதிக்கின்ற, இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை வினைத் திறன் வாய்ந்தவொரு அடிப்படையில் நிறைவேற்றுவதிலான சகல நியாயமான ஆகுசெலவுகளையும் உள்ளீர்க்கும் வகையிலும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு முறையியலுக்கு இணங்கவும்,

(ஈ) தனித்தனியாக:

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையினது பாவனை தொடர்பான வரித்தீர்வை,

(ii) முன்கூட்டிய அல்லது அவசரதேவை மின்பிறப்பாக்கிச் செயற்பாட்டு பராமரிப்பு ஆகுசெலவு,

(iii) மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை இயக்க முகாமைத்துவ பராமரிப்பு ஆகுசெலவு

ஆகிய ஆக்கக்கூறுகளைக் கண்டறியக்கூடிய வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

3. விலக்களிக்கப்பட்ட தரப்பினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வரித்தீர்வைகளின் சிக்கல் வாய்ந்த தன்மையின் அல்லது நுகர்வாளர்களின் புரிந்துகொள்ளும் அறிவாற்றலின் நிமித்தம் இலகுவான விளக்கக் கூற்றுக்கள் தேவைப்படுகின்றன என ஆணைக்குழு கருதுமிடத்து, அத்தகைய விளக்கக் கூற்றுக்களைத் தயாரித்து, அதன் பின்னர் அந்த விளக்கக் கூற்றுக்களை வரித்தீர்வை அட்டவணையுடன் சேர்த்துப் பிரசுரிக்குமாறு ஆணைக்குழு விலக்களிக்கப்பட்ட தரப்பைப் பணிக்கலாம்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்திற்கான ஆணைக்குழுவினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தின் (அவ்வப்பொழுது திருத்தப்பட்டவாறான) ஒரு பிரதியை, அந்தத் திட்டத்தை ஏதாவது பிற நபருக்குக் கிடைக்கச் செய்வதற்கு முன்னர், 14 நாட்கள் கழிய முன்னர், ஆணைக்குழுவுக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையைப் பிரசுரிக்க வேண்டும்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, (8 ஆம் பந்திக்கு அமைய) மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை, அதனை அவசியம் எனக் கோரும் யாரேனும் நபருக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

8. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 7 ஆம் பந்திக்கு இணங்க, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை வழங்குவது அல்லது அனுப்பி வைப்பது தொடர்பில், ஆணைக்குழுவினால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிகாட்டல்களில், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக தற்காலிகமாகக் குறிப்பீடு செய்யப்படுகின்ற தொகையை விஞ்சாத ஒரு கட்டணத் தொகையை அறவிடலாம்.

9. வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய விதத்தில் அல்லது அந்த வழி காட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாம் எனும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்காக மின்சார விநியோகம் தொடர்பான குறித்த வரித்தீர்வை அட்டவணையின் அமைப்பை மாற்றுமாறு விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு ஆணைக்குழு பணிப்புரைகளை விடுக்கலாம் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு, உடனடியாக ஏதேனும் அத்தகைய பணிப்புரைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.

10. ஆணைக்குழு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையின் மீளாய்வு பற்றிய ஒரு நடைமுறையைக் குறிப்பீடு செய்யலாம்.

**நிபந்தனை 20: மின்சார பகிர்ந்தளிப்பும் விநியோகமும் தொடர்பான வரித்தீர்வை ஒப்பந்தம்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு (கீழ்க்காணும் 3 ஆம் பந்திக்கும், 14 ஆம் நிபந்தனைக்கும் அமைய), ஒரு மின்சார நுகர்வாளராக ஆகுவதற்கு எண்ணுகின்ற எவரேனுமொரு மின்சார நுகர்வாளருடன் அல்லது நபருடன் ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும். விலக்களிக்கப்பட்ட தரப்பு அவ்வாறு உள்ளாகும் அந்த ஒப்பந்தமானது, அத்தகைய மின்சார விநியோகங்கள் தொடர்பில் ஆக்கப்பட வேண்டிய கட்டணங்களுக்கும், மேலே கூறப்பட்ட 19 ஆம் நிபந்தனையில் நிர்ணயிக்கப்பட்ட வரித்தீர்வை அட்டவணைக்கான குறிப்பாக அமைய வேண்டிய அத்தகையதொரு விதத்தில் முன்வைக்கப்பட வேண்டிய அத்தகைய கட்டணங்களுக்குமான ஏற்பாடுகளை வழங்குவதாகவும் அமைய வேண்டும்.

2. குறித்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை வகுத்தமைக்கும் நோக்கம் தொடர்பில் விலக்களிக்கப் பட்ட தரப்பு நியாயமானளவில் தேவைப்படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளடங்குகின்ற ஒரு விண்ணப்பம், விலக்களிக்கப்பட்ட தரப்பினால் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர், ஏதாவதொரு நிகழ்வில் முடியுமான வரை சாத்தியமான விதத்தில் (ஒரு நீண்ட காலப் பகுதியை ஆணைக்குழு வழங்குகின்றவிடத்து) 1 ஆம் பந்திக்கு இணங்க, குறித்த விலக்களிக்கப்பட்ட தரப்பு ஒப்பந்தங்களுக்கான விதிமுறைகளை முன்வைக்க வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு இணங்க ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கு அல்லது உள்ளாக முனைவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு கடமைப்படுத்தப்படமாட்டாது. எனினும், குறித்த விலக்களிக்கப்பட்ட தரப்பு, அவ்வாறு அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகுமாயின் அல்லது முனையுமாயின்:

(அ) குறித்த சட்டத்தின் கீழுள்ள தனது கடமைகளை நிறைவேற்றத் தவறிய ; அல்லது

(ஆ) குறித்த சட்டத்தின் அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் ஏற்புடைய பாதுகாப்பு அல்லது நியமங்கள் தொடர்பான ஏதாவது பிற சட்டவாக்கத்தின் ஏதாவது ஒழுங்குவிதிகளை மீறிய, அல்லது

(இ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது நிபந்தனைகளை மீறிய, அல்லது

(ஈ) அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை மீறிய
தரப்பாகக் கருதப்படும்.

*4.* 25 ஆம் நிபந்தனைக்கு இணங்க உள்ளான ஒப்பந்தம் தொடர்பான சரியான வாசகங்கள் உள்ளடங்கினால் இந்த நிபந்தனைக்கு இணங்க ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது கடப்பாடு திருப்தி கொள்ளப்படும்.

**நிபந்தனை 21 : வளாகங்களுக்குள் பிரவேசித்தல்**

*1.* இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் ஏதாவது வளாகங்களுக்குள் பிரவேசிப்பது பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்பு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் அது குறித்து அறிவித்தல்களை விடுக்க வேண்டும் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கும்:-

(i) மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயல்களின் தன்மையையும் அளவையும் சாத்தியமான விதத்தில் முழுமையாகவும் செவ்வையாகவும் குறிப்பிட்டு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உத்தேச பிரவேசம் பற்றிய மூன்று நாள் அறிவித்தல் விடுக்கப்படாத ;

(ii) அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் தனக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கான சான்று முன்வைக்கப்படாத ;

(iii) குறித்த பிரவேசத்தினால் ஏற்படும் ஏதாவது இடையூறு, பாகங்களிழப்பு அல்லது பாதிப்பு தொடர்பில் காணியின் அல்லது வளாகத்தின் உரிமையாளருக்கு நியாயமான நஷ்டஈடு செலுத்தப்படாத

வரையில் வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கு உரிமை கிடையாது.

*2.* 1 (அ) என்ற உப பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு அறிவித்தல் விடுப்பு நோக்கத்திற்காக அதன் சார்பில் எழுத்தில் அந்த அறிவித்தலை விடுக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு குறித்த காணியினுள் பிரவேசிப்பதற்கு உரித்துண்டு.

*3.* இந்த விடயத்தினால் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத்தத்துவங்களை எவரேனுமொரு நபர் பிரயோகிக்குமிடத்து, எழுத்தில் அந்த நபரினால் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பிரவேசத்தின் விளைவாக வளாகங்களுக்கு ஏற்பட்ட ஏதாவது பாதிப்பை ஈடுசெய்ய வேண்டும்.

*4.* இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அல்லது அதன் கீழ் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத் தத்துவத்தைக் கொண்டு வளாகத்தினுள் பிரவேசிப்பதனால் அந்த வளாகத்திற்கு அல்லது ஏதேனும் அசையும் ஆதனங்களுக்கு, வளாகத்தில் அல்லது அசையும் ஆதனங்களில் அக்கறையுடைய எவரேனும் நபருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், எந்தத் தரப்பின் சார்பாக அதிகாரத்தத்துவம் பிரயோகிக்கப்படுகின்றதோஅதாவது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து அத்தகைய பாதிப்புக்கான நஷ்டஈட்டைக் கோரி அறவிடலாம். அத்தகையதொரு அதிகாரத்தத்துவத்தைப் பிரயோகிப்பதன் விளைவாக நபர் ஒருவருக்கு அவரது ஏதேனும் வளாகத்தை அனுபவிக்கும் உரிமைக்கு அல்லது அசையும் ஆதனங்களுக்கு இடையூறு ஏற்படுமிடத்து, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அந்த இடையூறு தொடர்பில் விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து நியாயமான நஷ்டஈட்டை அந்த நபருக்கு கோரி அறவிட்டுக் கொள்ளலாம்.

***அட்டவணை 1***

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில், 200 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தையுடைய, இலக்கம் 200, யூனியன் இடம், கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள யூனியன் ரெசிடென்ஸீஸ் (ப்ரைவட்) லிமிட்டெட் நிறுவனத்திற்குச் சொந்தமான வளாகம்.

*5- 626/3*

**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்*

***10 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் விலக்களிப்புக் கட்டளை***

***1. விலக்களிப்பு வழங்கல்***

*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது (இதனகத்துப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பீடு செய்யப்படும்), 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10(1) ஆம் பிரிவினால் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்களைக் கொண்டு, இலக்கம் 27, மெல்போன் ஒழுங்கை, கொழும்பு 04, என்ற முகவரியில் அமைந்துள்ள பெலவத்த சுகர் இன்டஸ்ட்ரீஸ், PLC லிமிட்டெட் நிறுவனத்திற்கு (இதனகத்துப் பின்னர் விலக்களிக்கப்படும் தரப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்), இந்தக் கட்டளையில் உள்ளடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைய,*

*இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 1 இல் முழுமையாக விபரிக்கப்பட்ட பெலவத்த, புத்தள என்ற இடத்தில் அமைந்துள்ள தனது வளாகத்தினுள் மின்சாரத்தைப் பகிர்ந்தளித்து விநியோகிப்பதற்கு அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அல்லது விநியோகிப்பதற்கு என்ற வரையறுக்கப்பட்ட நோக்கம் தொடர்பில் ஒரு அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான அதன் தேவைப்பாட்டிலிருந்து இத்தால் அதனை விலக்களிப்புச் செய்கின்றது.*

***2. அங்கீகாரங்கள்***

*இவ்வாறு விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பையும் மின்சார விநியோகத்தையும் மேற்கொள்ளுவதற்கான, ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகள், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் குறித்த ஏற்பாடுகளுக்கு வரையறுக்கப்படாத விடயங்கள் என்பவற்றின் கீழ், தேவையான சகல அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

***3. விலக்களிப்பு பற்றிய நியதி*** :

*இத்தால் வழங்கப்படும் விலக்களிப்பானது, கீழே காணப்படும் விலக்களிப்புக் கட்டளையிலுள்ள இரத்துச் செய்தல் மற்றும் விலக்களிப்பு வாபஸ்பெறல் தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைய இரத்துச்செய்யப்படாத அல்லது வாபஸ்பெறப்படாத வரையில், 2012.01.26 ஆம் நாள் செயல்வலுப் பெறும் என்பதுடன், அந்த 2012.01.26 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ஐந்து (05) வருட காலமொன்றுக்கு முற்றிலும் செயல்வலுப் பெற்று நடைமுறையிலுமிருக்கும்.*

*4. விலக்களிப்பை இரத்துச்செய்தலும் வாபஸ்பெறுதலும் :*

*இந்த விலக்களிப்பானது, குறித்த சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க இரத்துச்செய்யப்படலாம் அல்லது வாபஸ்பெறப்படலாம்.*

*கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா,*
*தலைவர்,*
*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.*

***விலக்களிப்பு பற்றிய நிபந்தனைகள் :***

***நிபந்தனை 1: பொருளும் பொருள்கோடலும்***

*1. முரண்பட்ட பொருள் எழாத வரையில்:*

*(அ) குறித்த நிபந்தனைகளில் அல்லது அட்டவணையில் பிரயோகிக்கப்பட்ட சொற்கள் அல்லது சொல்வாசகங்கள் சட்டவாக்கமொன்றிலும் மற்றும் அந்த வாசகங்களுக்கு ஏற்புடைத்தான பொருள்கோடல் சட்டங்களிலும் காணப்பட்டவாறு பொருள் கொள்ளப்படும் என்பதுடன் ;*

*(ஆ) ஒரு சட்டவாக்கத்திற்கான குறிப்பீடுகள், இந்த விலக்களிப்புக் கட்டளை செயல்வலுப் பெறும் நாளின் பின்னர் மேற்கொள்ளப்படும் அந்த சட்டவாக்கதின் ஏதாவது திருத்தம் அல்லது மறுசட்டமாக்கல் ஆகிய இரண்டிலும் அடிப்படையாகவும், துணையாகவும் அமைகின்ற சட்டவாக்கத்தை உள்ளடக்கியிருக்கும்.*

2. முரண்பட்ட பொருள் எழாத வரையில், குறித்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது நோக்கத்தின் நிமித்தம் சட்டத்தில் தெளிவாக விவரிக்கப்பட்ட ஏதாவது சொல் அல்லது சொல்வாசகங்கள் குறித்த அட்டவணையில் அல்லது நிபந்தனைகளில் பிரயோகிக்கப்பட்ட நேரத்திலிருந்த முரணற்ற அதே கருத்தைக் கொண்டிருக்கும்.

3. நிபந்தனைகளிலும் அட்டவணையிலும் குறிப்பிடப்படாத அல்லது தேவைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் :

| | |
|---|---|
| "இணைத்தரப்பு" | விலக்களிக்கப்பட்ட தரப்பு தொடர்பில், இணைத்தரப்பு என்பது, ஒவ்வொரு விடயத்திலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது முதலீட்டுக் கம்பனி அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது துணை நிறுவனம் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் முதலீட்டுக் கம்பனியொன்றின் ஏதாவது துணை நிறுவனம் எனப் பொருள்படும். |
| "அங்கீகரிக்கப்பட்டது" | அங்கீகரிக்கப்பட்டது என்பது, 4, 9, 13, 16, 19 மற்றும் 20 ஆம் நிபந்தனைகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட நேர்கங்களுக்காக ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும். மேலும் "அங்கீகாரம்" என்ற பதமும் அதையொத்த ஒரு கருத்தையே கொண்டிருக்கும். |
| "அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு " | அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியானவொரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும். |
| "மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை" | மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை என்பது, பிரதானமாக மேன்தலை மின்சார மார்க்கங்கள், நிலக்கீழ் கேபல்கள், மின்சார சேவை மார்க்கங்கள், மின்மாற்றிகள், மாணி வாசிப்புக் கருவிகள், மற்றும் வடிவமைக்கப்பட்ட 33kv (பேஸ் கடத்திகளுக்கு இடையில்) அல்லது அதற்குக் குறைவான மின்விசை அடங்கிய ஏனைய துணை மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன உள்ளிட்ட விலக்களிக்கப்பட்ட தரப்புக்குச் சொந்தமானதும், அந்தக் குறித்த தரப்பினால் இயக்கப்படுகின்றதுமானவொரு மின்சார முறைமையைப் பயன்படுத்துகின்றவொரு மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து அல்லது மின்னுற்பத்திப் பொறித்தொகுதி களிலிருந்து அல்லது ஏனைய கொள்வனவுப் புள்ளிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப் படுகின்ற மின் சக்தியை, 33kv அல்லது அதற்குக் குறைவான மின் விசையொன்றில் மின்சார விநியோகத்தைப் பெறுவதற்கு விருப்பமுடைய முடிவுப் பயனரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குநர்களின் மின்சார விநியோக இடங்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கான மின்சார அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினது அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கை எனப் பொருள்படும். |
| "விலக்களிக்கப்பட்ட தரப்பு" | மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கவும் விநியோக்கவும் அல்லது மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்க அல்லது விநியோக்க குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தரப்பு எனப் பொருள்படும். |
| "மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு" | மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பு என்பது, மின்சார பகிர்ந்தளிப்பு நடவடிக்கையில் அல்லது மின்சார விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் ஏதேனுமொரு தரப்பு எனப் பொருள்படும். |

"முதலீட்டுக் கம்பனி" — முதலீட்டுக் கம்பனி என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தினுள் வரும் ஒரு கம்பனி எனப் பொருள்படும்.

"விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை" — விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமை என்பது, இதற்கான அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட வளாகத்தினுள், மின்சார செலுத்துகை முறைமையிலிருந்து பாகமாக உருவாகுகின்ற மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த, ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் பாகமெனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற அந்தத் தரப்புக் கொண்டிருக்கலாம் எனும் ஏதாவது பிற மின்சார மார்க்கங்களும், வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்லப் பயன்படுகின்ற விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதாவது மின்பொறித்தொகுதி, மாணிவாசிப்புக் கருவிகள், மின்மாற்றிகள் மற்றும் ஆளிப்பலகை உந்துகை, என்பன உள்ளடங்கலாக விலக்களிக்கப்பட்ட தரப்பின் சகல மின்சார மார்க்கங்களும் எனப் பொருள்படும்.

"அனுமதிப்பத்திரத் திருத்தம்" — அனுமதிப்பத்திரத் திருத்தம் என்பது, அதில் சேர்த்தல், நீக்குதல், திருத்துதல் மற்றும் பிரதியீடு செய்தல் எனப் பொருள் படும். மேலும் அதங்கிணங்க ஒரே வகையான சொல்வாசகங்கள் பொருள் கொள்ளப்படவும் வேண்டும்.

"இபொபஆச" — இபொபஆச என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்.

"சம்பந்தப்பட்ட நிறுவனம்" — சம்பந்தப்பட்ட நிறுவனம் என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கருத்தினுள் வரும் ஏதாவது ஒரு நிறுவனம் எனப் பொருள்படும்.

"பிரதிநிதித்துவம்" — இங்கு பிரதிநிதித்துவம் என்பது, எழுத்தில் விடுக்கப்படும் ஏதேனும் ஆட்சேபனை அல்லது பிரேரணை எனப் பொருள்படும்.

"துணை நிறுவனம்" — இதற்கு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தில் வழங்கப்பட்ட பொருளுண்டு. மேலும், அதற்கிணங்கவே "துணை நிறுவனங்கள்" வரைவிலக்கணப்படுத்தப்படவும் வேண்டும்.

"மின்சார செலுத்துகைக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு" — மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு என்பது, குறித்த சட்டத்தின் 13 (1) (இ) (i) (ஆ) பிரிவின் கீழ், மின்சார செலுத்துகைக்கான ஒரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் தரப்பு எனப் பொருள்படும்.

"மின்சார செலுத்துகை முறைமை" — மின்சார செலுத்துகை முறைமை என்பது, பாரியளவில் மின்சாரத்தை நுகரும் கட்டிட வளாகங்களுக்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படும் (ஆனால் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் ஏதாவது பாகமாக வருகின்ற அத்தகைய ஏதேனும் மின்சார மார்க்கங்கள் தவிர்ந்த) சகல மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்கள் அடங்கலாக, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து உப-மின் நிலையமொன்றுக்கு, மின்னுற்பத்திப் பொறித்தொகுதியொன்றிலிருந்து மற்றுமொரு மின்னுற்பத்திப் பொறித் தொகுதிக்கு அல்லது உப-மின் நிலையமொன்றிலிருந்து மற்றுமொரு உப-மின் நிலையத்திற்கு மின்சாரத்தைக் காவிச் செல்வதற்காகப் பயன்படுகின்ற மேலதிக உயர் மின் விசை மின்சார மார்க்கங்களையும், மின் பொறித்தொகுதியையும் (முழுமையாக அல்லது பிரதானமாக) கொண்டிருக்கின்ற மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினால் இயக்கப்படுகின்ற அந்தத் தரப்புக்கு உரித்தான மின்சார முறைமை எனப் பொருள்படும்.

4. குறிப்பீடு செய்யப்படாத வரையில்:

(அ) இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு நிபந்தனைக்கான அல்லது இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு அட்டவணைக்கான ஏதாவதொரு குறிப்பானது, முறையே இந்த விலக்களிப்புக் கட்டளையில் இலக்கம் குறிக்கப்பட்ட நிபந்தனைக்கான அல்லது அட்டவணைக்கான ஒரு குறிப்பாக விளங்கும்.;

(ஆ) இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கான ஏதாவதொரு குறிப்பானது, குறிப்பு நிகழும் அட்டவணையிலுள்ள அந்த இலக்கம் குறிக்கப்பட்ட வாசகத்திற்கானவொரு குறிப்பாக விளங்கும்.

(இ) இலக்கம் குறிக்கப்பட்டவொரு பந்திக்கான ஏதாவதொரு குறிப்பானது, அந்தக் குறிப்பு நிகழும் நிபந்தனையில் அல்லது வாசகத்தில் இலக்கம் குறிக்கப்பட்ட பந்திக்கானவொரு குறிப்பாக விளங்கும்.

அத்தகைய வித்தியாசத்தை, குறைநிரப்பலை அல்லது மீள்நிரப்பலை வரையறுக்கின்ற ஏதேனுமொரு ஏற்பாட்டிற்கு முரணற்ற விதத்தில், ஏதேனுமொரு ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, (இந்த விலக்களிப்புக் கட்டளை தவிர்ந்த), விதிமுறைக்கான அல்லது பிற பத்திரத்திற்கான ஏதேனுமொரு குறிப்பானது, அத்தகைய ஒப்பந்தத்திற்கான, விலக்களிப்புக் கட்டளைக்கான, விதிமுறைக்கான அல்லது அவ்வப்பொழுது வேறுபடுகின்ற, குறைநிரப்பப்படுகின்ற அல்லது மீள்நிரப்பப் படுகின்ற பிற பத்திரத்திற்கான குறிப்பொன்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

5. ஏதாவது ஒரு பகுதியின், நிபந்தனையின், அட்டவணையின் அல்லது பந்தியின் தலையங்கம் அல்லது தலைப்பு அதன் கட்டமைப்பைப் பாதிக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும்.

6. விலக்களிக்கப்பட்ட தரப்பின் ஏதேனுமொரு கடப்பாட்டை, குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு கால வரையறையினுள் நிறைவேற்றுமாறு தெரிவிக்கப்படுமிடத்து, விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கால வரையறையினுள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால் (ஆனால், குறித்த கால வரையறையினுள் விலக்களிக்கப்பட்ட தரப்பு குறித்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறியமை தொர்பில் நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படுவதன் பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு கிடைக்கக் கூடிய அனைத்து உரிமைகளுக்கும் பரிகாரங்களுக்கும் முரணற்ற விதத்தில்) குறித்த கடப்பாடானது, குறித்த கால வரையறையின் பின்னரும் கூட தொடர்ந்தும் கடப்பாடுடையதாகவும், செயலாக்கக் கூடியதாகவுமிருக்கும்.

7. குறித்த சட்டத்திற்கும் இந்த விலக்களிப்புக் கட்டளைக்கும் இடையே ஏதாவது முரண்பாடு நிலவுமாயின், இந்தச் சட்டம் அத்தகைய ஏதாவது முரண்பாடளவுக்கு மேலோங்கி நிற்கும். இந்தச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள், குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விலக்களிப்புக் கட்டளையின் முழுமையானவொரு பாகமாகவுமிருக்கும்.

**நிபந்தனை 2: ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு தேவைப்படுத்தலாமெனும் தகவல்களை, ஆணைக்குழு தேவைப்படுத்தும் விதத்திலும், குறிப்பிடும் காலங்களிலும் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளின் விளக்கத்தில், குறித்த சட்டத்தின் கீழ் அல்லது இபொபஆ சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது மாற்றி ஒப்படைக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் அறிக்கைகளையும் தேடி முனைந்து வழங்கவும் வேண்டும்.

2. 1 ஆம் பந்தியின் பொதுக் கோட்பாட்டுக்கு முரணற்ற வகையில், தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கணக்கீட்டுத் தகவல்களை விட மிக விரிவான அல்லது வித்தியாசமான தகவல்களை தனக்கு வழங்குமாறு ஆணைக்குழு அறிவிக்கலாம்.

3. 1 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல்களை அழைப்பதற்கான ஆணைக்குழுவின் அதிகாரத் தத்துவமானது, இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது பிற நிபந்தனையின் கீழும் அல்லது அந்த நிபந்தனைக்கு இணங்கவும் அல்லது குறித்த சட்டத்தின் கீழும், இபொபஆ சட்டத்தின் கீழும் அல்லது அந்தச் சட்டங்களுக்கு இணங்கவும் அல்லது பிற சட்டவாக்கத்தின் கீழும் அல்லது அதற்கு இணங்கவும் தகவல்களை அழைப்பதற்கான தனது அதிகாரத்தத்துவத்திற்கு முரணற்றதாகவிருத்தல் வேண்டும்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த விலக்களிப்பைப் பெற்று ஒரு மாத காலத்திற்குள், மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கைக்குப் பொறுப்பாக, தனது நிறுவனத்தில் ஒரு நபரை நியமிக்க வேண்டும்.

5. இந்த நிபந்தனையில் :

"தகவல்" என்பது, ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில், ஏதாவது விபரங்களை உள்ளிட்ட ஏதாவது புத்தகங்கள், ஆவணங்கள், பதிவுகள், கணக்குகள், மதிப்பீடுகள், விபரத் திரட்டுக்கள் அல்லது அறிக்கைகள் (குறிப்பாக ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத) எனப் பொருள்படும்.

**நிபந்தனை 3: ஆணைக்குழுவின் தீர்மானங்கள், கட்டளைகள், வழிகாட்டிகள் மற்றும் நிர்ணயங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, விலக்களிப்புக் கட்டளைக்கு இணங்க, ஆணைக்குழு மேற்கொள்ளலாமெனும் ஏதாவது தீர்மானங்களுக்கும், கட்டளைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

2. அத்தகைய கட்டளைகளுக்கும், தீர்மானங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும், நிர்ணயங்களுக்கும் இணங்க சம்பந்தப்படுகின்ற ஏதாவது கிரயங்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு பொறுப்பேற்க வேண்டும்.

3. ஆணைக்குழு ஏதாவது கட்டளையை அல்லது தீர்மானத்தை வெளியிட்டால், விலக்களிக்கப்பட்ட தரப்பு அவற்றுக்கு இயைந்தொழுகி, ஆணைக்குழு தேவைப் படுத்துகின்ற விதத்தில் தனது ஆதனத்தை அணுக அல்லது கட்டுப்படுத்த ஆணைக்குழுவை அல்லது ஆணைக்குழுவின் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது பிற அதிகாரியை அல்லது நபரை அனுமதிக்க வேண்டும்.

**நிபந்தனை 4: தொழில்நுட்ப மற்றும் இயக்க விதிக்கோவைகளுடனான இணக்கப்பாடு**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், அவ்வப்பொழுது ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு, குறித்த தொழில்நுட்ப இயக்க விதிக் கோவைகளை, ஆணைக்குழு பொருத்தம் எனக் கருதும் ஏதாவது மின்சாரப் பணிகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்களுடனான ஆலோசனையுடன் தயாரித்துச் செயற்படுத்த வேண்டும்.

2. 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகள், செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. விலக்களிக்கப்பட்ட தரப்பு, உரிய தொழில்நுட்ப இயக்க விதிக்கோவையில் குறிப்பீடு செய்யப்பட்ட திருத்தல் நடவடிக்கைக்கு இணங்க, உரிய நேரத்தில் செயல்வலுப் பெறும் ஒரு விதிக்கோவைக்கான தனது திருத்தங்களை ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதன் மூலம் முன்மொழியலாம்.

4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த நிபந்தனைக்கு இணங்க, தான் தயாரித்துச் செயற்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட சகல தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளினதும் பிரதிகளை (இதற்கான ஏதாவது திருத்தங்களுடன்):

(அ) ஆணைக்குழுவுக்கும்,

(ஆ) அதனைத் தேவைப்படுத்தும் எவரேனுமொரு நபருக்கும்

வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 (ஆ) பந்திக்கு இணங்க தான் வழங்குகின்ற அல்லது அனுப்பி வைக்கின்ற ஏதாவது விதிக்கோவையின் பிரதியொன்று தொடர்பில், ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில், இந்த நிபந்தனையின் நோக்கங்கள் தொடர்பில் தற்காலிகமாக குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது கட்டணத் தொகையை விஞ்சாதவொரு கட்டணத் தொகையை அறவிடலாம். விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதில் தனக்கு ஏற்புடையது எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளின் ஏற்பாடுகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

6. மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஏதாவது நிறுவனங்களிலிருந்து உரிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் கிடைக்கும் ஆலோசனையைத் தொடர்ந்து, ஆணைக்குழு, விலக்களிக்கப்பட்ட தரப்பை 6 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிக்கின்ற, பொருத்தம் எனக் கருதும் வழிகாட்டல்களை, ஆணைக்குழு நிர்ணயிக்கலாமெனும் நிபந்தனைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, அந்த வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாமெனும் அளவுக்கு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப இயக்கவிதிக் கோவைகளின் குறித்த பாகம் அல்லது பாகங்கள் தொடர்பில் கட்டளைகளை வெளியிடலாம்.

7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுக் கிடைக்கச் செய்யப்படும் காலம் வரை, சகல செயற்பாடுகள் தொடர்பிலும், ஏற்கனவேயிருக்கின்ற தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.

**நிபந்தனை 5 : ஏனைய ஒப்பந்தங்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு உரிய அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுடன் மின்சார இணைப்பு மற்றும் வரித்தீர்வை ஒப்பந்தங்கள் உள்ளிட்ட, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்ற பிற நபர்களுடனான ஏதாவது ஒப்பந்தங்களுக்குள்ளாக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பங்குபற்றத் தேவைப் படுத்தப்படும்.

3. ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டவொரு ஒப்பந்தத்திற்கு, விலக்களிக்கப்பட்ட தரப்பு உள்ளாகத் தவறியுள்ளது என உரிய நோக்கத்தின் நிமித்தம் நியாயமென ஆணைக்குழுவுக்குத் தோன்றுமொரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர், ஆணைக்குழு, அத்தகைய தரப்பினது அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினது விண்ணப்பத்தின் பேரில், பிணக்கிலிருக்கும் தரப்புக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் இடையில் ஒப்பந்த விதிமுறைகளில் நிலவும் ஏதாவது முரண்பாட்டை ஆணைக்குழுவுக்கு நியாயம் எனத் தோன்றுமொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 6 : விலக்களிப்புக் கட்டளையும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை உரிமை மாற்றலும்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக் குழுவின் முன்கூட்டிய எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையை முழுமையாக அல்லது பாகமாக சாட்டக் கூடாது.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவின் எழுத்திலான அனுமதியின்றி, இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை முழுமையாக அல்லது பாகமாக மற்றொரு தரப்புக்கு (“உரிமை மாற்றிப் பெறுபவர்”) உரிமை மாற்றக் கூடாது.

3. இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது சாட்டுதல் பணிக்கான அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையின் உரிமை மாற்றத்திற்கான ஆணைக்குழுவின் ஏதாவது அனுமதியானது, சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு அல்லது உரிமை மாற்றிப் பெறுபவருக்கு, இந்த விலக்களிப்புக் கட்டளையின் நிபந்தனையை அனுசரிக்கும் வகையில், தொழில்நுட்ப, நிதி ஆற்றல் காணப்படுகின்றது என ஆணைக்குழு திருப்திப்படுகின்றது என்பதற்கு அமைவாகவும், ஒரு உரிமை மாற்றம் எனின் மாத்திரம், விலக்களிப்புக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கும் உரிமை மாற்றிப் பெறுபவர், ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் பட்சத்தில், குறித்த சட்டத்திற்கு இணங்க, இந்த விலக்களிப்புக் கட்டளையின் திருத்தம் அடங்கலாக, ஆணைக்குழு அவசியம் என நிர்ணயிக்கும் ஏதாவது ஏனைய விடயங்களை, சாட்டுதல் பணியை ஏற்பவர் அல்லது உரிமை மாற்றிப் பெறுபவர் அனுசரித்து நடப்பார் என்பதற்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

4. இந்த நிபந்தையில் எதுவும், அத்தகைய சாட்டுதல் பணிக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கிய பட்சத்தில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட பின்னர் சாத்தியமான விதத்தில் உடனடியாக அத்தகைய உரிமை மாற்றம் செயல்வலுப் பெறும் என்ற அடிப்படையில், விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை, ஒரு சாட்டுதல் பணியை ஏற்பவருக்கு உரிமை மாற்றிக் கையளிப்பதைத் தடுக்கக் கூடாது.

**நிபந்தனை 7 : விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்தல் அல்லது வாபஸ் பெறுதல்**

1. பின்வரும் சந்தர்ப்பங்களில், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கு இணங்க, ஆணைக்குழு:

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய வேண்டும் என ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்து உடன்படும் பட்சத்திலும் ;

(ஆ) இந்தக் கட்டளையின் 2 ஆம் நிபந்தனையின் கீழ், ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் ஒரு கட்டளையை அல்லது பணிப்புரையை, விலக்களிக்கப்பட்ட தரப்பு, அந்தக் கட்டளை அல்லது பணிப்புரை விடுக்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அந்தக் கட்டளையில் அல்லது பணிப்புரையில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாம் எனும் அத்தகைய நீடிக்கும் காலத்தினுள், குறித்த கட்டளையை அல்லது பணிப்புரையை அனுசரிக்கத் தவறும் பட்சத்திலும் ;

(இ) இல்லையெனில்

(i) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிலவும் பட்சத்திலும் ;

(ii) மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை இயக்குவதற்கு புதிய பங்குதாரர் அல்லது அந்தப் புதிய பங்குதாரரினால் (ஏதாவது பங்குதாரர் இருப்பின்) நியமிக்கப்பட்ட நிறுவனம் ஆகிய இரு தரப்புகளுக்குமே, விலக்களிக்கப்பட்ட தரப்பின் பங்குவகித்தலின் அளவுப் பரிமாணத்தைக் கருத்திற் கொண்டு, அந்த மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் போதிய தொழில்நுட்பம், நிதி அல்லது முகாமைத்துவம் சார்ந்த ஆற்றலில்லை என ஆணைக்குழு திருப்திப்படும் பட்சத்திலும் ;

(iii) இந்தப் பந்திக்கு இணங்க, ஆணைக்குழு இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்ய உத்தேசிக்கின்றது என அறிவித்து விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அறிவித்தலை விடுத்து, அந்த அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியைக் கொண்டு ஆரம்பமாகும் மூன்று மாத காலத்திற்குள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றவாறு விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் மேலும் மாற்றம் நிகழாத பட்சத்திலும் ; மற்றும்

(iv) அந்தக் காலப் பகுதியில் மேலும் மாற்றம் நிகழாது எனும் பட்சத்திலும்.

(ஈ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் கட்டுப்பாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்த பின்னரும் முடியுமான வரை உடனடியாக விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவுக்கு அந்த மாற்றம் பற்றி அறிவிக்கத் தவறும் பட்சத்திலும்:,

(உ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, தொடர்ச்சியாக ஒரு 03 மாத காலத்திற்கு, அதாவது ஆணைக்குழு அதன் தனித் தற்றுணிவில், சகல சந்தர்ப்பங்களிலும் நியாயம் எனக் கருதி, அவ்வாறு அத்தகைய நீடிக்கும் காலத்தைப் பிரதியீடு செய்யும் நிலையில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பால் நிகழ்ந்த நிகழ்வுகளின் பயனாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என ஆணைக்குழு திருப்திப்படும் சந்தர்ப்பம் தவிர, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை நிறுத்தும் பட்சத்திலும் ;

(ஊ) விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்கிய எந்தத் தகவல்களின் அடிப்படையில் இந்த விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்ததோ அந்தத் தகவல்கள் கணிசமானளவில் தவறானவை அல்லது பொய்யானவை எனக் காணப்படும் பட்சத்திலும் ;

(எ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவதொரு நிபந்தனையை விலக்களிப்பட்ட தரப்பு மீறும் /அல்லது முறிக்கும் பட்சத்திலும்

இந்த விலக்களிப்புக் கட்டளையை இரத்துச்செய்யலாம்.

**நிபந்தனை 8: சுற்றாடல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, இலங்கையில் ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்களுக்கும், அத்தகைய சுற்றாடல் சட்டங்களின் கீழ் அனுசரிக்கும் முகமாக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வழங்கப்படலாமெனும் ஏதாவது விலக்களிப்புக் கட்டளைகளுக்கு அல்லது கருணைக் காலங்களுக்கு அமைய இயைந்தொழுக வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக்குழுவுடனான ஆலோசனையில் விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஏற்புடைத்தான சகல சுற்றாடல் சட்டங்கங்களின் கீழுள்ள தனது கடமைகளையும் கடப்பாடுகளையும் அனுசரிக்கும் வகையில், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு முன்வைக்கும் விதத்தில் எழுத்திலான ஒரு கொள்கையைத் தயாரித்து, அவ்வப்பொழுது திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும்.

3. ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய காலங்களில், அத்தகைய படிவத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பு தனது சுற்றாடல் செயலாற்றுகை பற்றி வருடா வருடம் ஆணைக் குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

4. இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் நோக்கங்களுக்கான "சுற்றாடல் சட்டங்கள்" என்பது, சுற்றாடலில் தங்கியிருக்கின்ற தாவர இனங்கள், விலங்கு இனங்கள், மானிட சுகாதாரம், மற்றும் உயிரியியல் சுற்றாடல் முறைமைகள் என்பவற்றின் பாதுகாப்பு உள்ளிட்ட, சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக உள்ளடக்க வேண்டுமெனும், ஆனால் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத் தேசியச் சுற்றாடல் சட்டத்திற்கு வரையறுக்கப்படாத சுற்றாடல் பாதுகாப்புதான் நோக்கம் என்ற அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்டங்களும், சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் வளி, நிலம், நீர் ஆகியவற்றின் பாதுகாப்பு சம்பந்தமான பொருத்தமான சகல சட்டவாக்கங்களும் எனப் பொருள்படும்.

**நிபந்தனை 9: சுகாதாரமும் பாதுகாப்பும்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளுகின்ற நேரம் ஏற்படலாமெனும் உடற்காயங்களிலிருந்து நபர்களையும், பாதிப்புகளிலிருந்து பொறித்தொகுதிகளையும், ஆதனங்களையும், உபகரணங்களையும் பாதுகாப்பதற்கு, கீழ் காணும் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல் அடங்கலாக சகல நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

2. விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் அத்தகைய நாள் கழிய முன்னர், ஆணைக் குழுவுடனான ஆலோசனையில் ஒரு பாதுகாப்பு வாய்ந்த தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்து, அந்தத் திட்டத்தை அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் ;

(ஆ) அந்தத் திட்டத்தின் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாட்டை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, தேவையாயின் அந்தத் திட்டத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தி, இற்றைப்படுத்தி அங்கீகாரத்திற்காக ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவும் வேண்டும் ;

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு (அவ்வப்பொழுது இற்றைப்படுத்தப்பட்டவாறான) குறித்த திட்டத்தை அனுசரித்து நடக்க வேண்டும் ;

(ஈ) ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி குறித்த திட்டத்தைத் திருத்தக் கூடாது ;

(உ) குறித்த திட்டத்தின் கீழுள்ள கடப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு, வருடாந்தக் கணக்காய்வு ஆணைக்குழு அங்கீகரிக்கும் சுயாதீன நிபுனர் ஒருவரினால் குறித்த திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் ;

(ஊ) ஆணைக்குழுவினால் குறிப்பீடு செய்யப்படும் சுகாதாரப் பாதுகாப்பு சம்பந்தமான புள்ளிவிபரங்களையும் சுட்டிகளையும் தொகுத்து வழங்க வேண்டும் ;

(எ) அந்தக் கணக்காய்வுகளினதும், புள்ளிவிபரங்களினதும், சுட்டிகளினதும் பெறுபேறுகள் பற்றி உடனே ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.

**நிபந்தனை 10: காப்புறுதி**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை சம்பந்தமான ஆபத்துக்களின் முகாமைத்துவமும் காப்புறுதியும் தொடர்பில் நியாயமான, நுட்பமான கொள்கைகளைப் பின்பற்றி, அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 11 : இரகசியத் தகவல்கள்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் அதற்குக் கிடைத்த சகல தகவல்களும்:

(அ) பணிப்பாளர்களுக்கு, அலுவலர்களுக்கு, ஊழியர்களுக்கு, அல்லது இந்த இரகசியத் தன்மையின் தேவைப்பாட்டை அவதானிக்கும் பொருட்டு எழுத்தில் உடன்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட தரப்பின் முகவர்நிலையத்திற்கு தமது சட்டபூர்வத் தொழிற்பாடுகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற அத்தியாவசியமான இந்த விலக்களிப்பு அல்லது அனுமதிக்கப்பட்ட ஏதாவதொரு செயன்முறை விதிக் கோவை மற்றும் அத்தகைய இரகசியத் தகவல்களுக்கான அணுகுமுறை ஆகிய அம்சங்கள் ஆணைக்குழு அனுமதித்தவாறு, இல்லையெனில் புறம்பாக விலக்களிக்கப்பட்ட தரப்பினால் இரகசியமாகப் பேணப்படுகின்றனவா என்பதையும் ;

(ஆ) இந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது அனுமதிக்கப்பட்ட ஒரு செயன்முறை விதிக்கோவையினால் அனுமதிக்கப்பட்ட ஒரு நோக்கத்திற்காக அல்லது தகவல்கள் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக அன்றி ஏதாவதொரு பிற நோக்கத்திற்காகப் பயன் படுத்தப்படாமலிருக்கின்றனவா என்பதையும் ;

(இ) இந்த அனுமதிக்கப்பட்ட மின்சார பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கையில் அடங்கிய ஒரு சேவை தவிர ஏதாவதொரு சேவையின் ஏற்பாட்டில் ஏதாவதொரு வர்த்தக அனுகூலத்தின் நிமித்தம் பயன்படுத்தப் படாமலிருக்கின்றனவா என்பதையும்

உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

***நிபந்தனை 12 : பிணக்குகள் தீர்த்தல்***

*1. விலக்களிக்கப்பட்ட தரப்பு:*

*(அ) ஒரு வரித்தீர்வை வாடிக்கையாளருக்கும் தனக்கும் இடையில் எழுகின்ற தீர்க்க இயலாதவொரு பிணக்கை இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்குக் குறிப்பீடு செய்யலாம் ;*

*(ஆ) இபொபஆ சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்க்க இயலாதவொரு பிணக்கை 1 (அ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவொரு பிணக்குத் தவிர்ந்த) அத்தகைய விதிமுறைகளுக்கு இணங்கத் தீர்த்துத் தருமாறு ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் 1995ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்திற்கு இணங்க குறித்த பிணக்கைக் குறிப்பீடு செய்யுமாறு பணிக்கப்படும் நடுத்தீர்ப்புக் குழுவுக்கு அல்லது நீதிமன்றத்திற்கு குறிப்பீடு செய்யலாம்.*

***பாகம் III மின்சாரப் பகிர்ந்தளிப்பு தொடர்பான விஷேட நிபந்தனைகள் :***

***நிபந்தனை 13 : விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - விதிமுறைகளை விதிப்பதற்கான தேவைப்பாடு***

*1. 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு:*

*(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பில் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள, விலக்களிப்புக் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானவொரு அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் ஏதாவது உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் மின்சார இணைப்பை வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும் ;*

*(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான ஒரு மின்சார இணைப்பை மாற்றுவதற்காக ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள ஏதாவது தரப்புடன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கானவொரு மின்சார இணைப்பை மாற்றுவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கும்*

*உள்ளாக வேண்டும்.*

*2. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை சாத்தியமான முறையில் 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஒப்பந்தமொன்று தொடர்பில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், விதி முறைகளை வகுத்தமைக்கும் நோக்கங்களுக்காக நியாயமான விதத்தில் தேவைப்படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளிட்டவொரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் விதிமுறைகளை வகுத்தமைக்க வேண்டும்.*

*3. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, தனது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனின் பயனாகவும், ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்படுவதற்கென நியாயமான ரீதியில் உத்தேசிக்கப்பட்ட பாவனையின் பயனாகவும், குறிப்பீடு செய்யப்பட்ட அமைவிடத்தினுள் காணப்படும் வளாகத்தின் எவரேனுமொரு உரிமையாளருடன் அல்லது குடியிருப்பாளருடன் ஒப்பந்தத்திற்குள்ளாகக் கடமைப்படுத்தப்படமாட்டாது. எனினும், விலக்களிக்கப்பட்ட தரப்பு, அதன் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்குமாறு அல்லது மீளப் பலப்படுத்துமாறு தேவைப் படுத்தப்படும் பட்சத்தில், அந்தத் தரப்பு அவ்வாறு செய்யவில்லை எனில், சகல சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, பொது மக்களின் நலன் கருதி அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரிக்க அல்லது மீளப் பலப்படுத்தத் தேவைப் படுத்தப்படலாம்.*

*4. இந்த நிபந்தனைக்கு இணங்க, விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறித்த மின்சார இணைப்பானது அதன் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் பாதுகாப்புக்கும் ஸ்தீரத்தன்மைக்கும் ஆபத்தாக அமையுமென்றிருக்குமிடத்து, மின்சார இணைப்பை மேற்கொள்கின்ற அந்தத் தரப்புடன் ஏதாவது ஒப்பந்தத்திற்குள்ளாகுமாறு கடமைப்படுத்தப்படமாட்டாது.*

*5. விலக்களிக்கப்பட்ட தரப்பு:*

*(அ) ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப அல்லது இயக்க விதிக்கோவைகளை ;அல்லது*

*(ஆ) குறித்த சட்டத்தை அல்லது குறித்த சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளை ; அல்லது*

(இ) விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு ஏற்புடைய பாதுகாப்பு விடயத்துடன் அல்லது நியமங்களுடன் தொடர்புடைய ஏதாவது சட்டவாக்கத்தை ; அல்லது

(ஈ) ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஏதாவது பிற நிபந்தனைகளை மீறுவதற்கு அநேகமாக அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை ஆளாக்கும் ஏதாவதொரு தரப்புடன் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகக் கூடாது.

6. 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளுக்கு இணங்க, ஏதாவதொரு தரப்புடன் ஒப்பந்தத்திற்கு உள்ளாகுவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு மறுக்குமிடத்து, முடியுமான வரையில் சாத்தியமான முறையில், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், அந்தத் தரப்பிடமிருந்து ஒரு விண்ணப்பம் தனக்குக் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அந்தத் தரப்புக்கு அறியப்படுத்த வேண்டும்.

**நிபந்தனை 14 : விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு - ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள்**

1. குறித்த நோக்கம் தொடர்பில் நியாயமானதாக அமைய வேண்டும் என ஆணைக்குழுவுக்குத் தென்படுகின்ற ஒரு காலப் பகுதியின் பின்னர், 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, ஒரு விண்ணப்பத்தைத் தொடர்ந்து, அதற்கு உரித்தான அல்லது உரித்தெனக் கோருகின்ற ஏதாவதொரு தரப்புடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு ஒரு ஒப்பந்தத்திற்கு உள்ளாகத் தவறியுள்ளது என்றிருந்தால், ஆணைக்குழு, அத்தகைய தரப்பின் அல்லது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பின் விண்ணப்பத்தின் பேரில், பிரச்சினைக்குரிய குறித்த தரப்புக்கும், விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் இடையில் பிணக்கிலுள்ள ஏதாவது ஒப்பந்த நிபந்தனைகளை, நியாயமானதாகவிருக்கும் எனத் தனக்குத் தோன்றுகின்றவொரு விதத்தில் தீர்த்து வைக்கும்.

2. ஆணைக்குழுவினால் தீர்த்து வைக்கப்பட்டவாறு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏதாவது தனது நடவடிக்கையைத் தொடர விரும்பினால், விலக்களிக்கப்பட்ட தரப்பு தாமதியாது உடடியாக அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகி அதன் விதிமுறைகளுக்கு இணங்க அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும்.

3. இந்த நிபந்தனைக்கு அல்லது 13 ஆம் நிபந்தனைக்கு இணங்க, மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பு தொடர்பான அல்லது மின்சார இணைப்பு மாற்றம் தொடர்பான ஒரு ஒப்பந்தத்திற்கான தரப்புகளில் ஏதாவதொரு தரப்பு, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதாவதொரு அமைப்பில் அத்தகைய ஒப்பந்தத்தின் ஒப்பந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசித்தால், அத்தகைய ஒப்பந்தத்திற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது அல்லது பிற தரப்பினது வேண்டுகோளின் பேரில், ஆணைக்குழு, தனக்கு நியாயம் எனத் தென்படும் ஒரு விதத்தில், அத்தகைய மாற்றம் தொடர்பில் நிலவும் ஏதாவது பிணக்கைத் தீர்த்து வைக்கும்.

**நிபந்தனை 15 : விலக்களிக்கப்பட்ட தரப்பினது பகிர்ந்தளிப்பு முறைமைக்கு பாரபட்சமற்ற முறையில் மின்சார இணைப்பை வழங்குதல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு மின்சார இணைப்பை வழங்கும் அல்லது அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்பை நிறுத்தும் நோக்கத்திற்கான பணிகளை மேற்கொள்வதில், விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில் ;

(ஆ) விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஏதேனும் துணை நிறுவனத்திற்கு அல்லது மின்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்கு மற்றும் எவரேனும் நபருக்கு அல்லது நபர் வகுதிக்கு அல்லது வகுதிகளுக்கு இடையில்பாரபட்சம் காட்டக் கூடாது.

**நிபந்தனை 16: விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் அடிப்படை**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்வில், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்ற பின்னர், 28 நாட்களுக்குள், அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கான மின்சார இணைப்புக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்ற அடிப்படையை எடுத்துரைக்கின்றதும், அந்த மின்சார இணைப்பு தொடர்பில் பிணை வைப்புகளைத் தேவைப்படுத்துகின்றதுமானவொரு கூற்றைத் தயாரித்து ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

*2.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களை வழமையாக மீளாய்வுக்கு உட்படுத்தலாம். அதே நேரம் 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றுப் படிவத்தை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த விலக்களிப்புக் கட்டளை செல்லுபடியாகும் காலத்தில், ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் திருத்தத்திற்கும் உட்படுத்தலாம். கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் தொடர்ந்தும் சகல விதத்திலும் செவ்வையாக அமைய வேண்டும் என்பதற்காக அத்தகைய தகவல்களை மீளாய்வு செய்யலாம்.

*3.* அட்டவணை 1 இல் விவரிக்கப்பட்ட வளாகத்தினுள் ஒரு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஒரு தரப்புக்கு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் ஏதாவதொரு மின்சார விநியோகம் வழங்கப்படுமிடத்து, மின்சார விநியோகத்தை வழங்குவதில் தனக்கு நியாயமாக ஏற்பட்ட அத்தகைய அளவுக்கு, செலுத்தப்பட வேண்டிய, மின்சார விநியோகத்தை வழங்குவதில் ஏற்பட்ட ஏதாவது செலவை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்தும் தரப்பைச் செலுத்துமாறு தேவைப்படுத்தலாம்.

*4.* விலக்களிக்கப்பட்டவொரு தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, ஆககக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஏதாவதொரு தரப்பைக் கோரலாம்.

இந்த நிபந்தனையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏதாவதொரு தரப்பினால் அத்தகைய பிணை வழங்கப்படவில்லை அல்லது அத்தகைய தரப்பினால் வழங்கப்பட்ட பிணை போதுமானதாகக் காணப்படவில்லை எனுமிடத்து:-

(அ) விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு, அதாவது ஆகக்கூடியது இரண்டு மாத மின்சார நுகர்வுக் கட்டணக் கொடுப்பனவாக நியாயமான பிணையை அத்தகைய அறிவித்தலின் பின்னர் ஏழு நாட்களுக்குள் வழங்குமாறு எழுத்திலான அறிவித்தலை விடுப்பதன் மூலம் குறித்த தரப்பைக் கோரலாம் ;

(ஆ) குறித்த தரப்பு அத்தகைய பிணையை வழங்கத் தவறும் பட்சத்தில், அந்தத் தவறுகை தொடர்ந்துமிருக்கும் வரை, விலக்களிக்கப்பட்ட தரப்பு மின்சார இணைப்பை வழங்க மறுக்கலாம் அல்லது மின்சார விநியோகத்தைத் துண்டிக்கலாம்;

(இ) விலக்களிக்கப்பட்டவொரு தரப்புக்கு, இந்த நிபந்தனைக்கு இணங்க பிணை வழியில் ஏதாவதொரு பணத் தொகை வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பணத் தொகை விலக்களிக்கப்பட்ட தரப்பின் கைவசமிருக்கும் காலம் தொடர்பில், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அவ்வப்பொழுது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பினால் நிர்ணயிக்கப் படலாமெனும் அத்தகைய வீதத்தில் அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பணத் தொகை மீதான வட்டியைச் செலுத்த வேண்டும்.

*5.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, 1 ஆம் பந்திக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட கூற்றினதும் இன்னும் 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் ஒவ்வொரு திருத்தத்தினதும் பிரதியை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு திருத்தத்திற்கும் ஆணைக் குழுவின் அங்கீகாரம் அவசியம் என்பதுடன், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வரை அத்தகைய திருத்தம் செயல்வலுப் பெற மாட்டாது.

*6.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, அத்தகைய கூற்றின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் நபருக்கு, 1 ஆம் பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கூற்றின் அல்லது (விடயம் இவ்வாறிருக்கலாம் எனும் நிலையில்) அத்தகைய பந்திக்கு இணங்க ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2 ஆம் பந்திக்கு அமைவான அத்தகைய கூற்றின் புதிய திருத்தத்தின் பிரதியை வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.

*7.* விலக்களிக்கப்பட்ட தரப்பு, 4 ஆம் பந்திக்கு இணங்க தான் வழங்கிய அல்லது அனுப்பி வைத்த ஏதாவதொரு கூற்றின் பிரதி தொடர்பில், இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு அவ்வப்பொழுது வெளியிடும் வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் தொகையை விஞ்சாத, அத்தகையதொரு கூற்றின் பிரதியை வழங்கும் விலக்களிக்கப்பட்ட தரப்பினது நியாயமான ஆகுசெலவை ஈடுசெய்யக்கூடியவொரு கட்டணத் தொகையை அறவிடலாம்.

**நிபந்தனை 17: மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுக்கும், மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் தகவல்களை வழங்குதல்**

*1.* விலக்களிக்கப்பட்ட தரப்பு:

(அ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையில் இயற்கையாகவே நிலவுகின்ற தொழில்நுட்பமும் தொழில்நுட்பம் சாராததுமான இழப்பீடுகள் ;

(ஆ) அந்தத் தரப்பினது மின்சார பகிர்ந்தளிப்பு முறைமைக்கு இணைக்கபட்டிருக்கின்ற மின்பிறப்பாக்கிகளின் (ஏதுமிருப்பின்) மூலம் வழங்கப்படுகின்ற மின்சக்தி ;

(இ) புதிதாக வழங்கப்படும் மின்சார இணைப்புகளின் தாக்கம் ;

(ஈ) கேள்வி முகாமைத்துவத்தின் தாக்கம் ;

(உ) வித்தியாசமான நுகர்வோர் வகுதிகளினது மின்பளு சிறப்பம்சங்கள்

ஆகிய விபரங்கள் உள்ளிட்ட, மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்தும் அத்தகைய தேவைப்பாட்டு கேள்விசார் குறிப்பிலிருந்தும் வரும் தனது சக்திக்கான எதிர்காலத் தேவைப்பாட்டை எதிர்வுகூறப் போதிய பதிவுகளைப் பேண வேண்டும்.

2. முழு மின்சார முறைமையினதும் வினைத்திறன் வாய்ந்த இயக்கப்பாடு, ஒருங்கிணைந்த அபிவிருத்தி, உள்ளக—இயக்கத்திறன் என்பவற்றைப் பேணுவதற்கும், அவற்றை உறுதிசெய்து கொள்வதற்கும், மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பினாலும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளினாலும் நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய தகவல்கள் அல்லது எதிர்வுகூறல்கள் என்பன நியாயமான விதத்தில் தேவைப்படுத்தப்படலாமெனும் அத்தகைய காலங்களிலும் அத்தகைய விதத்திலும் மின்சார செலுத்துகைக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புக்கும், மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தரப்புகளுக்கும் அந்தத் தகவல்களை அல்லது அந்த எதிர்வுகூறல்களை விலக்களிக்கப்பட்ட தரப்பு வழங்க வேண்டும்.

3. இந்த நிபந்தனையில்:

| | |
|---|---|
| "முழு முறைமைகள்" | முழு முறைமைகள் என்பது, மின்சார செலுத்துகை முறைமை, அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை மற்றும் ஒன்றாகக்கொள்ளப்படும் மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய சகல தரப்புகளினதும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை யாவும் எனப் பொருள்படும். |

**பாகம் IV மின்சார விநியோகம் தொடர்பான விஷேட நிபந்தனைகள்**

**நிபந்தனை 18: மின்சார விநியோகத்தில் நிகழும் பாரபட்சத்தைத் தடுத்தல்**

1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் அல்லது மின்சார விநியோகம் தொடர்பில் விதிமுறைகளை விதிப்பதில்:

(அ) எவரேனும் நபருக்கு அல்லது நபர்கள் வகுதிக்கு பாரபட்சம் காட்டவும் ;

(ஆ) எவரேனும் நபர்களுக்கு அல்லது நபர்கள் வகுதிகளுக்கு இடையில் பாரபட்சத்தைப் பிரயோகிக்கவும் ;

(இ) நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகளை விதிக்கவும்,

கூடாது.

2. இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, குறித்த விதிமுறைகளின் பேரில் நுகர்வோருக்கு விநியோக்கின்ற மின்சாரத்திலிருந்து வரும் வருமானம், அந்த மின்சார விநியோகத்தின் ஆகுசெலவை கணிசமானளவு விஞ்சுமாயின், அந்த விதிமுறைகள், நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற விதிமுறைகள் எனக் கருதப்படும்.

3. இந்த நிபந்தனையின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு, பிரச்சினையிலுள்ள நுகர்வோருக்கு மின்சாரத்தை விநியோகிப்பதன் பயனாக ஏற்பட்ட ஆகுசெலவுகளை நியாயமான விதத்தில் உள்ளீர்க்காத கட்டணங்களுடன் அத்தகைய விதிமுறைகள் கூட்டிணைகின்றனவா என்பது தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தி, நியாயமற்ற விதத்தில் சுமைகளைத் திணிக்கின்ற ஏதேனும் பிரச்சினைக்குரிய விடயத்தைத் தீர்மானிக்கும்.

**4. இந்த நிபந்தனையில் :**

| | |
|---|---|
| "விதிமுறைகள்" | விதிமுறைகள் என்பது அந்த மின்சார விநியோக மதிப்பீட்டை கணிசமானளவு பாதிக்கின்ற விலைக்கான விதிமுறைகள் உள்ளிட்ட மின்சாரம் விநியோரிக்கப்படுகின்றமை அல்லது வழங்கப்படுகின்றமை தொடர்பான சகல விதிமுறைகளும் எனப் பொருள்படும். |

**நிபந்தனை 19: மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணை**

*1. விலக்களிக்கப்பட்ட தரப்பு, முடியுமான வரை, ஏதாவதொரு நிகழ்விலும், இந்த விலக்களிப்பு செயல்வலுப் பெற்றதன் பின்னரும், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு வெளியிடப்படும் வழிகாட்டல்களில் ஆணைக்குழு குறிப்பீடு செய்யலாமெனும் திகதி கழிய முன்னரும், இன்னும் அதன் பின்னரும் காலத்திற்குக் காலம், நுகர்வோருக்கான மின்சார விநியோகங்கள் தொடர்பான ஒரு வரித்தீர்வை அட்டவணையைத் தயாரித்து வழங்க வேண்டும்.*

*2. இந்த வரித்தீர்வை அட்டவணையானது:*

*(அ) ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படுமொரு அமைப்பிலும்,*

*(ஆ) யாரேனுமொரு நுகர்வாளரை மின்சாரக் கொள்வனவுகள் தொடர்பில் செலுத்தக் கடமையாகக்கூடிய கட்டணங்களின் நியாயமானவொரு மதிப்பீட்டை மேற்கொள்ளும் வகையில் இயலச் செய்வதற்கு அவசியமெனும் விபரங்களை உள்ளடக்கியதாகவும்,*

*(இ) குறிப்பீடு செய்யப்பட்ட பகல், இரவு நேரங்களில், வார நாட்களில், ஆண்டு காலங்களில் மின்சாரத்தை வழங்குவதிலான விலக்களிக்கப்பட்ட தரப்பினது ஆகுசெலவுகளை ஈடுசெய்யும் வகையிலும், அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பை அறவிட அனுமதிக்கின்ற, இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை வினைத் திறன் வாய்ந்தவொரு அடிப்படையில் நிறைவேற்றுவதிலான சகல நியாயமான ஆகுசெலவுகளையும் உள்ளீர்க்கும் வகையிலும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு முறையியலுக்கு இணங்கவும்,*

*(ஈ) தனித்தனியாக:*

(i) *விலக்களிக்கப்பட்ட தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையினது பாவனை தொடர்பான வரித்தீர்வை,*

(ii) *முன்கூட்டிய அல்லது அவசரதேவை மின்பிறப்பாக்கிச் செயற்பாட்டு பராமரிப்பு ஆகுசெலவு ;*

(iii) *மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை இயக்க முகாமைத்துவ பராமரிப்பு ஆகுசெலவு*

*ஆகிய ஆக்கக்கூறுகளைக் கண்டறியக்கூடிய வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.*

*3. விலக்களிக்கப்பட்ட தரப்பினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வரித்தீர்வைகளின் சிக்கல் வாய்ந்த தன்மையின் அல்லது நுகர்வாளர்களின் புரிந்துகொள்ளும் அறிவாற்றலின் நிமித்தம் இலகுவான விளக்கக் கூற்றுக்கள் தேவைப்படுகின்றன என ஆணைக்குழு கருதுமிடத்து, அத்தகைய விளக்கக் கூற்றுக்களைத் தயாரித்து, அதன் பின்னர் அந்த விளக்கக் கூற்றுக்களை வரித்தீர்வை அட்டவணையுடன் சேர்த்துப் பிரசுரிக்குமாறு ஆணைக்குழு விலக்களிக்கப்பட்ட தரப்பைப் பணிக்கலாம்.*

*4. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்திற்கான ஆணைக்குழுவினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*5. விலக்களிக்கப்பட்ட தரப்பு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தின் (அவ்வப்பொழு திருத்தப்பட்டவாறான) ஒரு பிரதியை, அந்தத் திட்டத்தை ஏதாவது பிற நபருக்குக் கிடைக்கச் செய்வதற்கு முன்னர், 14 நாட்கள் கழிய முன்னர், ஆணைக்குழுவுக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.*

*6. விலக்களிக்கப்பட்ட தரப்பு, ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையைப் பிரசுரிக்க வேண்டும்.*

*7. விலக்களிக்கப்பட்ட தரப்பு, (8 ஆம் பந்திக்கு அமைய) மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வைத் திட்டத்தினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை, அதனை அவசியம் எனக் கோரும் யாரேனும் நபருக்கு வழங்க அல்லது அனுப்பி வைக்க வேண்டும்.*

*8. விலக்களிக்கப்பட்ட தரப்பு, 7 ஆம் பந்திக்கு இணங்க, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையினதும் (அவ்வப்பொழுது திருத்தப்படுகின்ற) ஏதேனும் விளக்கக் கூற்றினதும் ஏதாவதொரு பிரதியை வழங்குவது அல்லது அனுப்பி வைப்பது தொடர்பில், ஆணைக்குழுவினால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிகாட்டல்களில், இந்த வாசகத்தின் நோக்கங்களுக்காக தற்காலிகமாகக் குறிப்பீடு செய்யப்படுகின்ற தொகையை விஞ்சாத ஒரு கட்டணத் தொகையை அறவிடலாம்.*

*9. வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய விதத்தில் அல்லது அந்த வழி காட்டல்களில் குறிப்பீடு செய்யப்படலாம் எனும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்காக மின்சார விநியோகம் தொடர்பான குறித்த வரித்தீர்வை அட்டவணையின் அமைப்பை மாற்றுமாறு விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு ஆணைக்குழு பணிப்புரைகளை விடுக்கலாம் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்பு, உடனடியாக ஏதேனும் அத்தகைய பணிப்புரைகளை அனுசரித்து இயைந்தொழுக வேண்டும்.*

*10. ஆணைக்குழு, மின்சார விநியோகம் தொடர்பான வரித்தீர்வை அட்டவணையின் மீளாய்வு பற்றிய ஒரு நடைமுறையைக் குறிப்பீடு செய்யலாம்.*

***நிபந்தனை 20: மின்சார பகிர்ந்தளிப்பும் விநியோகமும் தொடர்பான வரித்தீர்வை ஒப்பந்தம்***

*1. விலக்களிக்கப்பட்ட தரப்பு (கீழ்காணும் 3 ஆம் பந்திக்கும், 14 ஆம் நிபந்தனைக்கும் அமைய), ஒரு மின்சார நுகர்வாளராக ஆகுவதற்கு எண்ணுகின்ற எவரேனுமொரு மின்சார நுகர்வாளருடன் அல்லது நபருடன் ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாக வேண்டும். விலக்களிக்கப்பட்ட தரப்பு அவ்வாறு உள்ளாகும் அந்த ஒப்பந்தமானது, அத்தகைய மின்சார விநியோகங்கள் தொடர்பில் ஆக்கப்பட வேண்டிய கட்டணங்களுக்கும், மேலே கூறப்பட்ட 19 ஆம் நிபந்தனையில் நிர்ணயிக்கப்பட்ட வரித்தீர்வை அட்டவணைக்கான குறிப்பாக அமைய வேண்டிய அத்தகையதொரு விதத்தில் முன்வைக்கப்பட வேண்டிய அத்தகைய கட்டணங்களுக்குமான ஏற்பாடுகளை வழங்குவதாகவும் அமைய வேண்டும்.*

*2. குறித்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை வகுத்தமைக்கும் நோக்கம் தொடர்பில் விலக்களிக்கப்பட்ட தரப்பு நியாயமானளவில் தேவைப்படுத்தலாம் எனும் சகல தகவல்களும் உள்ளடங்குகின்ற ஒரு விண்ணப்பம், விலக்களிக்கப்பட்ட தரப்பினால் கிடைக்கப் பெற்று 2 வாரங்கள் கழிய முன்னர், ஏதாவதொரு நிகழ்வில் முடியுமான வரை சாத்தியமான விதத்தில் (ஒரு நீண்ட காலப் பகுதியை ஆணைக்குழு வழங்குகின்றவிடத்து) 1 ஆம் பந்திக்கு இணங்க, குறித்த விலக்களிக்கப்பட்ட தரப்பு ஒப்பந்தங்களுக்கான விதிமுறைகளை முன்வைக்க வேண்டும்.*

*3. இந்த நிபந்தனைக்கு இணங்க ஏதாவதொரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கு அல்லது உள்ளாக முனைவதற்கு விலக்களிக்கப்பட்ட தரப்பு கடமைப்படுத்தப்படமாட்டாது. எனினும், குறித்த விலக்களிக்கப்பட்ட தரப்பு, அவ்வாறு அத்தகைய ஒப்பந்தத்திற்குள்ளாகுமாயின் அல்லது முனையுமாயின்:*

*(அ) குறித்த சட்டத்தின் கீழுள்ள தனது கடமைகளை நிறைவேற்றத் தவறிய, அல்லது*

*(ஆ) குறித்த சட்டத்தின் அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பில் ஏற்புடைய பாதுகாப்பு அல்லது நியமங்கள் தொடர்பான ஏதாவது பிற சட்டவாக்கத்தின் ஏதாவது ஒழுங்குவிதிகளை மீறிய, அல்லது*

*(இ) இந்த விலக்களிப்புக் கட்டளையின் ஏதாவது நிபந்தனைகளை மீறிய, அல்லது*

*(ஈ) அனுமதிக்கப்பட்ட ஏதாவது தொழில்நுட்ப இயக்க விதிக்கோவைகளை மீறிய தரப்பாகக் கருதப்படும்.*

*4. 25 ஆம் நிபந்தனைக்கு இணங்க உள்ளான ஒப்பந்தம் தொடர்பான சரியான வாசகங்கள் உள்ளடங்கினால் இந்த நிபந்தனைக்கு இணங்க ஒரு ஒப்பந்தத்திற்குள்ளாகுவதற்கான விலக்களிக்கப்பட்ட தரப்பினது கடப்பாடு திருப்தி கொள்ளப்படும்.*

***நிபந்தனை 21 : வளாகங்களுக்குள் பிரவேசித்தல்***

*1. இந்த விலக்களிப்புக் கட்டளையின் கீழ் ஏதாவது வளாகங்களுக்குள் பிரவேசிப்பது பேரில் விலக்களிக்கப்பட்ட தரப்பு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் அது குறித்து அறிவித்தல்களை விடுக்க வேண்டும் என்பதுடன், விலக்களிக்கப்பட்ட தரப்புக்கும் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கும்:-*

(i) *மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயல்களின் தன்மையையும் அளவையும் சாத்தியமான விதத்தில் முழுமையாகவும் செவ்வையாகவும் குறிப்பிட்டு விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உத்தேச பிரவேசம் பற்றிய மூன்று நாள் அறிவித்தல் விடுக்கப்படாத ;*

(ii) *அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், விலக்களிக்கப்பட்ட தரப்பின் அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் தனக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கான சான்று முன்வைக்கப்படாத ;*

(iii) *குறித்த பிரவேசத்தினால் ஏற்படும் ஏதாவது இடையூறு, பாங்களிப்பு அல்லது பாதிப்பு தொடர்பில் காணியின் அல்லது வளாகத்தின் உரிமையாளருக்கு நியாயமான நஷ்டஈடு செலுத்தப்படாத*

*வரையில் வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கு உரிமை கிடையாது.*

*2. 1 (அ) என்ற உப பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு அறிவித்தல் விடுப்பு நோக்கத்திற்காக அதன் சார்பில் எழுத்தில் அந்த அறிவித்தலை விடுக்கும் விலக்களிக்கப்பட்ட தரப்புக்கு அல்லது விலக்களிக்கப்பட்ட தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபருக்கு குறித்த காணியினுள் பிரவேசிப்பதற்கு உரித்துண்டு.*

*3*. இந்த விடயத்தினால் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத்தத்துவங்களை எவரேனுமொரு நபர் பிரயோகிக்குமிடத்து, எழுத்தில் அந்த நபரினால் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பு அல்லது, விலக்களிக்கப்பட்ட தரப்பு அத்தகைய பிரவேசத்தின் விளைவாக வளாகங்களுக்கு ஏற்பட்ட ஏதாவது பாதிப்பை ஈடுசெய்ய வேண்டும்.

*4*. இந்த விலக்களிப்புக் கட்டளையினால் அல்லது அதன் கீழ் உரித்தளிக்கப்பட்ட ஏதாவது அதிகாரத் தத்துவத்தைக் கொண்டு வளாகத்தினுள் பிரவேசிப்பதனால் அந்த வளாகத்திற்கு அல்லது ஏதேனும் அசையும் ஆதனங்களுக்கு, வளாகத்தில் அல்லது அசையும் ஆதனங்களில் அக்கறையுடைய எவரேனும் நபருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், எந்தத் தரப்பின் சார்பாக அதிகாரத்தத்துவம் பிரயோகிக்கப்படுகின்றதோ அதாவது அந்த விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து அத்தகைய பாதிப்புக்கான நஷ்டஈட்டைக் கோரி அறவிடலாம். அத்தகையதொரு அதிகாரத்தத்துவத்தைப் பிரயோகிப்பதன் விளைவாக நபர் ஒருவருக்கு அவரது ஏதேனும் வளாகத்தை அனுபவிக்கும் உரிமைக்கு அல்லது அசையும் ஆதனங்களுக்கு இடையூறு ஏற்படுமிடத்து, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அந்த இடையூறு தொடர்பில் விலக்களிக்கப்பட்ட தரப்பிடமிருந்து நியாயமான நஷ்டஈட்டை அந்த நபருக்கு கோரி அறவிட்டுக் கொள்ளலாம்.

### அட்டவணை 1

சட்டத்தரணியும், பிரசித்திபெற்ற நொத்தாரிசும், சத்தியப்பிரமாண ஆணையாளருமான எம்.ஜி அருணி பிரதீப் லக்மாலி (L.L.B. கொழும்பு) என்பவரினால் *2002.09.06* ஆந் திகதி சான்றுபடுத்தப்பட்ட P. M. / H. D. *28.08.1998* ஆம் இலக்க நகரத் திட்டத்தின் பிரகாரம் பெலவத்த, புத்தள என்ற இடத்தில் அமைந்துள்ள பெலவத்த சுகர் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவன வளாகம்.

*5- 626/4*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.